Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 9 மன்மத ௵ தை மாதம் 30 திகதி 12-2-56 ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் பிறை 29 இதழ் 37

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

ஐக்கிய முன்னணி என்பது யு. என். பி. வைத்த பொறி

சதியாலோசனையில் சிக்க தமிழரசுக் கட்சி தயாரில்லை

ஏரிக்கரைப் பத்திரிகைகளின் விஷமத்தனமான பொய்ப் பிரசாரம்

(சுதந்திரன் நிருபர்)

ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த ஐக்கிய முன்னணிப் பேச்சுவார்த்தைகள் கடந்த புதன் கிழமை இரவு முன்னைநாள் நீதியரசர் திரு வி. நாகலிங்கத்தின் வாசஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முறிவுற்றன.

ஐக்கிய முன்னணிப் பேச்சுவார்த்தைகளைப்பற்றி ஆங்கில-தமிழ்த் தினசரிகள் வெவ்வேறுவிதமான கருத்துக்களையும், முரண்பாடான செய்திகளையும் வெளியிட்டு வந்ததை தமிழ் மக்கள் அவதானித்து வந்திருப்பார்கள். ஏரிக்கரைப் பத்திரிகைகள்-விசேஷமாக தினகரன்-ஐக்கிய முன்னணி முறிவுற்றமைக்கு மூலகாரணம் சமஷ்டி கட்சிதான் என்றும், திரு செல்வநாயகத்திற்கு பாராளுமன்றத்தில் இடம் பிடிக்கும் விஷயத்தில்தான் ஐக்கிய முன்னணி முறிவு கண்டதென்று விஷமப் பிரசாரம் நடத்தி வருகிறது. ஐக்கிய முன்னணிபற்றிய செய்திகளை கொழும்புப் பதிப்பில் ஒருவிதமாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் போகும் வெளியூர்ப் பதிப்பில் இன்னொருவிதமாகவும் வெளியிடுவதுதான் தினகரன் சமீபத்தில் கையாண்டு வரும் தந்திரமாகும். ஐக்கிய முன்னணியை எப்படியாவது அமைத்துவிட வேண்டும் என்பதிலும் திரு செல்வநாயகத்தையும், தமிழ் அரசுக் கட்சியையும் ஒழித்துவிட வேண்டும் என்பதிலும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் காட்டும் அளவுக்கு மீறிய அக்கறை, ஐக்கிய முன்னணி என்பது ஆளுங் கட்சியினரின் ஏவல் பிசாசு தான் என்பதை நிரூபித்துவிட்டது.

ஐக்கிய முன்னணி முறிவுற்றதற்குள்ள முக்கிய காரணங்கள் யாவை என்று நமது நிருபர் தமிழ் அரசுக் கட்சிப் பொதுச் செயலாளரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைக் கேட்டபோது ''முழு விவரங்களையும் ஒரு விளக்கமான அறிக்கையாகப் பத்திரிகைகளுக்குச் சமர்ப்பிப்போம். அப்போதுதான் தமிழ் அரசுக் கட்சியின் உறுதியான நிலையும் ஐக்கிய முன்னணியினரின் தேர்தல் திருவிளையாடல் திட்டங்களும் அம்பலமாகும்'' என்று கூறினார். இந்த அறிக்கை அடுத்த வாரச் சுதந்திரனில் இடம் பெறும்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரமுகர் ஐக்கிய முன்னணியைப்பற்றி சுதந்திரன் நிருபரிடம் கூறியதாவது:

''ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய தமிழ் பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஐக்கிய முன்னணி என்பதொன்றை உருவாக்க எடுத்த முயற்சிகள், தமிழரசுக் கட்சியைப் பொறியில் சிக்கவைத்து நசுக்கி அழிக்க எடுத்துவந்த பிரயத்தனங்கள் யாவும் வியர்த்தமாகி விட்டன. கடந்த புதன்கிழமை இரவு திரு. வி. நாகலிங்கம் இல்லத்தில் கூடிய தலைவர்கள் ஐக்கியமாவது ஒற்றுமையாவது காணப்படவில்லை. தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்படுவதாயின் அடிப்படையில் யாவருக்கும் பொதுவான ஓர் கொள்கை, ஓர் நோக்கம் அல்லது குறிக்கோள் இருக்க வேண்டும். ஐ. தே. க.யிலிருந்து வெளியேறிய தமிழ்த் தலைவர்களிடையே பொதுக் கொள்கை எப்பொழுதுமே இருந்ததில்லை. இந்நாட்டிலே தமிழ்ப் பாஷைக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்தினால் மக்களிடையே நிலவும் பரபரப்பைக்கண்டு பயந்த இவர்கள் தத்தம் பாராளுமன்றப் பதவிகளைப் பாதுகாக்க வழிவகை தேடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியது. மக்களிடையே கிளம்பிய உணர்ச்சிவேகத்தினால் தமிழரசுக்கட்சி பலனுறுவதையுங்கண்டார்கள். ஐ. தே. க. யிலிருந்து புறக்கணிக்கப்பட்ட இவர்கள் புகலிடம் தேடி நின்றார்கள். தமிழரசுக்கட்சியை வளரவிட்டால் தமது பாராளுமன்ற ஆசனங்களுக்கே ஆபத்து ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு பரவைக் கடல் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சுதந்திரப் பொம்மையை படத்தில் காண்க.

களனி மகாநாடு முடிந்ததும் தமிழ் கையாட்களுடன் அந்தரங்க கூட்டம்!

கொத்தலாவலை விசுவாசிகளை சேர் உக்வத்தை சந்திப்பார்?

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மகாநாடு முடிவடைந்ததும், அக்கட்சியின் பொதுச் செயலாளர் சேர் உக்வத்தை ஜெயசுந்தரா தமிழ்ப் பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் இரகசியமான ஒரு மகாநாடு நடத்தவிருக்கிறார் என்று ஒரு அந்தரங்கச் செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

இந்த மகாநாடு தமிழ்த் தொகுதிகளில் யு. என். பி. கடைப்பிடிக்க வேண்டிய தேர்தல் தந்திரத்தை விவாதிக்கும் என்று தெரிகிறது.

தமிழ்ப் பேசும் தொகுதிகளுக்கு மறைமுகமாக தான் நிறுத்தும் அபேட்சகர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட சேவையின் அடிப்படையில் ஆதரவு திரட்டுமாறு யு. என். பி. தனது ஆதரவாளர்களுக்கு உத்தரவிடும் என்று நம்பப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு விசுவாசமுள்ள தமிழ் நபர்கள் யு. என். பியின் ஆதரவைப் பெறலாம் என்றும், இந்த 'உதவி' பரம இரகசியமாக அளிக்கப்படும் என்றும் தெரிகிறது. அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறு நாடகம் நடத்துவதற்கு முன்பதாக தாம் யு. என். பி. நிதிக்காக சேர்த்த லட்சக்கணக்கான ரூபாய்களை ஒப்படைத்த இரு நபர்களை தமது கருவிகளாக உபயோகிக்கலாம் என்று யு. என். பி. தலைமைப்பீடம் நம்புகிறது என்பது ஆளும் கட்சி வட்டாரத்தில் பகிரங்க இரகசியம்.

இதுவரை யு. என். பி. தேர்தல் நிதிக்காக சேர்க்கப்பட்டுள்ள பணம் மொத்தம் 15 லட்சம் என்று யூகிக்கப்படுகிறது.

இந்த நிதியில் பெருந்தொகை இன்றுவரை வெளிவராத யு. என். பியின் ''பச்சைப் புத்தக''த்திற்கு விளம்பரமாகப் பெற்ற பணம் என்று தெரிகிறது.

மேற்கூறிய பெருந்தொகைப் பணம் யு. என். பி. நிதிக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட கம்பனிகள் வருமான வரி கட்ட நேர்ந்

(9-ம் பக்கம் பார்க்க)

பெப்ரவரி 20 உ ஹர்த்தால்!

அனைவரும் அனுஷ்டிக்குமாறு அறிக்கை

இம் மாதம் 17, 18, 19ந் தேதிகளில் களனியில் நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மகாநாட்டில் இலங்கையின் ஆட்சி மொழி சிங்களம் மாத்திரமே என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும். இதை ஆட்சேபிக்கும் முகமாக இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் ஒரு சாத்வீக ஹர்த்தாலை நடத்த வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

இதை ஒட்டி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஹர்த்தால் செயற்குழு வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:

''மானமுள்ள தமிழ்ப் பேசும் மக்களே! இந்நாட்டில் தமிழ் மொழி தொன்றுதொட்டு உரிமையோடு நிலவி வந்திருக்கின்றது. ஆனால் இம் மாதம் களனியில் கூடும் ஆளும் கட்சியின் ஆண்டுக் கூட்டத்தில் சிங்களம் மாத்திரமே இத்தீவின் ஒரு மொழி என்று தீர்க்கப் போகிறார்கள். உணர்ச்சியற்ற தமிழன் தன் தாய் மொழியை புறக்கணித்தாலும் தாயை உதைத்தாலும் ஊமையாக வாளாவிருப்பான் என்று சிங்களவர் கருதுகின்றனர். நம் அன்னைக்கு ஏற்பட்ட அவமானத்தை தீர்க்க நாம் முற்பட வேண்டாமா?

''இம் மாதம் 20ந் தேதியை ஒரு துக்க தினமாக நிலைநாட்டுவதற்கும், ஒரு சாத்வீக ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டுவதற்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். 20ந் தேதி தமிழ் மக்கள் தெருக்களில் நடமாடாது வீட்டிலிருந்து உண்ணாவிரதம் அனுஷ்டிக்க வேண்டும். வீடுகளில் கறுப்புக் கொடி பறக்கவிட வேண்டும். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பக் கூடாது. வியாபாரிகள், சந்தை, வியாபாரஸ்தலம், முதலியவற்றிற்குப் போகாமல் கடை அடைக்க வேண்டும்.

''தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும். பஸ், உடமையாளர்கள் அன்று பஸ் போக்குவரத்தை நிறுத்தவேண்டும். ஆசிரியர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லக் கூடாது.

''முக்கிய கவனிப்பு: அரசாங்க ஊழியர்கள் மேற்படி திட்டத்தில் உண்ணாவிரதத்தைத்தவிர வேறெந்த அம்சத்தையும் அனுஷ்டிக்கத் தேவையில்லை.

''கிளர்ச்சி ஏற்படுத்தக்கூடிய ஊர்வலங்களும் தவிர்க்கப்படவேண்டும்.

''தமிழ்பேசும் மக்களின் மானத்தைக் காக்க இந்த ஹர்த்தாலில் தயங்காது ஒற்றுமையாக, பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.''

தொய்வு

ஓயாத இருமல், ஈளை-தொய்வு, (Asthma) சளிக்கட்டு, மூச்சுத் திணறல், பீனிசம், கக்குவான், மார்புவலி, தொண்டைரணம் போன்ற கொடிய நோய்களுக்கென்றே பிரான்சில் (France) தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது இந்த அபூர்வ ஔஷதம். இரவு பகல் நித்திரையின்றி துன்புற்றோர் பலர் பூரண குணமடைந்திருக்கின்றனர் இந்த மருந்தினால்.

எங்கும் கிடைக்கும்.

உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

Richelet's Pectoral

கேட்லாச் இனும்
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

ஓர் இனம் இன்னோர் இனத்தை விழுங்குவதா?

புத்த பக்தர்கள் காட்டும் இனவெறி

கருணை வள்ளல் கண்ட 'மைத்திரிய' தர்மம் அவரது சீஷ்யர் கூட்டத்தாலே அழிக்கப்படுகிறது

—எஸ். வி. எல். செல்வநாயகம்—

ஒவ்வொரு இனத்திற்கும் பாஷைஅத்தியாவசியமானது; பாஷை இன்றேல் இனமில்லை. எனவே ஒவ்வொரு இனமும் தத்தம் பாஷையை தங்கள் கண்மணி போன்று பாதுகாக்க வேண்டியது அவசியம்;

ஆங்கிலேயருக்கு ஆங்கிலேயம் எப்படி அருமையான மொழியோ, சிங்களவருக்குச் சிங்களமும், தமிழருக்குத் தமிழும் அருமையான மொழிகள்.

ஓர் இனம் இன்னொரு இனத்தை அடக்கியாள்வது கொடிய செயல். அதனினும் கொடிது வேறெதும் இல்லை; ஓர் பெரும்பான்மை இனம் மற்றொரு சிறுபான்மை இனத்தை அடக்கியொடுக்கி ஆள்வது தர்மமாகாது. இது உலக இயற்கைக்கு முரணானது. சுதந்திர நாடுகளில் இம்முறை அடுக்கவே அடுக்காது.

இலங்கை பண்டுதொட்டு இரு மொழிகளால் பண்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டபூமி. இங்கே தொன்றுதொட்டு தமிழும் சிங்களமும் மக்கள் மொழிகளாக நிலவி வந்திருக்கிறது. மேலும் இவ்விரு இனத்தவர்களும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

ஆனால் இன்று புத்தரின் பக்தர்களான—இல்லை, புத்தரின் பக்தர்கள் என்று கூறிக்கொள்ளும் பௌத்த பிக்குகள் சிறுபான்மை இனத்தவரின் பாஷையாகிய தமிழிடம் காட்டிவரும் துவேஷம் அத்துமீறியுள்ளது. கருணாமூர்த்தியான புத்தர் அன்பே உருவானவர்; கருணையே கண்ணெனக் கொண்டு போற்றியவர். எவ்வுயிர்க்கும் எவ்விடரும் இழைக்கக்கூடாது என்ற தன் வாழ்வில் தானே நடந்துகாட்டினார்; தன்னால் பிற எவ்வுயிரும் அவஸ்தைப் படக்கூடாது, வேதனை அனுபவிக்கக்கூடாது என்பது அன்னாரதுவேணவா-பேரார்வம். ஓர் ஆட்டுக்குட்டியைக் கொலை செய்யும் பொருட்டு மக்கள் கொண்டு சென்ற பொழுது புத்தர் அவர்களை அண்டி அறிவுரைகள் கூறினார்:—

''யாரும் விரும்புவ
தின்னுயிராம்—அவர்
என்றுமே காப்பதும்
அன்னதேயாம்;
பாரில் எறும்பும்
உயிர் பிழைத்துப்—படும்
பாடு முழுதும் அறிந்திலரோ!
''காடடும் கருணை
உடையவரே—என்றும்
கண்ணிய வாழ்வை
உடையவராம்;
வாட்டும் உலகில்
வருந்திடுவார்—இந்த
மர்மம் அறியாத மூடரையா!
''நேரிய உள்ளம்
இரங்கிடுமேல்—இந்த
நீர் நிலம் முற்றுமே
ஆண்டிடலாம்''

என்று கருணைபற்றிப் போதித்தார்கள். அத்தகை புனித புத்தரின் பக்தர்களான பௌத்த பிக்குகள் இன்று ஆவேசம் கொண்டு, தாங்கள்தான் வாழவேண்டும், தம் இனந்தான் செழிக்க வேண்டும், தம் மொழி மட்டும் தான் அரசோச்ச வேண்டும் என்று ஆர்ப்பரிக்கின்றனர். அவர்கள் மொழி வளர்ச்சிக்காக எம் மொழி தளர்ச்சியுறுவதா?

அவர்களது இனம், மொழி, சமயம் வாழவேண்டும்; உண்மை. ஆனால் அதன் வளர்ச்சியின் பொருட்டு இன்னொரு இனத்தை, மொழியை, பண்பாட்டை, கலாச்சாரத்தை அடக்கி ஒடுக்குவதா? இஃது தான் புத்த தர்மமா? அயலானை நடத்தும் விதம் இது தானா?

தாங்கள்தான் வாழவேண்டும், தங்கள் மொழிதான் தழைக்கவேண்டும், மற்றவர்களின் மொழி மண்ணோடு மண்ணாய் மாண்டொழிய வேண்டும் என்று கதறுகிறார்கள் இன்றைய பௌத்த பிக்குகள். இது சிறிதும் ஒவ்வாதது. தம் பாஷை மட்டும் தான் அரசாங்க மொழியாக இருக்க வேண்டும் என்று சிறிது காலமாக பௌத்த பிக்குகள் காட்டிவரும் கிளர்ச்சி கட்டற்று மீறியுள்ளது. இதனால் இலங்கையில் நடக்கும் அனியாயங்களும் அக்கிரமங்களும் சொல்லுந்தரமல்ல. மேலும் அவர்கள் தமிழரையும், தமிழையும் இழிவுபடுத்தியும் பேசத் தொடங்கி விட்டார்கள். உதாரணமாக கண்டி முற்றவெளியில் சீலவன்ச தேரோ பேசியது முற்றும் இனத்துவேஷமான பேச்சுக்கள். 'சிங்கள இனம்தான் உலகிலேயே மிக உன்னதமான இனம்'' என்று கூறியதில் எவ்வளவு கர்வம்—அகம்பாவம் தொனிக்கிறது. புத்த தர்மத்திற்கு இது அடுக்குமா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்;

''சிங்களப் பகுதிகளில் சிங்களமும், தமிழ்ப் பகுதிகளில் தமிழும் ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்; எங்களுக்கு இது தேவையில்லை நாடு முழுவதிலும் சிங்களமே அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்'' என்று கூறியதில், பிறரில் அக்கரை இல்லாத்தன்மை, பிறர் அழியவேண்டும் என்ற தன்னலமான இழிவு குணம் எவ்வளவு தெளிவாகப் புலப்படுகிறது புத்ததர்மத்துக்கு, புத்த பண்பாட்டிற்கு இது எவ்விதம் அமையுமோ?

''பறை ஜாதித் தமிழருக்கு இடம் கொடுத்தால் எமது சமுதாயம் இடம் தெரியாமல் அழிந்து போகும்'' இஃதும் புத்த பக்தரின் பக்குவ வாயில் நின்று பரிணமித்த பண்பான மொழி. புத்த தர்மத்தை கண்ணியமாகக் காக்கும் கண்ணியவான்களின் கர்ணாமிர்த மொழி. இன்னும் ''நாலு கோடித் தமிழர்களைக் கொல்லும் பாவம் ஒரு சிங்களவனைக் கொலை செய்யும் பாவத்திற்குக்கூட ஈடாகாது'' என்கிறார் இந்த புத்த பக்தர். இவர்தான் கருணையே உருவெடுத்த புத்தரின் அடியார், வழிவந்த குரு, பக்தர்.

எங்கள் பாஷைமீது எமக்கும் அன்புண்டு, பக்தி உண்டு, தீராத ஆர்வம் உண்டு. எம் மொழி செழிக்க வேண்டும், நாமும் அதனைக் கண்டு அனுபவிக்க வேண்டும். உங்கள் இன வெறிக்குப் பயந்து நாங்கள் எங்கள் தேனினும் இனிய தீந்தமிழை இழக்கத் தயாராக இல்லை. எது வரினும் வீரமுடன் பணியாற்றுவோம் என்று கூற ஆசைப்படுகிறோம்.

ஓர் நாட்டில் இரு மொழிகள் நிலவ இடமில்லை என்பீர்—ஆனால் இது ஏற்காது; ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழிகள் அரசாங்கமொழிகளாய் இருக்கலாம் என்பதற்கு சுவிட்சர்லாந்து தேசம் சாட்சி. அதுபோலவே இந்நாட்டிலும் இரு மொழிகளும் அரசாங்க மொழிகளாய் அமைய வேண்டும். அன்றேல்சமஷ்டி ஆட்சியே எமக்கு உகந்தது. இதற்கு தமிழர் என்றும் தயாராகவிருக்கிறார்கள் என்று கூற ஆசைப்படுகிறோம்.

இதைவிடுத்து பௌத்த பிக்குகளினாலும், சிங்கள மொழியினாலும், தமிழரும், தமிழ் மொழியும் அழிந்தொழிய நாங்கள் விடமாட்டோம். எங்கள் மொழியை காக்கவேண்டியது எங்கள் கடமை. பிறர் மொழியை அழித்தொழிக்காது, சம உரிமை கொடுத்து காப்பது புத்த பக்தர்களது தலையாய கடமை.

பாராண்ட தமிழினத்தை, அறிவும் திருவும் கொண்டு விளங்கிய தமிழினத்தை, இமயத்தில் தமிழ்க் கொடியேற்றிய தமிழினத்தை, வீறும், வீரமும் கொண்டு இலங்கிய தமிழ் சாகியத்தை, போர் எனக் கேட்டதும் பொங்கி எழுந்த தமிழினத்தை, ஆதிசிவன் அருளாலும், அறிவறிந்த மக்கள் ஆர்வத்தாலும் வீறுபெற்று விளங்கிய தமிழ் மொழியை, வடபால் நீலமேனி நெடியோனும், தென்பால் கன்னித் தெய்வமும், குடபால் அருந்தவ முனிவரும் கருத்துற நோக்கிக் காவல் புரியும் தமிழ் மொழியை, சங்கத் திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த தீந்தமிழை, கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழை, என்றுமுள தென்றமிழை எந்தப் பௌத்த பிக்குவாலும் அழிக்க முடியாது, அழிக்கப்படவும் முடியாது. வேறெவ்வினத்தினராலும் கொள்ளைகொள்ளப்படவும் முடியாது என்பதறியாது அலறும் பௌத்த பிக்குகள் அறிவார்களாக!

தம் மொழி தழைக்கப் பாடுபட்டு பணிபுரிய வேண்டியது புத்த பக்தர்களின் தலையாய கடன்!!

நறுமணத்தையே நல்ல வாய் மொழியாகக் கொண்ட தேனீக்கள்

தங்கள் கருத்தை ஆடிப்பாடி அவை வெளியிடுகின்றன

டாக்டர் காரல்வான் பிரிச் (Dr.Karl van Prischr) என்ற ஆஸ்த்திரிய நாட்டு அறிஞர் ''தேனீக்களின் மொழி'' பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்தி தேனீக்களிடை ஒரு நிகழ்ச்சி பரவுவதற்கு நறுமணவாடை முக்கிய காரணமாகி, ஒரு மொழிக்குரிய பண்பைப் பெறுகின்றது. சில கருத்துக்களை வெளிப்படுத்தத் தேனீக்கள் தேன் கூட்டில், அதற்குரிய சிலபல ஆட்டங்களை மேற்கொள்கின்றன என்ற முடிவை வெளியிட்டுள்ளார்.

இந்தஉண்மையைத் தேன் கூடு இருக்கும் இடத்திற்கருகில் தேன் நிறைந்த கோப்பைகளை வைத்து அறிந்து கொள்ளலாம். இந்தக்கோப்பைகள் மணிக்கணக்கில், நாட்கணக்குலுங்கூட கவனிக்கப்படாமல் இருக்கலாம். எப்பொழுதாவது ஒரு தேனீக்கோப்பையைக்காண நேரிட்டால் தேனை எடுத்துக்கொண்டு கூட்டிற்குத் திரும்பும். உடன் கோப்பையை நோக்கிவரும் தேனீக்களின் எண்ணிக்கைஅதிகரிக்கும்; இவையெல்லாம் அந்த ஒரு கூட்டில் வாழ்பவைதான். தேன் நிறைந்த கோப்பைகள் பல இருந்தால் புதிதாகவரும் தேனீக்கள் பலவாகப்பிரிந்து எல்லாக்கோப்பைகளையும் படையெடுக்கும். இதிலிருந்து தேனை முதலில் கண்டு பிடித்த தேனீயைத் தொடராமல் மற்ற தேனீக்கள் அதனதன் சொந்த முயற்சியாலேயே தேன் எடுக்கமுனைகின்றன என்பது விளங்கும்.

வான் பிரிச், தேனீக்களை கண்ணாடிக்கூடுகளில்வைத்து ஆராய்ச்சி நடத்தியதில் விந்தையான சில பண்புகளைத் தேனீக்களிடம் கண்டார்; புதிய தேனுடன் கூட்டிற்குத் திரும்பிய ஒரு தேனீ கூட்டின் ஒருவறையில் நுழைந்து தான் கொணர்ந்த மதுவில் ஒரு பகுதியை மற்றொரு தேனீக்குக் கொடுத்துவிட்டு, இடதும் வலதுமாக மாறிமாறி சுற்றிச் சுற்றிவரும் ஒரு வி[illegible] டத்தை மே[illegible] ஒவ்வொன்றாக சேர ஆரம்பித்து வெகுவிரைவில் எல்லாத்தேனீக்களும் பங்கு கொண்டுஆட ஆரம்பித்தன.

''தேன் கூட்டிற்கு அருகில் காணப்படுகிறது'' என்பதையே இந்த ஆட்டங்கள் குறிக்கின்றன என்று வான் பிரிச் விளக்குகிறார். முதலில் கூடிய தேனீயைத் தொடர்ந்து சில தேனீக்கள் பறந்து செல்கின்றன அவையும் தேனீ கொண்டுவந்தால் அந்த ஆட்டத்தை தொடங்குகின்றன. இதைத் தொடர்ந்து இன்னும் பலதேனீக்கள் வெளிச் செல்லுகின்றன. வெகுவிரைவில் அந்தத் தேன்கூடே ஒரு நாட்டிய அரங்காக மாறிவிடுகிறது.

தேனீக்கள் தேன் குடிக்கப் பொதுவாகக் கண்ணாடிக் கோப்பைகளை விடுத்து மலர்களைத்தான் நாடும் வான் பிரிச் ஆராய்ச்சியைமாற்றினார். தேன் கூட்டிற்கருகில் பிளாச்க் (Pholox) என்ற செடிகளை அமைத்து, மலர்களில்சர்க்கரை நீரைநிரப்பி வைத்தார். குறிப்பிடப் பெற்றதேனீக்கள் சர்க்கரை நீரை எடுத்துக்கொண்டு கூட்டிற்குத்திரும்பி ஆட்டங்களில் இறங்கின. குறியிடப் படாத தேனீக்கள், ஆராய்ச்சிக்கு இடையூறாக இராமல் இருக்க கூட்டிற்குத் திரும்பாதவாறு தடுக்கப்பட்டன. வான் பிரிச் உடன் பிரிதொரு இடத்தில் பிளாச செடித்தொட்டி ஒன்றையும் சிக்லாமென் (Cyclamen) என்ற வேறு வகைச் செடித்தொட்டி ஒன்றையும் வைத்து இரண்டு செடியிலுள்ள மலர்களிலும் சர்க்கரை நீரை ஊற்றாமல் [illegible]

தேனீக்கள் கூட்டிலிருந்து கிளம்பி இரண்டாவது பிளாக்ச் தொட்டியை வந்தடைந்தன. தேனீக்கள் மலர்களில் அமர்ந்து ஆராய்ந்தன. தேன் எடுக்க இயலாத அளவுக்கு ஆழத்தில் இருந்தாலும் தேனீக்கள் முயற்சியை விடுவதாயில்லை. ஆனால் பக்கத்திலிருந்த சிக்லாமென் மலர்களை தேனீக்கள் கவனிக்காமலேயே இருந்தன; ஆராய்ச்சியை மாற்றி பிளாக்ச் செடிக்குப் பதிலாக சிக்லாமென் செடியை வைத்துப் பார்த்தால் பிளாக்ச் மலர்கள் கவனிக்கப்படாமலேயே இருந்தன.

இதிலிருந்து வான் பிரிச் கண்ட உண்மை, தேனீக்கள் மலரை நெருங்குவதின் காரணம் மலரின் மணமேயின்றி மலரிலுள்ள மதுவல்ல என்பதேயாகும். மலரின் மணம், தேனீக்களுடன் ஒட்டிக்கொண்டு அவை கூடு திரும்பியபோது மற்றத் தேனீக்களால் நுகரப்பட்டு, அந்த மணமுள்ள மலரை நாடி மற்றத் தேனீக்களும் வெளிக்கிளம்புகின்றன. ஆகவேதேனீக்களின் மொழி நறுமணங்களின் மொழியாகும்;

இதை மெய்ப்பிக்க அவர் மற்றொரு ஆராய்ச்சியையும் மேற்கொண்டார்; இதில் மலர்களை ஒதுக்கிவிட்டு நறுமணம் தரவல்ல வெவ்வேறு வகைச் சாறு கொண்ட கோப்பைகளை உபயோகித்தார். பின் குறியிடப்பெற்ற சில தேனீக்களை இனிப்புப் பண்டம் கரைத்த சாற்றை உண்ணவைத்தார். இதை அடுத்து வழக்கமாக தேன் கூட்டில் நிகழும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அறிவிக்கப்பட்ட தேனீக்கள் அந்த இனிப்புப் பண்டவாடைவீசும் இடங்கள்நோக்கிப் பறந்தன. அது மலராக இருந்தாலும் வேறெந்தப் பொருளாக இருந்தாலும் அங்கே அந்த வாடையை நுகர்ந்து உட்கார்ந்தன.

வான் பிரிசின் இந்த மொழியாராய்ச்சி உறுதிப்பெற்றது. இந்த முடிவு ஒரு நன்மையையும் அளிக்க உதவிற்று. மது அதிகம் சுரக்கக்கூடிய மலர்களையே நறுமணமொழி உதவிகொண்டு தேனீக்கள் நாடும் வண்ணம் செய்யலாம். அப்போது அம் மலர்களில், தேனீக்களின் உதவியால் மகரந்தச் சேர்க்கை அதிகமாக ஏற்பட்டு, செடிகளின் வளர்ச்சி பெருகி மலர்கள் அதிகமாக மலரும். ஆகவே தேன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

''தமிழ் முரசு''

ரஷியாவில் தமிழ்!

ரஷிய வாலிபர்கள் தமிழ் மொழியை கற்றுக்கொள்ளுகிறார்கள் என்று சென்னைவந்துள்ள ரஷிய எழுத்தாளரான இலியா எரென்பாக் கூறினார்.

சென்னை ராஜ்ய நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் தலைமையில் சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே எரென்பர்க் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

தமிழ் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளை ரஷிய வாலிபர்கள் ஆர்வத்தோடு படித்து வருவதாக அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கர் வாழ்வுக்கு அகவொளி ஏற்றிய அறிஞர் பெருமான் சுவிட்சர்

வைத்திய விடுதி நிறுவிய இவர் வையத்துள் சிறந்த தத்துவ ஞானியாகவும் திகழ்கிறார்

'காட்டு மிராண்டி'களிடை வாழ்வதாக ஒருகால் உலகம் வைதது

ஈழவேந்தன்

நாகரிகமற்ற மக்கள் அனைவரும் நாகரிகத்தை நாடி நாகரிகம் படைத்த மக்களுடன் வாழ விழையும் இக்காலத்தில் நாகரிகம் சிறிதும் அற்று விலங்கு நிலையில் வாழும் மக்களுடன் ஒன்றுகூடி வாழ யாராவது முன்வருவார்களா? அன்றேல் வரலாற்றில் தான் செய்திகள் உண்டா என்ற வினாவினை எழுப்பினால் இல்லை என்றே பலரும் ஒருமித்து இயம்புவர். ஆனால் அறிவின் ஒளிவீசுகின்ற இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அப்படி வாழ்ந்த — வாழுகின்ற வள்ளல் ஒருவர் இருக்கிறார் என்றால் நீங்கள் அனைவரும் வியப்படையக்கூடும். அந்தப் பெருமகனார்தான் சுவிட்சர் (Sehweitger) என்ற பேரறிஞர். அவர் அநாகரிகத்தில மூழ்கியிருக்கும் ஆபிரிக்க மக்களிடையே பல்லாண்டுகளாக வாழ்ந்து அவர்கள் வாழ்வைப் பல்லாற்றானும் வளமாக்க அரும்பாடுபடுகிறார் செயற்கரிய பலசெய்யும் இச்செம்மலின் எண்பத்தோராம் பிறந்த நாளை அண்மையில் உலகிடை மக்கள் அனைவரும் உவகையுடன் கொண்டாடினர். பெரியார் ஒருவர் உலகின் எப்பாகத்திற் தோன்றினாலும் அவர் பணி பாரிடை மக்களுக்கு பயன்படுமாயின் அவரை உத்தாரமாகப் பேணி ஒழுகுதல் தமிழர் மரபன்றோ அம்மரபு வழி நின்று இக்கட்டுரை வாயிலாக அன்னார்க்கு அஞ்சலி செய்வோம்.

ஜெர்மனியர் மூளை வளர்ச்சியில் முதனிலை வகுக்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மற்றும் அவர்கள் அறிவியற்துறையில் ஆற்றிய—ஆற்றுகின்ற பணியையும் அகிலம் நன்கு அறியும். ஆனால் அவர்கள் அறிவு வளர்ச்சியுடன் அன்புவளர்ச்சியில் தலைசிறந்து விளங்கும் அண்ணலையும் தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்தவர் என்பதை சுவிட்சரின் தோற்றத்தினால் மெய்ப்பித்துவிட்டனர். இவர் ஜெர்மனியில் ஜெர்மன் பெற்றோருக்கு 14-1-1875ல் மகவாகத் தோன்றினார்.

இள வயதிலேயே நுண்ணறிவுபடைத்த சுவிட்சர் பலதுறைகளில் சிறந்து விளங்கினார். முப்பது வயதிற்கிடையிலேயே மெய்விளக்கம் (Philosophy) வேதநூல் (Theology) இசை (Music) ஆகிய துறைகளில் கலாநிதி (டாக்டர்) பட்டம் பெற்று ஐரோப்பாவின் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவராய் விளங்கினார். மேற்கூறிய இத்துறைகளில் இவர் பெருவெற்றி கண்டார். எனினும் அவர் உள்ளம் நிறைவடையவில்லை. தன் பிறவி பயன்படவேண்டின் பட்டங்கள் பெறுவதுடன் நில்லாது பாரிடை மக்களுக்கு பல்வேறு துறைகளில் பணியாற்றவேண்டும் என்று விழைந்தார். தனது இருபத்தோராம் வயதிலேயே அவர் இம்முடிவிற்கு வந்தார். அவரின் உள்ளக்கிடக்கையை பின்வரும் அவர் மொழிகள் புலப்படுத்தி நிற்கும். "எனது வாழ்க்கையின் முதல் முப்பது ஆண்டுகளைக் கலைக்கும், அறிவியலுக்கும் அர்ப்பணிப்பது எனவும் அதன்பின் நேரடியாக மக்கள் சமூகத்திற்கு உழைப்பதே முறைமையானது எனக் கருதுவேன்."

மக்களுக்குப் பணி செய்யத்தக்க துறைகளுள் தலைசிறந்தது மருத்துவத்துறை என மனம் அறிவுறுத்தியது. முப்பது வயதிற்கிடையில் பல்வேறு துறைகளில் டாக்டர் பட்டம் பெற்றார். எனினும் தான் பணியாற்ற விரும்பிய மருத்துவத்துறையில் டாக்டர் பட்டம் பெறவில்லை; உடனே இப்பணியினை நிறைவேற்றுவதற்காக முப்பதாவது வயதில் மருத்துவம் கற்க முயன்று வெற்றி பெற்றார். படித்துப் பட்டம் பெற்றவுடன் ஆபிரிக்கா சென்று பணியாற்ற விழைந்தார். ஆனால் இவரின் உற்றார் உறவினரோ 'இந்தளவு அறிவு ஆற்றல் அனைத்தையும் பெற்ற நீ ஏன் காட்டு மிராண்டிகள் வாழும் இடத்திற்குச் சென்று உன் வாழ்வை பாழாக்க விரும்புகிறாய்?" எனத் தடுத்தனர். ஆனால் பணிசெய்யப் பிறந்த இப்பண்புடையார் இவர்களின் கூற்றிற்கு செவிமடுக்காது தான் விரும்பியபடி செய்யத் துணிவுபூண்டு ஆகும் ஆயத்தங்கள் செய்தார்.

இக்காலத்தில்தான் ஜெர்மன் நாட்டு வரலாற்று ஆசிரியர் ஒருவரின் மகளாகிய (Helen Bresslau) பிரஸ்லோவை வாழ்க்கைத் துணைவியாய் அடையும் பேற்றினைப் பெற்றார். பயிற்சி பெற்ற பணிப்பெண்ணாய் (Trained nurse) விளங்கிய இப்பெண் பணியாற்ற விழையும் பண்பும் படைத்திருந்தார் சுருங்கக் கூறின் தன் கணவனின் உயர் பணி அனைத்திற்கும் உறுதுணை புரியும் உயிர்த் துணைவியாய் விளங்கினார். திருமணம் செய்த 8 மாதங்களிலேயே அதாவது 1913ம் ஆண்டிலேயே இருவரும் ஆபிரிக்காவுக்கு அரும்பணியாற்றப் புறப்பட்டனர்.

சென்ற உடனேயே லம்வரின் (Lambarene) என்ற இடத்தில் ஒரு மருத்துவ விடுதியை நிலைநாட்டினார். நிலைநாட்டிய உடனேயே நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்து பல்வேறு நோய்கள் உள்ள மக்கள் இந்நிலையத்தை நாடி வந்தனர். வந்தவர் அனைவரையும் அன்புடன் வரவேற்று அவர்கள் நோய் தீர ஆகும் உதவிகள் புரிந்தனர். சில வேளைகளில் பொருளாதார நெருக்கடியால் இம்மருத்துவ விடுதியை செம்மையுற நடத்த முடியாது இவர் துன்புற்றதுண்டு. இவ்வேளைகளில் இவர் உலகின் பல பாகங்களுக்கும் சென்று நண்பரின் உதவி கொண்டு பொருள் சேர்த்துவருவதுண்டு. இன்று இவரின் ஓயா உழைப்பினால் இம்மருத்துவ விடுதி பெருப்பிக்கப்பட்டு எல்லா வசதிகளும் கொண்டு அழகுடன் விளங்குகிறது. இந்நிலையத்தில் தற்பொழுது 400 நோயாளிகளும் இரண்டு மருத்துவரும ஒன்பது பணிப்பெண்களும் இருக்கின்றனர். இவரின் இம்மருத்துவ நிலையமே இவரின் மாண்பினை மாநிலம் அறிய உதவியதுடன் இவருக்கு அழியாப் புகழையும் தேடித் தந்துள்ளது.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக மக்கள் நலத்தில் நாட்டம் கொண்டு நற்பணியாற்றியதற்காக இவருக்கு நோபல் பரிசு 1953ல் வழங்கப்பட்டது. இவர் தான் பெற்ற 12,000 பொற்காசுகளையும் தனது மருத்துவ நிலைய வளர்ச்சிக்கே செலவழித்து விட்டார். தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர் தன் பணத்தை வேறு எவ்விதம் பயன்படுத்த முடியும்?

இவர் ஆக்கி அளித்த நூல்கள் பல எனினும் அவற்றை முப்பெரும் பிரிவாகப் பிரிக்கலாம் அவை, வேதநூல் (Theology). மெய்விளக்கம் (Philosophy) இசைத்துறை யவை ஆகிய நூல்களுள் வாச்சின் (Bach) வரலாறு, வாத்தியங்களை அமைக்கும் முறை (The Construction of organs) ஆகியவை தலைசிறந்து விளங்குகின்றன. வாச்சின் வரலாறு என்ற நூலில் இவர் வாச்சின் வரலாற்றை மட்டும் ஆராயாது அன்னாரின் இசையின் நுண்ணறிவையும் நன்கு ஆராய்ந்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் மேற்கு நாட்டின் இசையின் நுணுக்கத்தை சிறப்பாக வாசசன் இசையறிவை உணர்ந்தவருள் டாக்டர் சுவிட்சர் முதலிடம் வகிக்கின்றார். இசைக்கு இதயத்தை இளகச் செய்யும் தன்மை உண்டென்பர் அறிஞர். அதனால் தான்போலும் இசை வல்லரான சுவிட்சர் மக்களின் இன்னல் துடைக்க முயலும் இளகிய உள்ளம் படைத்தவராய் விளங்குகிறார்.

வேதத்துறையில் இயேசு நாதரின் பொன்மொழிகள் (The quest of the historical jesus) 'பரிபோலிஸ் மதக் கொள்கை"(The mysticism of St. Paulthe apestle) கிறித்தவமும் உலகில் உள்ளமற்றைய நெறிகளும் (Christianity and the religions of the world) ஆகியவை மிகச்சிறந்தவை என அறிஞர் பலர் கருதுகின்றனர்.

மெய்விளக்கத் துறையில் நாகரிகத்தின் மெய்விளக்கம் (Philosopy of civilization) நாகரிகமும் அறமும் (Civilization & ethics) இந்தியச் சிந்தனையும் வளர்ச்சியும் (Indian thought and its development) ஆகிய நூல்கள் அறிவிறகு விருந்து நல்குவனவாய் மிளிர்கின்றன. அவை ஒவ்வொன்றின் சிறப்பியல்புகளை இங்கு ஆராய இயலாததினால் "இந்தியாவின் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்" என்ற அவரின் நூலின் சில பகுதிகளைப்பற்றி சிறப்பாக திருக்குறளைப்பற்றி அவர்கொண்டிருக்கும் கருத்துக்களை இங்கு பெய்துகாட்டுவோம். இந்தியாவின் சமயச் சார்புடைய நூல்கள் அனைத்தும் மக்கள் இனம் மட்டுமன்றி உயிர் இனம் அனைத்திற்கும் மக்கள் செய்யவேண்டிய கடமையை வலியுறுத்தி நிற்பது போற்றற்குரியது எனக் குறிப்பிட்ட இவர், அவைகளுட் பெரும்பாலான உலகின் நிலையாமையைவற்புறுத்துவது உலகின் வளர்ச்சிக்கு நல்லதல்ல என நவில்கின்றார். ஆனால் தமிழரின் தனிப்பெரும் நூலாய் — தமிழ் மாதின் இனிய உயிர் நிலையாய் விளங்கும் திருக்குறள் வையத்து மக்கள் வாழ்வாங்குவாழ வழிவகுக்கும் தன்மை போற்றற்குரியதென மொழிகின்றார். அதுடன் பிராமணியம், பௌத்தம், பகவத்கீதை முதலியன இம்மையில் அன்றேல் மறுமையில் நன்மைகள் கிடைக்கும் என்பதற்காக செய் என்று கருத்து தோன்றும்படி எழுதியிருக்க, திருக்குறள் நன்மைக்காக நன்மைசெய் என்ற கருத்தை வலியுறுத்தி நிற்பது வியந்து போற்றற்குரியது என அறைகின்றார். மற்றும் உலகின் சிறந்த நூல்களுடன் திருக்குறளை ஒப்பிட்டு பின்வருமாறு கூறுகின்றார். "திருக்குறளைப் போன்று இத்துணை உன்னத கருத்துக்கள் எல்லாம் ஓர் இடத்து பொதிந்து காணப்படும் உலக இலக்கியங்களைக் காணுதல் அருமையே."

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது வள்ளுவர் வாய்மொழி. அந்த அறவழி நின்று கல்லாயார்க்கும், கற்றவர்க்கும் களிப்பருளும் கருணைக்கடலாய் விளங்குபவர் சுவிட்சர் என்னும் சான்றோன். அவர் வாழ்வும் பணியும் நிலமிசை நீடூழி வாழ என நிர்மலனை நித்தலும் கைதொழுது நிற்போம்.

அறிமுகப்படுத்துகிறோம்

லேனர்: 42



நகைச்சுவைக்கு ஒரு நாயகம்

—சிவா—

"ஈழத்தில் நகைச்சுவையை அனுபவித்து அதை எழுதுபவர்களை ஊக்கப்படுத்துவோர் மிகவும் குறைவு" என்று கூறும் திரு. பாக்கியநாயகத்தின் நூற்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளும், கட்டுரைகளும் இலங்கையின் பிரபல பத்திரிகைகளான சுதந்திரன், வீரகேசரி, தினகரன், உதயதாரகை முதலியவைகளில் இதுவரை வெளிவந்துள்ளன. இந்தியாவின் தலைசிறந்த நகைச்சுவைப் பத்திரிகையான ஆனந்த விகடனில் இவரது நகைச்சுவை ததும்பும் கட்டுரைகள் அடிக்கடி பிரசுரமாகின்றன.

மட்டக்களப்பைச்சேர்ந்த இவர் 1931ம் ஆண்டு மாசி மாதம் 4ந் திகதி பிறந்தார். இவரது தகப்பனார் காலஞ்சென்ற திரு ஜே. எம். தம்பாப்பிள்ளை.

ஆரம்பத்தில் மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் பின்னர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் கல்வி பயின்ற பாக்கியநாயகம் தமது கல்லூரி வாழ்க்கையில் இந்த கல்லூரிகளால் வெளியிடப்படும் பத்திரிகைகளின் தமிழ்ப்பகுதிக்கு ஆசிரியராகக் கடமையாற்றிவந்தார். அக்காலத்திலிருந்தே ஓர் தலைசிறந்த தமிழ் எழுத்தாளராக வரவேண்டுமென்ற எண்ணம் அவருக்கிருந்தது.

கல்லூரி வாழ்க்கை முடிந்ததும் இவர் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். சுதந்திரன் பத்திரிகை தினசரியாகவிருந்தபோது அதன் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். "என்னை எழுத்துலகத்திற்குத் திருப்பிய திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்" எனப் பெருமையுடன் கூறுகிறார் இவர். தற்போது இவர் மட்டக்களப்புக் கச்சேரி கணக்குப் பகுதியில் கடமையாற்றுகிறார்.

சுதந்திரன் நடத்திய சிறுகதைப் போட்டியில் "செம்பி மண்மேடு" என்னும் கதை எழுதி பாராட்டுப் பத்திரம் பெற்ற இவர் இலங்கை வானொலியில் அடிக்கடி மட்டக்களப்புக் கிராமியக் கவிதைகள்பற்றி ஒலிபரப்புகிறார். எழுத்துத் துறையில் மட்டுமின்றி புகைப்படம் எடுக்கும் கலையிலும் இவர் சிறந்து விளங்குகிறார். இவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பல பத்திரிகைகளிலும் குறிப்பாக "இலங்கை வானொலி வெளியீட்டி"லும் வெளிவருகின்றன. இலங்கை அரசாங்கத்தால் வருடாந்தம் வெளியிடப்படும் இலங்கை ஆண்டு மலரின் இவ்வருட வெளியீட்டுக்கு இவரால் எடுக்கப்பட்டவோர் இயற்கைக் காட்சியொன்று பிரசுரிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எழுத்தாளர் பாக்கியநாயகம் கவிதைகள் புனைவதிலும் சமயத்தொண்டு செய்வதிலும் சாலச்சிறந்து விளங்குகிறார். இவரது கவிதைகள் பல மெதடிஸ்த ஆலயங்களில் விசேஷ தினங்களின் போது பாடப்படுகின்றன.

மணிக்கணக்கில் பொழுதுபோக்காக நகைச்சுவையுடன் பேசுவதில் இவர் மிகவும் சிறந்தவர். தமது அன்பு வார்த்தைகள் மூலம் மக்களைத் தம்பால் கவரும் ஒரு தனிச்சக்தி இவரிடம் உண்டு.

பாக்கிய நாயகம் தற்போது ஆங்கில எழுத்துலகிலும் பிரவேசிக்க முயற்சியடைவதாகத் தெரியவருகிறது.

இவருக்குப் பிடித்தவை: சுதந்திரன் பத்திரிகை, நாடோடி, கோமதிஸ்வாமிநாதன் முதலியோர் எழுதும் கட்டுரைகள், நகைச்சுவையுடன் பேசும் நண்பர்கள், தமிழ் சினிமாப் படங்கள்,

பிடிக்காதவை: மேல்நாட்டு மோகமுள்ள நம் நாட்டுப் பெண்கள், மதுபானம், உறைப்புப் பதார்த்தங்கள்;

தமிழரசா? தனியரசா?(12)

சமஷ்டியை அன்று எதிர்த்தவர்கள் இன்று ஏற்றுக் கொள்ளுகிறார்கள்

வெகு விரைவில் சிங்கள மக்களும் இணங்கி வருவது திண்ணம்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

ஒரு நாட்டில் சமஷ்டி ஆட்சி அமைவதற்கான எட்டுக் காரணங்களில் ஏழு காரணங்கள் ஏற்கனவே ஆராயப்பட்டன. எட்டாவது காரணத்தில்:

ஒரு நாட்டில் கூட்டாட்சி ஏற்படுவதற்கு கூட்டாட்சியில் சேரும் அங்கங்களுக்கு பரஸ்பரம் தன்மை ஏற்படும் என்று கண்டால் சமஷ்டி ஆட்சி ஏற்படலாம் என்று சொல்லப்பட்டது.

இலங்கையில் ஏற்படும் சமஷ்டி ஆட்சி சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு அங்கங்களுக்கும் பரஸ்பரம் நன்மை விளைக்குமா? நிச்சயமாக இரு பகுதிக்கும் நன்மை விளைக்கும். ஆனால் தமிழ்ப் பேசும் மக்கள் இப்பிரச்னையைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் அளவிற்கு சிங்கள மக்கள் பெரும்பாலோர் இதுவரை சிந்தித்துப் பார்க்கவில்லை. சிங்களப் பெருமக்களுள் விஷயமறிந்த சிலர் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள தீர்க்க முடியாத இந்த மொழிப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி ஒன்றினால்தான் முடியும் என்று நம்புகிறார்கள், ஆயினும் பகிரங்கமாக எடுத்துச் செல்லும் அளவிற்கு அவர்கள் இன்னும் முன்வரவில்லை. இதனால் அவர்கள் சமஷ்டியை ஏற்றுக் கொள்வதற்கு என்றுமே முன்வரமாட்டார்கள் என்று கூறிவிட முடியாது.

சமஷ்டிக்கு எதிராய் பிரசாரஞ் செய்யும் ஒரு சிலர் சிங்கள மக்களின் இன்றைய மௌன நிலையை ஒரு ஆதாரமாக எடுத்துக் கூறிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அண்மையில் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம்கூட இந்த சப்பைக்கட்டு வாதத்தை ஏதோ ஒரு பெரிய குண்டு என்று நினைத்துக் கொண்டு பத்திரிகைகளில் பிரமாதப் படுத்தியிருக்கிறார்.

““தமிழ் அரசு, சமஷ்டி ஆட்சியென்று சிலர் கூப்பாடு போடுகிறார்கள். சமஷ்டி ஆட்சி இலங்கையில் அமைவதானால் அதற்கு சிங்கள மக்களும் இணங்கிவர வேண்டாமா? இதுவரை தெற்கேயுள்ள எந்த ஒரு சிங்களத் தலைவராவது சமஷ்டி நல்லதுதான் என்று கூறியிருக்கிறாரா? ஏற்றுக் கொண்டிருக்கிறாரா? இந்த நிலையில் சமஷ்டி எப்படிச் சாத்தியமாகும்? கூட்டாட்சி எப்படிக் கிடைக்கும்?’ என்று கேட்டிருக்கிறார் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

இன்று சிங்களத் தலைவர்கள் ஆதரிக்கவில்லையென்றால், என்றுமே அவர்கள் ஆதரிக்கப் போவதில்லை என்று சொல்வது சரியான வாதமாகாது.

ஆறு ஆண்டுகளுக்கு முன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியார் இந்த சமஷ்டி அரசியல் கோரிக்கையைக் கிளப்பியபோது தமிழ்ப் பேசும் மக்களின் தலைவர்கள் எனப்படுவோரும் அப்போது ஆதரிக்கவில்லை. ஆதரவாக ஒரு வார்த்தை கூறாதது மட்டுமல்ல மூர்த்தண்யமாக எதிர்க்கவும் முற்பட்டார்கள். சமஷ்டி ஆட்சி கோருவது காட்டுக் கூச்சல் என்றார்கள்; சுத்த பைத்தியக்காரத்தனம் என்றார்கள்; பகற்கனவு என்றார்கள், நாட்டைப் பிளப்பதா சின்னஞ்சிறு இலங்கையை இரண்டு கூறு ஆக்குவதா என்றார்கள். இன்னும் என்னென்னவோ எல்லாம் சொன்னார்கள். பொதுமக்களும் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கைக்கு அவ்வளவு தூரம் செவிசாய்க்கவில்லை என்பது கடந்த பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அடைந்த பெருந்தோல்வியினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

ஆனால் இன்றைய நிலை என்ன? எது பைத்தியக்காரத்தனம், எது பகற்கனவு என்று சொன்னார்களோ அதுதான் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சிறந்தது என்று கூறும் அளவிற்கு தமிழ்த் தலைவர்களில் பலர் மாற்றம் அடைந்திருக்கிறார்கள் சமஷ்டிதான் வேண்டும், அந்தக் கொள்கையைத்தான் நாம் அடுத்த தேர்தலில் ஆதரித்துப் போட்டியிடப் போகிறோம் என்று பகிரங்க மேடைகளில் சொல்லவும் அவர்கள் தயங்கவில்லை. இன்னும் சிலர், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சமஷ்டி என்றால் நாட்டைப் பிளக்கும் படுபாதகமான செயல் என்று வியாக்கியானம் செய்தவர்கள், இன்று ஒருபடி அதிகப்படியாகத் தாண்டித் ‘‘தனித்தமிழ்நாட்டு’’க்கோஷம் போடுகிறார்கள். நாட்டை இரண்டு கண்டதுண்டமாக வெட்டிச் சின்னாபின்னப் படுத்திவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்போம் என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

சமஷ்டிக் கோரிக்கையை அன்று ஆதரிக்காத தமிழ்ப் பேசும தலைவர்களே இன்று ஆதரிக்கும்படியும், அதற்கு மேல் ஒரு முளம் பாயும்படியும் காலம் மாறக்கூடுமானால், இன்று சமஷ்டியை ஆதரிக்காத சிங்களத் தலைவர்களும் எதிர்காலத்தில் ஆதரிக்கும்படியான காலகட்டம் உருவாகியே தீரும் என்று கொள்வதில் என்ன அவநம்பிக்கை இருக்கிறது?

இந்திய மக்கள் சுதந்திரம் கோரிநின்ற ஆரம்ப காலத்தில் இங்கிலாந்திலுள்ள அரசியல் தலைவர்களில் யாராவது ‘‘நீங்கள் கேட்பது நியாயந்தான். இதோ தந்தோம்’ என்று சொன்னார்களா? இந்திய மக்கள் படிப்படியாக விடாப்பிடியாக தங்கள் கோரிக்கையை வளர்த்துப் பலப்படுத்திக் கொண்டே போனார்கள் சுதந்திரம் கொடுக்காமல் முடியாது என்ற ஒரு நிலையை பிரிட்டிஷாரிடத்தில் ஏற்படுத்தினார்கள். இந்தியாவில் வியாபித்து வந்த எழுச்சிக்கும் கிளர்ச்சிக்கும் முன்னால் பிரிட்டிஷாரின் கொள்கை, கோட்பாடு, பிடிவாதம் உறுதி எல்லாம் தலைவணங்கத்தான் வேண்டியேற்பட்டது. இது நாம் நிதர்சனம் கண்ட உண்மை. சரித்திரம் தரும் ஆதாரம்.

இந்தியாவைத் தனியாக எடுத்துக்கொண்டாலும். அரசியல் மேதை ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் கேட்டபோது, அந்தக் கோரிக்கையை எந்த இந்திய தேசியத் தலைவராவது ஆதரித்ததுண்டா? இந்திய தேசியத் தலைவர்கள் ஆதரிக்கவில்லையென்ற காரணத்திற்காக ஜின்னா தமது கோரிக்கையை விட்டுவிட்டு உறங்கிக்கிடக்கவில்லை. பாகிஸ்தானுக்காகத் தொடர்ந்து போராடினார். ஆரம்பத்தில் எதிர்த்த தலைவர்களே இறுதியில் இணங்கியது மட்டுமல்ல, ராஜாஜீபோன்றவர்கள் பாகிஸ்தான் கொடுத்தேயாக வேண்டும் என்று வற்புறுத்தி காங்கிரஸில் இருந்து வெளியேற்றமும் செய்தார்கள். ஈற்றில் பாகிஸ்தான் கோரிக்கையில் ஜனாப் ஜின்னா உலகமே கண்டு அதிசயிக்கும்படியான வெற்றியையும் ஈட்டினார்.

மேற்காட்டிய உதாரணங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய உண்மை என்ன? தற்சமயம் சிங்களத் தலைவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை ஆதரிக்கவில்லையென்பதால் என்றுமே அவர்கள் சமஷ்டிக்கு இணங்கி வரமாட்டார்கள் என்ற திரு பொன்னம்பலம் போன்றோர் போடும் அதிர்வெடிக்கு ஆதாரம் இல்லை என்பதுதான்.

தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்று சேர்ந்து நின்று ஒருமுகமாக சமஷ்டி கோரினால் சிங்கள மக்கள் வழிக்கு வந்துதானாக வேண்டும். சமஷ்டி ஏற்படுவதனால் சிங்கள மக்களுக்கும் நன்மையே தவிர தீமை இல்லை என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளும்போது தானாகவே சமஷ்டியை ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள். தமிழ்ப் பேசும் மக்களுக்கு உறுதி நாணயம் வாய்ந்த தலைவர்களும் வாய்க்கப்பெற்று, தக்க முறையில் சிங்கள மக்களிடையே சமஷ்டியின் உயர்வுபற்றி பிரசாரமும் செய்யப்பட்டால் வெகு எளிதில் சமஷ்டிக் கோரிக்கைக்கு சிங்கள மக்களை இணங்கச் செய்துவிடலாம்.

[illegible] லாம், முதலில் கொஞ்சம் எதிர்த்துவிட்டு, பின்பு ஏற்படியே ஏற்றுக்கொள்ளக் கூடிய பலஹீனர்கள் தமிழ் மக்கள். அப்படித்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் மந்திரிப் பதவியென்ற இரண்டொரு எலும்புத் துண்டை வீசியெறிந்தால் வாலைக் குழைத்துக்கொண்டு காலடிக்கு வரக்கூடிய சுயநலவாதிகள் தமிழ்த் தலைவர்கள்’’ என்று சிங்கள அரசியல் தலைவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

‘‘ஒரு சுருட்டையும், ஒரு கோப்பை தேனீரையும் கொடுத்து தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கிவிடலாம்’’ என்று அண்மையில் ஒரு புத்த பிக்கு திருகோணமலையில் பட்டவர்த்தனமாகப் பேசியிருக்கிறார்.

சிங்கள மக்கள் நம்மைப் பற்றி இப்படி இழிவான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்களே என்று நாம் அவர்கள்மீது சீற்றங் கொள்ள நியாயம் இல்லை. அவர்கள் அப்படி எண்ணும்படியாக நடந்துகொண்டவர்கள் நாம்தான். நம் மானங்கெட்ட தலைவர்கள்தாம்.

திருவாளர்கள் பொன்னம்பலம், குமாரசாமி போன்றோர் போட்ட குத்துக்கரணங்களும், நடேசன், நல்லையா, தம்பிஜயா போன்றோர் நடத்திய காட்டிக்கொடுக்கும் படலங்களும் தமிழ் மக்களின் அந்தஸ்தைப்பற்றி சிங்கள மக்கள் இவ்வளவு கேவலமாக எண்ணுவதற்கு இடமளித்துவிட்டன.

தமிழ்ப் பேசும் மக்கள் உறுதியுள்ளவர்கள். திண்மையுள்ளவர்கள், எடுத்த காரியத்தைச் சாதிக்கும் வரை இமயம்போல் குலையாது நிற்கக்கூடியவர்கள் என்ற எண்ணத்தை இனித்தான் நாம் சிங்கள மக்களின் மனதில் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு நமக்கு நேர்மையும், நிலையான கொள்கையுமுடைய தலைவர்கள் வேண்டும். ‘‘நாம் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் ஆமாம் போடக்கூடியவர்கள்தான் தமிழர்கள்’’ என்று சிங்கள மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள எண்ணத்தை மாற்றக்கூடிய அளவிற்கு எதிர்த்து நின்று போராடக்கூடிய தலைவர்களும், அவர்களைப் பின்பற்றி ஒரு நிலையில், ஒரு கொள்கையில் நிற்கக்கூடிய தமிழ் மக்களும் வேண்டும். இந்த நிலையைத் தமிழ் இனம் அடைந்துவிட்டால் பின்பு சிங்கள அரசியல்வாதிகள் இறங்கி வந்து சமஷ்டித் திட்டத்தை உவகையோடு ஏற்றுக்கொள்வார்கள்.

ஏன் அவர்கள் சமஷ்டித் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்கலாம். தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையைவிட சமஷ்டிக் கோரிக்கை மிதமானதாகையால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பது முதற் காரணம். ஆனால் முக்கிய காரணம் வேறு இருக்கிறது. அது பின்வருமாறு:

எந்த ஒரு நாட்டிலும், ஆட்சி நியமமாக நடைபெற வேண்டுமானால் அதற்கு வெளிப் பகையைவிட உட்பகை இல்லாமல் இருப்பது மிக மிக அவசியம். இலங்கை ஒரு சிறிய நாடு. பலமான உட்பகையை வளர்த்துக் கொண்டு இந்த நாட்டில் செங்கோலைச் செவ்வனே நடத்த முடியாது. உலக அரங்கில் இலங்கை ஒரு கேந்திரஸ்தானம் வகிக்கிறது. யுத்த காலங்களில் இலங்கையின் முக்கியத்துவம் மகத்தானது. எனவே இலங்கையைத் தன் கைக்குள் போட்டுக்கொள்ள எந்த வல்லரசும் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கும் இலங்கையில் உட்பகை பெருமளவில் உருப்பட முடியுமானால் வல்லரசுகளின் கழுகுப் பார்வை வலிய வந்து இலங்கையின் மீது படியும். இருபத்துநாலு இலட்சம் தமிழ் மக்களின் உட்பகையைத் தொடர்ந்து வளர்த்துக்கொண்டு, அதன் காரணமாக இலங்கையின் முழுச் சுதந்திரத்தையும் பறிகொடுத்துவிட சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள், தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்றிரண்டு எதிர்ப்புக் காட்டினால், அந்த எதிர்ப்பு நிலையாகவும் இருக்கும் எனக் கண்டால். சிங்கள மக்கள் தமிழ்ப் பேசும் மக்களோடு சமரசம் செய்துகொண்டு எப்படியும் உட்பகையைச் சமாளிக்கவே முன்வருவார்கள். சமஷ்டி ஆட்சி வழங்கினால்தான் தமிழ இனத்தின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெறலாம். அதனால்தான் பரஸ்பரம் இருசாராருக்கும் நன்மையுண்டு என்பதை உணர அவர்களுக்கு அதிக கஷ்டம் இராது. இந்த நிலை வரும்போது இலங்கையில் ஒரு சமஷ்டி ஆட்சி மலரும் என்பது முக்காலும் திண்ணம்.

★

[‘‘தமிழரசா, தனியரசா?’’ என்ற தொடரில் இது பன்னிரண்டாவது கட்டுரை. இக்கட்டுரையோடு இவ்விஷயத்தை முடித்துக்கொண்டு சமஷ்டி அரசியலின் பல்வேறு அம்சங்களையும், சமஷ்டி அரசியல் இயங்கும் வகைகளையும், சமஷ்டி அரசியலின் பொருளாதார அமைப்புகளையும், இன்ன பிறவற்றையும் பின்னால் தனித் தனிக் கட்டுரைகளாக அவ்வப்போது வெளியிட விழைகின்றோம்.

இலங்கையில் தனித்தமிழ் நாடு கோருவதைவிட சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழரசு கோருவதுதான் பொருத்தமானது என்பதை விளக்குவதற்காகவே இக்கட்டுரைத்தொடர் ஆரம்பிக்கப்பட்டது. கட்டுரை ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் இப்பன்னிரண்டு கட்டுரைகளாலும் கூடுமானவரை நிறைவேற்றப்பட்டு விட்டதென்று நம்புகிறோம். இன்றுள்ள சூழ்நிலையில் தனித் தமிழ் நாடு தமிழ்ப்பேசும் மக்களுக்கு அடுக்காது என்பது ஸ்தாபிக்கப்பட்டுவிட்டதாலும், தமிழ்ப்பேசும் மக்கள் வெறும் தேர்தல் வேட்டான இந்த தனித்தமிழ் நாட்டுக் கூச்சலுக்கு செவிசாய்க்கவில்லையென்பதை நாம் நன்கு தெரிந்து கொண்டதாலும் தனித்தமிழ் நாட்டு கோரிக்கையில் உள்ள அபத்தங்களை மேலும் மேலும் கிண்டி பத்திரிகையில் இடத்தைக் கரியாக்கவேண்டிய அவசியம் இல்லை.

தமிழ்ப்பேசும் மக்கள் தமக்கு வேண்டியது சமஷ்டி ஆட்சிதான் என்று இப்போது உறுதியாகத் தீர்மானித்து விட்டார்கள். எனவே அவர்கள் இனித் தெரிந்து கொள்ள வேண்டியது சமஷ்டியாட்சித் திட்டத்தின் கீழ் அமையும் தமிழரசைப்பற்றிய உள்விவரங்கள்தான். அவற்றைச் சுதந்திரன் தொடர்ந்து வெளியிட்டு வரும்போது, சுவிட்சர்லாந்தின் அடிப்படையில், இலங்கையில் சமஷ்டி எவ்வளவு சுமுகமாக இயங்கக் கூடியதென்பதை வாசகநேயர்கள் அறிவார்கள்.]

அழகான புத்தக வேலைகள்

கதை-கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்!

சுதந்திரன் டைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மென்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்!

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

194 A, தட்டா தெரு,
கொழும்பு-12.

திருகோணமலையில் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டன

திக்கெட்டும் கறுப்புக் கொடிகளின் காட்சி

(நமது நிருபர்)

திருகோணமலை. சனிக்கிழமை (4—2—56) காலை மலர்ந்தது கதிரவன் தோன்றினன் ஆனால் வழக்கமாக காணும் காட்சியை அவனால் காண முடியவில்லை. எங்கும் கறுப்பு, கதிரவன் காட்சியளிக்கு முன்னரே தமிழர்கள் இல்லங்கள் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற கறுப்புக் கொடிகள் காட்சி அளித்தன.

எந்த வீதியில் நின்று பார்த்தாலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை, கறுப்பு கொடிகளே காற்றில் அசைந்து கொண்டிருந்தன. கார்மேகமும் கண்டு அஞ்சும் வகைக்கு கறுப்பு கொடிகளின் படை எடுப்பு இருந்தது. கொடிகள் பலவித கோணங்களில் தைக்கப்பட்டு வீட்டு முகப்புகளிலும், வேலி ஓரங்களிலும், மூச்சந்திகளிலும் பறக்க விடப்பட்டிருந்தன. பொது மக்கள் தங்கள் சட்டைகளில் கறுப்பு ''பேட்ஜ்''கள் அணிந்தும், சைக்கிள்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றியும் வீதி உலாவி வந்தார்கள் ஒரு நண்பர் மாட்டு வண்டி ஒன்றில் பெரிய கறுப்புக் கொடி ஒன்றைப் பிடித்துக்கொண்டு முக்கிய நகர வீதிகளில் வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. பல இடங்களில் கொடும்பாவிகள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. வீச்சுக்காரத்தெரு, சிவன்கோவிலடி, பட்டணத்தெரு முதலிய இடங்களில் இருந்த கொடும்பாவிகள் மாலை 5-00 பணி அளவில் கொளுத்தப்பட்டன இவ்விதமாக சுதந்திர தின பகிஷ்கரிப்பு வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

பகிஷ்கரிப்பு வைபவம் வெற்றிகரமாக நடைபெற தமிழ் அரசுக் கட்சியினர் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பலனளித்தது. கடைகளில் கறுப்பு துணிகளுக்கு பஞ்சம் ஏற்படும் அளவுக்கு தமிழ் மக்கள் இந்த பகிஷ்கரிப்பில் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்றால் மிகையாகாது. கிண்ணியா, சாம்பல்தீவு நிலாவெளி, தம்பலகாமம் போன்ற ஊர்களிலும் கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டன.

பகிஷ்கரிப்புதினம் வெற்றிகரமாக நடைபெற தமிழ் அரசுக் கட்சியினர் சிவன் கோவிலடி, வீச்சுக்காரத் தெருவில் இருக்கும் பிள்ளையார் கோவிலடி, வில்லூன்றிக் கந்தசாமியார் கோவிலடி, செக்கடிப்பிள்ளையார் கோவிலடி போன்ற இடங்களில் நாளுக்கொரு இடமாக கூட்டம் கூட்டி ''நாம் ஏன் இந்த சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கிறோம்'' என்பதற்குத் தக்க விளக்கம் கொடுத்துப் பேசினார்கள். அநேகமாக உள்ளூர் பேச்சாளர்களே இத்தனை கூட்டங்களிலும் பங்குபற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தலைமைபீடத்தைக் காப்பாற்றுவதற்காக தன்னையும் ஒரு கட்சி என எண்ணிக்கொண்டிருக்கும் தமிழ் காங்கிரஸின் நிழல்கூட இந்தப் பக்கப் காண முடியவில்லை. தானும் உயிரோடு இருக்கிறேன் என்பதற்காகவாவது ஒரு கூட்டம் போட்டிருக்கலாமே! தமிழ் காங்கிரஸ் இங்கு சீண்டுவார் அற்ற நிலையில் இருப்பதற்கும், தலைவரின் மேல் உள்ள நம்பிக்கையை தமிழ் பேசும் மக்கள் இழந்துவிட்டார்கள் என்பதற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தமிழ் அரசுக் கட்சியினர்தானே இத்தனை கூட்டங்களையும் முன்னின்று நடத்துகிறார்கள், தமிழ் காங்கிரஸ் ஏன் கூட்டம் போடவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்ட நண்பர்களுக்கு இந்த விளக்கம் சிறிது ஆறுதல் அளிக்கலாம்.

சென்ற நகரசபைக் கூட்டத்தில் சுதந்திர தினத்தை பகிஷ்கரிப்பதென்றும், நகரசபைக்கு சொந்தமான கட்டிடங்களில் எதுவித கொடிகளும் பறக்கவிடக்கூடாதென்றும் ஒரு பிரேரணை ஆப்புக்கு வந்தது. ஜனாப் அபூபக்கர் (கிழக்கு மாகாணத்தவர்களில் பெரும்பான்மையினர் 'சிங்களம் மட்டுமே' என்பதை ஆதரிக்கிறார்கள் என்று கூறி 'முஸ்லிம் லீக்' தீர்மானத்தை ஆமோதித்த அரசியல் பேதை) பேசுகையில், இது அவசியமற்ற முயற்சி எனக் கூறியதோடு, தான் ஏன் 'சிங்களம் மட்டும்' என்ற பிரேரணையை ஆமோதித்தேன் என்பதற்கு விளக்கமும் கொடுத்தார். அவரின் சமாதானம் ஒரு போலிச் சமாதானம் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக கூட்டத்தில் குழுமியிருந்தோர் எள்ளிநகையாடினர். அவரைத் தொடர்ந்து ஜனாப் அப்துல் ரகுமான 'சிங்களம் மட்டும்' என்ற பிரேரணையை 'முஸ்லிம் லீக்' தீர்மானித்தது முற்றிலும் சரியே என அதற்கு வக்காலத்து வாங்கிப் பேசினார். இந்தச் செய்கை அவரை இது கால வரை ஆதரித்து வந்த தமிழ் பேசும் மக்களிடையே வெறுப்பையும், அரசியல் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக அவரை அவர் தொகுதியில் உள்ள தமிழ் பேசும் மக்கள் பதவியினின்று அகற்றுவதற்கு ஒரு கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக பேசிக்கொள்கிறார்கள். மற்ற அங்கத்தவர்கள் மேற்படி தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தனர். எனவே தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிலைமை இப்படியிருக்க சுதந்திர தினத்தன்று நகரசபைக்கு சொந்தமான மீன் சந்தைக் கட்டிடத்தில் சிங்கக் கொடி (தேசியக் கொடியல்ல) ஏற்றப்பட்டு, கடைசிவரை அது அகற்றப்படாமல் அப்படியே காட்சி கொடுத்தது. இந்த சமாச்சாரம் காட்டுத்தீப்போல் நகரெங்கும் பரவி ''இதென்ன ஏட்டளவில் தீர்மானமா?'' 'நகரசபையின் தீர்மானத்திற்கு முரணாக நடந்துகொண்ட இந்த நாசகாரர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?'' 'பொலீசுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகார் செய்து கொடியை அகற்றும் நடவடிக்கைகளில் ஏன் இறங்கவில்லை?'' ''இது விஷயமாக தலைவர் மௌனம் சாதிப்பது ஏன்?'' ''அவர் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார் அப்பா?'' என்பன போன்ற கதைகள் நகரின் நாலாபக்கங்களிலும் அடிபட்டன. நகரசபைத் தலைவரிடம்கூட செய்தி அறிவிக்கப்பட்டதாம். ஆனால் மாற்றம் கிடைக்கவில்லை. ஏமாற்றம் தான் கிடைத்தது. இதற்கிடையில் ஒரு சாரார் நாமும் ஏன் மீன் சந்தையில் ஒரு கறுப்புக் கொடி ஏற்றக்கூடாது என துடியாய்த் துடித்தனராம். ஆனால், ''யாரோ சிலர் சட்டத்தை மீறுகிறார்கள் என்பதற்கு பதில் நாமும் ஏன் சட்டத்தை மீறவேண்டும். நாம் கண்ணியமாகவும், கட்டுப்பாடாகவும் நடந்துகொள்வோம். எல்லா நிகழ்ச்சிகளையும் திருகோணமலை மக்கள் கண்ணுற்றுக் கொண்டுதானே இருக்கிறார்கள். சமயம் வரும்போது யார் யார் என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் பிடிக்காது'' என்று கூறி துடித்துக்கொண்டிருந்த இளைஞர் கூட்டத்தை சமாதானப்படுத்தினாராம் ஒரு பெரியவர்.

தமிழரசுக் கட்சியினர் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் பொதுமக்களிடையே குறிப்பாகப் பெற்றோர்களிடையே நல்ல ஆதரவைப் பெற்றது. அதன் காரணமாக தங்கள் குழந்தைகளை சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொள்ள அனுமதிப்

(13-ம் பக்கம் பார்க்க)

இளவாலைப் "பெட்டைகள்" செய்த பெருங் கூத்து

வாலிபர்களாகிய நீங்கள் இன்று அற்புதமான காரியத்தைச் சாதித்து விட்டீர்கள். சக்தி நிரம்பிய அரசாங்கமே இன்று உங்கள் ஒற்றுமையைக் கண்டு தலைகவிழ்ந்து மறைந்துகொண்டது. வாலிபர்களைப் ''பெட்டைகள்'' என்றழைத்த அரசாங்கப் பெருமக்களில் ஒருவரின் சாயலைக் கூட இவ்வேளை கல்லூரி மைதானத்தில் காண முடியாமல் இருப்பது வருந்தத் தக்கது. இவ்வாறு இளவாலை வாலிப முன்னணியின் ஆதரவில் நடந்த பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசியபோது, திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வட மாகாணமும் கீழ்மாகாணமும் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்து, அது தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சோகம் நிரம்பிய துக்க தினமாகக் கழிக்க, இளவாலையில் மாத்திரம் இப்பகுதிக் காரியாதிகாரியும் கிராம விதானையும் கிராமச்சங்கமும் ஒரு சுதந்திர விழாவைக் கொண்டாட வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு நின்றார்கள். விதவித விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதாகவும் மாட்டுச் சவாரிகள் விடுவதாகவும் செய்திகள் விளம்பரமாயின. இதை எதிர்பார்க்காத இளவாலை இளைஞர்களும் வாலிபர்களும் ஒன்று திரண்டபோது இந்தப் பெட்டைகள் செய்வதை இருந்து பார்ப்போம் என்று அரசாங்க சேவகத்திலுள்ளவர்கள் மார்பில் தட்டினார்கள். பொலிசாரின் வாகனங்கள் உரோந்து சுற்றின, வாலிப முன்னணியாரிட்ட துண்டு விளம்பரங்கள் கிழிக்கப் பட்டன. 4-ந் திகதி இளவாலையின் வீடுவாசல்களிலும் சட்டை தொப்பிகளிலும் கறுப்புக் கொடிகள் தொங்கின. வாலிபரின் உள்ளத்திலிருந்த கறுப்பு வெளியில் பிரவாகமெடுத்தது. சாயந்திரம் 3 மணி போல் இளவாலைச்சந்தியில் நூற்றுக்கணக்கான தமிழ் அன்பர்களும், வாலிபர்களும் ஒன்றுதிரண்டு கொடிகளுடன் நின்றபோது திரு அ. அமிர்தலிங்கம் வந்து சேர்ந்தார் அமைதியான ஊர்வலத்தின் பின்னர் கல்லூரிமைதானத்திற் கருகில் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடந்தேறியது கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகித்தார். பல அன்பர்கள் அவரைத் தொடர்ந்து பேசியதும் விழாச் சிறப்பாக நிறைவுற்றது. எதிர்பார்த்திருந்த களியாட்ட விழாக்கள் எதுவும் நடைபெறவில்லை.

-நமது நிருபர்

பணத்திற்கேற்ற பெறுமதி

B S A. பைசிக்கிள் ஒன்று உங்களிடம் இருக்கும்பொழுது நீங்கள் கூடுதல் தோற்றத்தையும் சௌகரியத்தையும் பெறுகிறீர்கள்.

முதல்தர வேலைப்பாடுடன், உறுதியும் சரியான டிசைனும் நிர்மாணிப்பும் சேர்ந்து உங்கள் B S A. பைசிக்கிளை உங்கள் ஜீவியகாலம் பூராவும் கோளாறற்ற சுக சவாரியைக் கொடுக்ககூடியதாயிருக்கிறது.

இலகுவான தவணைமுறையில் B. S. A. பைசிக்கிளை வாங்குங்கள்.

கார்கில்ஸ்

(சிலோன்) லிமிட்டெட்,

கொழும்பு — கண்டி — நூரேலியா.

இலங்கை முழுவதும் அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள் உண்டு.

தொடர் நவீனம்:



மரணத்தின் வாயிலில்.....

"சாந்தி"

9 ஓய்வு

(4)

சுகுமார் சொல்லுகிறான்:

சுலோவை அக்கினி சாட்சியாக என் மனைவி என்று ஏற்றுக்கொண்டபோது என் மனதில் உற்சாகமில்லை. எங்களுக்கு முன்பிருந்த பிராமணன் மந்திரத்தை முணுமுணுத்தபோது நான் காண்டேகரின் அந்த மந்திரத்தைத்தான் உச்சாடனம் செய்தேன். ''புயலில் எந்த இரண்டு படகுகள் ஒன்றிற்கொன்று அருகில் வருகின்றனவோ, மிருத்தியு வாசலில் எந்தப் படகுகள் ஒன்றிற்கொன்று ஆதாரமாகின்றனவோ அவைகள் தான் வாழ்நாள் முழுதும் ஒன்றாகச் செல்லும்''. அந்தப் படகுகள் எங்கே ஒன்றாகச் செல்லும் என்று சொல்லக் காண்டேகர் மறந்துவிட்டார். ஒரு சமயம் தண்ணீரில் மூழ்கி நிலத்தை நோக்கிக் கீழே கீழே அவைகள் ஒன்றாகச் செல்லும் என்றுதான் கூற நினைத்தாரா?

வாழ்க்கை ரசமின்றிச் 'சப்'பென்று போய்விட்டால் மனிதன் முனிவனாகி விடுகிறான். அவனுக்கு இன்பமோ துன்பமோ இல்லை. சரியாகச் சொல்ல வேண்டுமானால் இன்பத்தையோ துன்பத்தையோ ஏற்றுப் பிரதிபலிக்கப்பண்ணும் சக்தியை அவன் மூளை நரம்புகள் இழந்து விடுகின்றன; இந்த நிலைமையில் இருந்த எனக்கு விவாகமாகி மூன்று மாதங்கள் எப்படியோ சென்று மறைந்தன. ஏதோ வாழவேண்டும் என்று வாழ்ந்தேன். வாழாமல் இருக்க முடியாமையால் நான் வாழ்ந்துகொண்டிருந்தேன்.

வாழ்க்கையில் நடக்கும் சில சம்பவங்கள் வச்சிரத்தால் செதுக்கியது போல மனதில் பதிந்து விடுகின்றன. எவ்வளவு முயன்றாலும் அவைகளை மறக்க முடியாதிருக்கிறது. அன்று நடந்த சம்பவமும் என் மனதில் அழியாத சித்திரமாகச் செதுக்கப்பட்டு விட்டது. என்றுதான் அதை மறக்க முடியுமோ?

''டிங்...... டிங்...ங்......டிங்...ங்...ங்......'' இரவின் அமைதியில் வீணையின் நாதம் மிதந்து வந்தது. தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் உள்ள ஓர் அயர்வில் இருந்த நான் விழித்துக் கொண்டேன். எழுந்து சற்றுக் கவனித்தேன். மீனாவின் அறையிலிருந்துதான் அந்த வீணாகானம் எழுந்தது. இந்த அர்த்த ராத்திரியில் வீணை வாசிக்க மீனாவுக்கு என்ன பயித்தியமா?

எழுந்து விளக்கை ஏற்றினேன். சுலோவின் கட்டிலை என் கண்கள் நோக்கின. சிறு குழந்தைபோல ஒருக்கணித்துப் படுத்திருந்தாள் வெண் மணலில் படரும் இளங் கொடிபோல கட்டிலில் அவள் தேகம் துவண்டிருந்தது. உணர்ச்சிகள் தூங்கும்போது முகம் சுய ஒளியுடன் விளங்கியது. சதா அவள் முகத்தில் திரையிட்டிருக்கும் களங்கத்தை அயர்ந்த நித்திரையில் காண முடியவில்லை. மரத்துப் போயிருந்த என் உள்ளத்தையும் அந்த நிர்மலமான முகத்தோற்றம் கவரத்தான் செய்தது.

கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றேன். மீனாவின் வீணையில் இருந்துவந்த நாதம் என்னை அழைத்தது. மகுடி எப்படிப் புற்றில் இருக்கும் நாகத்தைத் தன்பாலிழுக்கிறதோ அப்படித்தான் மீனா மீட்டிய வீணை இதயத்தை எவ்வளவுதான் கசக்கினாலும் மனம் அதை நோக்கிச் சென்றது. விளக்கின் ஒளி ஏன் விட்டிலைக் கவர்கிறது? விளக்கில்மோதி இறக்கை கருகினாலும் மீண்டும் மீண்டும் விட்டில் அந்த ஒளியை நாடிச் சென்று தன் அழிவைத் தேடிக்கொள்கிறதே. அப்படித்தான் என் மனமும் மீனாவின் வீணை இசையை நாடிச் சென்றது.

மறுவற்ற வெள்ளைச் சேலையைக் கட்டிக்கொண்டு மீனா ஓர் கம்பளத்தில் உட்கார்ந்திருந்தாள். முடியாமல் விடப்பட்ட தலைமயிர் அந்த வெள்ளை உடையின் மேல் அலை அலையாகப் படர்ந்திருந்தது. வீணையை லாவகமாக அணைத்து வைத்திருந்தாள். அவளுடைய கண்கள் வெறுமையைத் துருவி எங்கோ கற்பனை உலகில் நிலைகுத்தி நின்றன. தூய நீல வெளியில் மிதந்து செல்லும் முழுமதியை இடையிடையில் முகில் கீறுகள் அலசிச் செல்வதுபோல அவளுடைய முகத்தில் அவ்வப்போது இதய தாபத்தின் அலைகள் வீசின

மலர் போன்ற விரல்கள் தங்கள் பாட்டில் வீணையின் நரம்புகளை வருடின. நரம்புகளின் அசைவிலிருந்து எழுந்த நாத வெள்ளம் அந்தச் சூழ்நிலையில் அமைதியில் மிதந்து ஓர் சோக நிழலைப் பரப்பிக் கொண்டிருந்தது மீனா, சூழ்நிலை, வீணை இவை மூன்றும் ஒருமித்து சோகத்தின் முழுப் பூரணத்துவத்தையும் என்னைச் சுற்றிலும் இழையவிட்டு வேடிக்கை பார்த்தன,

ஒவ்வோர் முறை நாத அலைகள் சுருண்டு ஓமகுண்டத்திலிருந்து புகை சுருண்டு மேலே மேலே செல்வது போல் எழும்போது எனக்கு மூச்சுத் திணறியது. அந்த இசை வெள்ளத்தில்—சோக அலைகளில்— அமிழ்ந்து தத்தளித்தேன். சிவனின் முடியிலிருந்து புறப்படும் கங்கையும் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்படும் அக்கினிப் பிரவாகமும் ஒன்றை ஒன்று அழித்துவிடாமல் ஒன்றுடன் ஒன்று இழை இழையாகக் கலந்து ஒன்றாகப் போய்க் கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் அந்த நரம்புகளிலிருந்து எழுந்த இசைகள் என் மனதிற்குப்பட்டன;

என் கைகளைப் பற்றி யாரோ என்னுடன் அணைந்துகொள்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். கழுகின் 'கிறீச்' என்னும் சத்தத்தைக் கேட்டுத் தாய்க் கோழியின் இறக்கைக்குள் சென்று அணைந்து கொள்ளும் குஞ்சுபோலச் சுலோ பீதியுடன் என்னுடன் இறுக அணைந்திருந்தாள் மீண்டும் என் கண்கள் மீனாவிடம் சென்றன,

நானும் சுலோவும் தன்னை அவதானித்துக்கொண்டிருக்கிறோம் என்ற நினைவின்றி மீனா வீணையை மீட்டிக் கொண்டிருந்தாள். இதயத்தின் அடியில் மூடி வைத்திருந்த அத்தனை தாபத்தையும் குழைத்துக் குழைத்து இசைவடிவில் வீசிக்கொண்டிருந்தாள். உணர்ச்சிகளின் அதீதமான கொந்தளிப்புகளைக் கற்பனையின் எல்லைக்கு அப்பாலிருந்து இசையுடன் பின்னி மிதக்கவிட்டு அவை மிதந்து செல்வதை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் போல் தோன்றியது. யாரிடம்தான் சிதைந்துபோன தன் வாழ்வைப்பற்றி முறையிட்டாளோ?

'ட்றிங்' — வீணையின் ஏதோ ஒரு தந்தி அறுந்தது. அது எழுப்பிய அலறல் சத்தம் அங்கு நடந்த சோக நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அறுந்து சுருண்டு போன அந்த தந்தியைப் [illegible] தாள். சிரிப்பிலே எத்தனை விதவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடிகிறது! வீணையை அப்புறம் வைத்துவிட்டு அவள் எழுந்தாள். நெஞ்சின் அடியிலிருந்து இருமல் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தது மார்பைப் பலமாக அழுத்திக்கொண்டு குறுங்கிக் குறுங்கி இருமினாள் என்னுடைய கைகளும் வேதனையின அழுக்கத்தால் நிறைந்து விம்மியிருக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்தன.

மீனா தனது கைக்குட்டையால் நெஞ்சிலிருந்து 'கபக்' என்று வெளிவந்த சளியைத் துடைத்து விளக்கொளியில் பார்த்துவிட்டுச் சிரித்தாள். மின்னல் போன்று ஓர் சந்தேகம் மனதில் எழுந்தது. ஓடிச் சென்று மீனாவிடம் இருந்த கைக்குட்டையை வாங்கிப் பார்த்தேன். என்னுடன் வந்த சுலோ கைக்குட்டையைப் பார்த்துவிட்டு ''இரத்தம்!'' என்றாள் ஏக்கத்துடன். நான் வேதனை தாளாமல் மீனாவைப் பார்த்தேன். அவள் என்னை நோக்கி மெதுவாகச் சிரித்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தாள். ''சுகுமார்! இனிமேல் செய்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்பதுபோலிருந்தது அவளுடைய சிரிப்பு. என்ன விநோதமான பிறவியப்பா இந்தப் பெண். அவளுக்கு எதற்கும் சிரிப்புத்தான். சந்தோஷத்தில் சிரிப்பு. கவலையிலும் சிரிப்பு. வாழ்வில் சிரிப்பு. மரணத்தின நிழலிலும் சிரிப்புத்தான். இந்தச் சிரிப்பென்னும் ஒரே சாதனத்தால் எத்தனை மாறுபட்ட உணர்ச்சிகளை அவள் திறமையுடன் சித்திரித்துக் காட்டுகிறாள்.

இரவு முழுதும் தூக்கமே பிடிக்கவில்லை. என்னுடைய கனவுகளை எல்லாம் மீனா இடித்துவிட்டாள் என்னுடையவாழ்வுதான் சிதைந்து போயிற்று மீனாவாவது சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்து மகிழலாம என்று கனவு கண்டேன். அவளுடைய சேமத்தை ஒட்டியாவது வரண்டுபோன வாழ்வைப் பற்றிக்கொண்டிருந்த எனக்கு இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. விதி ஒரு புறம் சதி செய்தது. மீனா இன்னொரு புறம் சதி செய்கிறாள். ''புயலில் எந்த இரண்டு படகுகள் ஒன்றிற்கொன்று அருகில் வருகின்றனவோ மிருத்தியு வாசலில் எந்தப் படகுகள் ஒன்றிற்கொன்று ஆதாரமாகின்றனவோ அவைகள் தான் வாழ் நாள் முழுதும் ஒன்றாகச் செல்லும்.' நானும் மீனாவும் மிருத்தியு வாசலில் நிற்கிறோம். ஒன்றிற்கொன்று ஆதாரமாக விரும்பினாலும் முடியுமா? நாங்கள் இருவரும் எங்கே ஒன்றாகச் செல்வோம். ஒரு வேளை ஆபத்தில் ஒன்றையொன்று காக்க எடுக்கும் முயற்சியே இரண்டையும் அழித்து விடுவதால் மிருத்தியு வாசலைக் கடந்து உள்ளே அந்த நித்திய வாழ்வில் இருவரும் கலந்து வெறுமையாகிவிடுவோம். அங்கேதான் நாங்கள் இருவரும் ஒன்றாகச் செல்ல முடியும் என்று மீனாவின் சிரிப்பு வியாக்கியானம் செய்தது: ''மூர்த்தியாகவாவது இரு'' என்று மூர்த்தி கட்டளையிட்டான். இன்று மீனா இப்படிக் கட்டளையிடுகிறாள்.

காலையின் சூழ்நிலையில் ஓர் அபூர்வமான சோகத்திரை கவிந்திருந்தது வெகு நேரமாகியும் மீனாவின் நடமாட்டமே காணாத படியால் அவளைத்தேடி அவள் அறைக்குச் சென்றேன். மூடப்பட்டிருந்த கதவைத் தட்டும் போது ஏற்பட்ட சத்தத்திலும் பார்க்கப் பெலமாக வரப்போகும் அதிர்ச்சியை எதிர்பார்த்து என் மனம் அடித்தது. எவ்வளவு தட்டியும் பதிலில்லாத படியால் பரபரப்புடன் கதவின் குமிழைத் திருகினேன் கதவு திறந்தது. ஆனால் மீனா எங்கே?

பூமி என்னுடைய காலின் கீழிலிருந்து நழுவிவிடுவது போலிருந்தது விழுந்துவிடாமல் கதவு நிலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அறையை நன்றாகப் பார்த்தேன் கட்டிலில் அன்றிரவு மீனா தூங்கின அடையாளமே இல்லை. எல்லாம் வைத்தது வைத்தபடி இருந்தன மீனாவைமட்டும் காணவில்லை. எங்கேதான் சென்றிருப்பாள்? துக்கம் தொண்டையை அடைத்தது

மேசைமீது ஓர் கடிதம் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதை எடுத்துப் பிரித்துப் பரக்கப் பரக்க வாசித்தேன்.

''சுகுமார்!

இந்தக் கடிதத்தை வாசித்ததும் உங்கள் இதயம் துயரத்தால் அலறும். நான் எவ்வளவு தூரத்தில் தானிருந்தாலும் அந்த அலறலைக் கேட்பேன்; அதற்குப்பதில் கொடுக்கும் சக்தி மட்டும் என்னிடம் இருக்காது.

ஏன் ஓடிவிட்டாள் என்று கேட்கிறீர்களா? மனிதனுடைய மனம் குரங்கு போன்றது. எதிலும் நிலையாக நிற்பதில்லை. நான் எவ்வளவு முயன்றும் என் மனதை ஒரு நிலைப்படுத்த முடியவில்லை. சில நாட்களாக என் மனதில் ஏற்பட்ட சலனம் பெருகி ஓர் அலையாட்டமாக மாறி விட்டது. மனநிம்மதி வேண்டுமாயின் இந்தச் சூழ்நிலையிலிருந்து விலகி ஓட வேண்டும். வாழ்வின் போர்க்களத்தில் இருந்து புறமுதுகு காட்டி ஓடும் ஓர் அபலைப்பெண்தான் நான்.

என்னுடைய செய்கைகளின் பலாபலன்களை நானே அனுபவித்துத் தீர்க்கவேண்டும். என்னுடைய மனதில் ஏற்படும் சலனம் தத்தித் தத்தி சுலோவினுடையவும் உங்களுடையவும் மனதிலும் சலனததைஏற்படுத்தாதிருக்கவேண்டும் என்பதால் நான் பிரிந்து செல்லுகிறேன்.

நான் எங்கே போகிறேன், என்ன செய்வேன், என்பது எனக்கேதெரியாது: இவைகளைப்பற்றி யெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க அவகாசமேயில்லை. கரையை உடைத்துப்பெருகும் பிரளயமாகத் தன்மட்குடிசையை நோக்கி வரும் ஆற்றுவெள்ளத்தைக் கண்ட குடியானவன் 'எங்கே போவோம்'— என்ன செய்வோம்! என்ற பிரச்சனையில் ஈடுபட முடிகிறதா? அவன் திசைகெட்டு ஓடுகிறானே அப்படித்தான் நானும் ஓடுகிறேன். அருகில் உள்ள ஒரு குன்றில் ஏறிவிட்டால் குடியானவனின் மனதில் ஒருவேளை நிம்மதியேற்படும். எனக்கு நிம்மதியேற்படும் என்ற நம்பிக்கையேயில்லை. எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கவேண்டியவள் தான்.

உங்கள்
மீனா

கடிதத்தில் எழுத்துக்களைக் கண்ணீர் மறைத்தது.

அங்கு வந்த சுலோ என்னைப்பார்த்து மிரளமிரள விழித்தாள். கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டு அப்பால்நகர்ந்தேன். பேச்சு

(13-ம் பக்கம் பார்க்க)

மலச்சிக்கலுக்கும் மூலவியாதிக்கும்
ரிஷி லேகியம்
ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்

இதனைச் சாப்பிடுவதால் 9வகையான மூலரோகங்களும் அதற்குக் காரணமான மலச் சிக்கல்கள், அவற்றால் ஏற்படும் உபாதைகளும் பூரணமாகத் தீர்ந்து போகும். மூலமுளைகள், இரத்தம், சீழ், பவுந்திரம், உள்மூலம், வெளிமூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினால் உண்டாகும் உபாதைகள், தேக மெலிவு, கை கால் தேக எரிவு, கடுப்புகள், வாய்வு ரோகங்கள், இரத்த அசுத்தத்தால் உண்டாகும் தோலைப்பற்றிய வியாதிகள், சூதக ரோகங்கள், யாவும் தீரும். கேட்லாக் இனமாக கொடுக்கப்படும்.

30நாள் மருந்து ரூ. 5-50 15நாள் மருந்து ரூ. 3-00
தபால் செலவு சதம் 85.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.

சோல் ஏஜண்டு:-
எஸ். சுப்பிரமணியம் அன் கோ.
55, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கம்பனுக்கீடான கவிவள்ளல்களைத் தந்த இஸ்லாமிய இனம்

இன்று "மொழிமாறு" நாடகம் நடத்தத் துணியும் தலைவர்களைக் கொண்டிருப்பது வெட்கக்கேடு

தமிழ் வளர்த்த முஸ்லிம் கவிகளின் அடிச்சுவட்டில் அன்னை மொழியை அரியணை ஏற்றுவோம்

பல்வேறு சமயத்தவரும், பல்வேறு காலங்களில் பல்வேறு துறைகளில் தமிழ் மொழியை வளர்த்துள்ளனர். உலகப் பொது அறிவு நூலான திருக்குறள், கற்பை வீரத்தைப் போற்றும் சிலப்பதிகாரம், அன்பு, அஹிம்சை ஒழுக்கம், உண்மைத்துறவு ஆகியவைகளை வலியுறுத்தும் மணிமேகலை ஆகிய நூல்கள் தமிழ்வளர்ச்சிக்கு பெருமளவு காரணமாயிருந்ததுபோல—சீவக சிந்தாமணி, வீரசோழியம், தொல்காப்பியம், நேமிநாதம்போன்ற நூல்கள் நமது மொழியின் சிறப்புக்குத் துணைநின்றதுபோல—விஞ்ஞான நூல்கள், அகராதிகள், தினத்தாள்கள், சஞ்சிகைகள் முதலியன தமிழில் ஏற்பட கிறிஸ்தவர்கள் காரணமாயிருந்ததுபோல இலக்கியம், பொதுவியல், உடற்கூறு, வசனநூல் ஆகியவைகளைத்தந்து இஸ்லாமியர்களும் பெருமளவு தமிழுக்குத் தொண்டு செய்துள்ளனர்:

இஸ்லாமியர்களின் தாய்மொழி எதுவெனச் சந்தேகம் தோன்றியிருக்கும் சர்ச்சைக்குரிய இற்றை நாளிலே இஸ்லாமியப் புலவர் பெருமக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழ் உணர்வோடு ஆர்வத்தோடு தமிழ் வளர்ச்சிக்குச் செய்துள்ள சேவைகளை எண்ணினால் நாம் ஆச்சரியப் படாமலிருக்க முடியாது. மதத்தை வலியுறுத்தும் நூல்கள் மட்டுமல்லாது, உடற் கூறு பற்றி இல்லற வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள் பற்றி. வாழ்க்கை முறை பற்றி, ஒழுக்கம், வீரம் நீதி முறை இன்னபிற பல்வேறு கருத்துக்களில் அவர்கள் பல நூல்களை இயற்றியுள்ளனர். வாழ்க்கை வரலாறுகள், நகைச்சுவை நவீனங்கள் இன்னபிற ஏடுகள் மூலம் இஸ்லாமியப் பெரும் புலவர்கள் தமிழுக்கு செய்துள்ள தொண்டு தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணி மிகப் பெரிது—மகத்தானது.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய கம்பராமாயணம் தமிழுக்கு சிறப்புத் தந்தது—தமிழ் வளரத் துணைநின்றது எனக் கொள்வதானால் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய "சீறாப்புராணம்" அதைவிட எந்தவிதத்திலும் குறைவில்லாது தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரிந்ததெனத் துணிந்து கூறலாம். 5027 பாடல்களையும் 92 படலங்களில் புகுத்தி மூன்று காண்டங்களாக்கித் தரப்பட்டுள்ள சீறாப்புராணம், கவிநயம் நடை ஆகியவற்றில் கம்பராமாயணத்தோடு ஒத்திருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த எட்டயபுரத்து சமஸ்தான வித்துவானும், வடநாட்டு வாலைவாரிதியின் கர்வத்தைபடக்கி வெற்றி கண்டவரும், படிக்காசுப் புலவர் கந்தசாமிப் புலவர் போன்றாரின் கூட்டத்தைச் சேர்ந்தவருமான உமறுப் புலவர் அவர்களியற்றிய இந்நூல் முகம்மது நபியின் வாழக்கை வரலாற்றைக் கூறுவதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த குலாம் காதிறு நாவலர் அவர்கள் எழுதிய நூல்' மதுரைத் தமிழ்ச் சங்கத்துஆற்றுப்படை'இதில்தமிழகத்தின் பழமைப் பண்புகளையும் மதுரைமாநகரின் சிறப்பையும் மதுரை செல்லும் வழிதோறுமுள்ள இயற்கைக் காட்சிகளின் வனப்பையும் சிறக்கக் காணலாம். அத்தோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புப் பற்றியும் ஆங்கு அமரத் தகுதி பெற்ற புலவர் பெருமக்களின் கல்விப் பெருக்கு பற்றியும், பாண்டித்துரைத் தேவரின் புகழ் பற்றியும் கற்பனை நயத்தோடு கூறியுள்ளார் குலாம் காதிறு அவர்கள்.

ஏ. ரகுமான்

'ஒருவனே தேவன்' என்ற கருத்தை வலியுறுத்தி இயற்றப்பட்ட நூல் "நபிநாயகம் பிள்ளைத் தமிழ்" இதில் மக்கமா நகரின் சிறப்பை அழகொழுகும் தமிழில் தருகிறார் புலவர். இந்நூலை இயற்றியவர் தென்காசியை சேர்ந்த வடகரையூர் செய்யது மீருலெப்பையின் மைந்தரும் சிறந்த தமிழ்ப் புலவருமான செய்யது அனபியா சாகிபு என்பவராவர். இவரது நூலில் தமிழ்மீது அவருக்குள்ள பற்றையும்மொழி வளர்க்க அவருக்கிருந்த ஆர்வத்தையும் சிறக்கக் காணலாம்.



அடுத்து வீரத்தைப் போற்ற எழுதப்பட்ட நூல் "பப்பரத்தி அம்மானை" இதில் இஸ்லாமியத் தளபதிகளில் ஒருவரும் முகம்மது நபியின் மருமகனுமான அலியின் வலிமையைப் பற்றியும் அவரது போர்த்திறமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. புலவர் கூறும் வலிமையும் வீரமும் அவர் எடுத்தாளும் தமிழ் மொழியின் ஆற்றலால் மேலும் சிறப்படைவதை இந்நூலில் காணலாம். 1704ல் இந்நூல் இயற்றப்பட்டதாகக் கூறுவர். இதை இயற்றியவர்: மதுரையைச்சேர்ந்த உசைநயினாரின் மகன் செய்யிது மீருப்புலவர் என்பவர்.

இஸ்லாமியக் கவிக்குயில் யாத்த நூல்களில் அந்தாதி இனத்தைச் சேர்ந்த நூல்கள் பலவற்றைக் காணலாம். இவ்வந்தாதிகளில் சிறப்புற அமைந்தது "திருமதீனத் தந்தாதி" இது மதீனமா நகரைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். இஸ்லாமிய அரசரின் முதல் தலைநகரான மதீனா நகரின் நகரக் காட்சிகளை இந்நூல் விரிவாகக் கூறுகிறது இந்நூலை இயற்றியவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பிச்சை இபுராகீம் புலவர் அவர்கள். இவரது அறிவுப் பெருக்கையும் தமிழாற்றலையும் கண்ட சான்றோர்கள் "இவருக்கு இலக்கணக் கடல்" எனச் சிறப்புப் பெயர் கொடுத்துப் போற்றி வந்தனர். ஏனைய நூல்களைப் போலில்லாது புலவரவர்கள் தமது நூலில் தனித்தமிழைக் கையாண்டிருப்பதே தநாக்குங்கால் அவருக்குத் தமிழ்க் காதலின் மீது எத்துணைப் பற்றுள்ளதென்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

மக்கா நகரின் சிறப்பைக் கூறுவது "திருமக்காத்திரிபந்தாதி" பாண்டித்துரைத் தேவரால் மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தில் தலைவராகக் கடமையாற்றிய "வித்வான் குலாம் காதிறு நாவலர்" அவர்கள் இந்நூலின் ஆசிரியராவார். 1895ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு அச்சகத்திலிருந்து இந்நூல் வெளிவந்ததாகக் கூறுவர். ஆனால் ஏனைய அந்தாதிகளுக்கு உரை இருப்பதுபோல இந்நூலுக்கு உரை இல்லாமல் போனது பெருங்குறையாகும்.

பிற நாட்டுப் பேரிலக்கியங்களைத் தமிழ்ப் படுத்திய பெருமையும் முஸ்லிம்புலவர் பெருமக்களுக்குண்டு; இந்த வகையில் அரபி மொழிகளிலுள்ள பல நூல்களைத் தழுவித் தமிழில் தந்தவர்களில் கீழக்கரையைச் சேர்ந்த செய்யிது லெப்பை ஆலிம் அவர்கள் முக்கியமானவர். இவரது பணிகளைக் கூறிட இன்றும் நிலவி வரும் பல கும்மிப் பாடல்களைக் குறிப்பிடலாம்.

தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்தத் தங்கக் கட்டிகளை தொட்டிலிட்டுப் பாடும் தாலாட்டுப் பாடல்கள் பல இஸ்லாமியக் கவிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன. இத்தகைய தாலாட்டுப் பாடல்களில் ஒன்று: ஐந்து தாலாட்டுக்களைக் கொண்டமைந்த "பஞ்சரத்ன தாலாட்டு" எனப்படும். இந்நூலை இயற்றியவர் மேலப்பாளையத்து "காலை அசனலிப் புலவர்" என்பார். பட்டிணத்தார் பாடல் போன்றமைந்துள்ள இத்தாலாட்டுப் பாடல்களில், உடற்கூறுபற்றியும் சுகாதார முறைபற்றியும் பல்வேறு சிறந்த கருத்துக்கள் மிளிர்வதைக் காணலாம்.

செவிகைப்பச்சொற் பொறுக்கும் பண்புடை வேந்தர்களின் ஆட்சி முறைபற்றிக் குறள் தந்த கோமான் வள்ளுவர் கூறிய கருத்துக்கிணங்க நெறியாட்சி மன்னர் ஒருவரின் சிறப்பியல்புகளைக் கூறுவது "பதுஹுஹான் அசுகாபிமாலை." இதனை வேதாளையூர் கப்பல் நயினாரின் மகன் கொத்தலகான் புலவர் என்பார் இயற்றியுள்ளார்.

பெற்றெடுத்த தாய்தந்தையராலும் தான் பெற்ற மைந்தனாலும் நீதியின் முன்னே யாவரும் சமமே" என்ற உயரிய நோக்கோடு, தான் பெற்ற மைந்தனையே தண்டித்து நீதியை நிலைநாட்டிய இரண்டாவது இஸ்மாமியத் தலபதி உமறுவின் நீதி நேர்மையை சிறக்கக் கூறுவது "அபூஷகுமா மாலை" இதனை இபறறியவர்: திருப்பாலைக்குடி செய்தக்காதிப் புலவர் அவர்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையைச் சிறப்

(10-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அச்சு வேலைகளுக்கு
அழகான எழுத்துக்கள் அவசியம்

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

10 பொயிண்ட் ரோமன்
10 பொயிண்ட் போல்ட்
12 பொயிண்ட் ரோமன்
12 பொயிண்ப் போல்ட்
14 பொயிண்ட் போல்ட்
18 பொயிண்ட் போல்ட்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் டைப் பௌண்டரி,
194 ஏ, தட்டாதெரு, கொழும்பு—12.

தமிழில் தபாற் கல்வி
★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி
ஆகியன ஆறு மாதங்களில் போதிக்கப்படுகின்றன;

G. C. E.-கு உரிய
56 ஆங்கிலக் கட்டுரைகள் ரூ: 8-00
50 தமிழ்க் கட்டுரைகள் ரூ: 8-00

விவரங்களுக்கு எழுதுக:
S. KUMARASWAMY, B. A. (Cey.),
SHANTI COLLEGE,
7 - 18th Lane, Colpetty,
COLOMBO - 3.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்
நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் திரும்ப சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00
வி. பி. பீ செலவு வேறு
புரொப்ரைட்டர்: எம். பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

சுதந்திரன்
SUTANTIRAN

1956 பெப்ரவரி மாதம் 12ந் திகதி

194 ஏ, தட்டார தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

மறவாமை வேண்டும்

‘‘பழைய கால சம்பவங்களையெல்லாம் மறந்துவிட்டு இந்த நெருக்கடியான நேரத்தில் எல்லோரும் ஒற்றுமையாக நிற்க வேண்டும்’’ என்பது தமிழ்ப் பேசும் பொதுமக்களுக்கும், அவர்தம் அரசியல் தலைவர்களுக்கும் சிலர் கூறும் புத்திமதியாகும்.

இப்படிப் புத்திமதி கூறும் பெரியார்கள் நல்ல எண்ணத்தோடுதான் கூறுகிறார்கள் என்பதில் நமக்கு துளிகூட சந்தேகமில்லை. ஆனால் அரசியலில் நல்ல எண்ணம் மட்டும் இருந்தால் போதாது; அப்படி நல்லெண்ணத்தோடு கூறும் புத்திமதி எவ்வளவுதூரம் நற்பயனை அளிக்கும் என்பதையும் தீர்க்கமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரே நோக்கத்தோடு எல்லோரும் ஒற்றுமைப்படக்கூடுமானால் மிகவும் நல்லது: அந்த ஒற்றுமையும் இடையில் குலைந்துபோகாமல் நிலைபெற்று நிற்கக்கூடுமானால் அதைவிட நல்லது: நிலையான ஒரு நோக்கம் இல்லாமல், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவது என்பதையும் வெற்றி பெற்ற பின் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் தத்தம் போக்கில் பிரிந்து போகலாம் என்பதையும் உள்மனதில் வைத்துக்கொண்டு ‘‘ஒற்றுமை, ஐக்கியம்’’ என்று வெளிவேஷம் போட்டு வாக்காளர்களை ஏமாற்றுவது படுபாதகமான துரோகச் செயலாகும். இப்படியாக போலி ஒற்றுமைக் கோஷம் போடும் வெளிவேஷக்காரருக்கு உடந்தையாக இருப்பவர்களும் ஈற்றில் பொதுமக்களை ஏமாற்றிய குற்றத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும்.

‘‘பாம்பின் கால் பாம்பு அறியும்’’ என்பது பழமொழி. அரசியல்வாதிகளின் சூழ்ச்சித் திட்டங்களை அறியக்கூடியவர்கள் அரசியல்வாதிகள்தான். வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணக்கூடிய கள்ளங்கபடற்ற பொதுமக்களை, ‘‘ஐக்கியம் ஒற்றுமை’’ என்ற போலிக் கோஷங்களினால் மீண்டுமொருமுறை ஏமாற்றுவதற்கு அரசியல் பச்சோந்திகளின் அந்தரங்கம் அறிந்தவர்கள் ஒத்துப்போக முடியுமா? தங்களுடைய கடந்த காலத் தவறுகளுக்கு மூடுதிரை போட்டு, நிலையாக நின்றவர்களின் நற்சாட்சிப் பத்திரத்தையும் பெற்று, பின்பும் ஒருமுறை பொதுமக்கள் முன் முகங்காட்ட முனையும் கபட நாடக அரசியல் தலைவர்கள் சிருஷ்டிக்கும் பொறிக் கிடங்குதான் ‘‘ஐக்கியம், முன்னணி’’ என்ற ஆசைவார்த்தைகளில் மறைந்து கிடக்கிறது என்பதை எதிர்காலம் தீர்மானிக்கும்.

தமிழ்ப் பேசும் தலைவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக எதிர்த்து நின்றால் சிங்கள மக்கள் சற்று யோசிப்பார்கள், பயப்படுவார்கள் என்று சிலர் கூறுகிறார்கள்: ஆனால் இந்த ஞானம் இப்போதுதானா உதிக்க வேண்டும்? அதுவும் பொதுத் தேர்தல் சமீபித்து வரும் நேரத்தில்தானா இந்த புதிய உண்மை பழைய ஒத்துழைப்பு விபீஷணர்களுக்குப் புலனாகிறது? தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட முதற் கணை பிரஜாஉரிமை வாக்குரிமைச் சட்டங்களாகும். அதைத் தொடர்ந்து சிங்களக் குடியேற்றம். டில்லியில் நிறைவேற்றப்பட்ட பிரதேச பாஷைக் கொள்கை, பிரிட்டிஷ் இராணியார் முன்பு தமிழ் மொழி புறக்கணிப்பு இப்படி எத்தனையோ கணைகள் தொடுக்கப்பட்டன. அப்போதெல்லாம் இந்த ஒற்றுமை எதிர்ப்பு எங்கே போயிற்று? அந்த சந்தர்ப்பங்களில் ஒரு பொதுத் தேர்தல் அண்மையில் இல்லை என்ற காரணத்தால் யாரும் ஒற்றுமை எதிர்ப்பைப்பற்றியும், ஐக்கிய முன்னணியைப்பற்றியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளையும், தமிழ் மொழியின் எதிர்காலத்தையும்விட ஆட்சியாளர் இட்ட பிச்சைப் பதவிகள்தான் மேல் என்று எண்ணியிருந்த கோஷ்டியினர்தான் இன்று தியாகிகளாகவும், வீரர்களாகவும் நடிக்கப் பார்க்கிறார்கள்: வெள்ளம் தலைக்குமேல் போன பின், ராஜினாமா நாடகம் நடத்தி, ஐக்கிய முன்னணி அமைத்து அணை கட்டத் திட்டமிடுகிறார்கள். இவர்களை எப்படி நம்பி ஒற்றுமைப்படுவது?

ஒற்றுமைப்பட்டால் சிங்களவர்கள் பயப்படுவார்கள் என்ற கூற்றில் உண்மை இருக்கிறது. ஆனால் சிங்களவர்களைப் பயமுறுத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு ஒற்றுமைப்படுவதில் பயனில்லை: ஒற்றுமைப்பட்டு, தொடர்ந்து ஒற்றுமையாக நின்று போராட வேண்டும்; போராடக்கூடிய ஸ்திரம்வாய்ந்தவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும்: இன்னும் அரசாங்கத்தின் அந்தரங்க கையாட்களாக விளங்கும் ஐந்தாம்படைப் பேர்வழிகளையும் சேர்த்துக்கொண்டு நாம் ஒற்றுமைப்பட்டுவிட்டோம் என்று போலி வேஷம் போட்டால், தமிழ்ப் பொதுமக்கள் ஏமாறக்கூடும், ஆனால் இந்தப் போலி ஒற்றுமையைக் கண்டு, சிங்கள மக்கள் பயப்படுவதைவிட, சிரிக்கத்தான் செய்வார்கள்.

‘‘நமது கையாட்களே உள்ளே இருக்கும்போது, இவர்கள் காட்டும் ஒற்றுமைப் பூச்சாண்டி நம்மை என்ன செய்துவிட முடியும்?’’ என்று ஆட்சியாளர் தமிழ்ப் பேசும் மக்களை எள்ளி நகையாடுவார்கள்; ஐக்கிய முன்னணியில் இடம் பிடித்துக்கொண்ட ஐந்தாம்படைப் பேர்வழிகள் சிலர் மீண்டும் மந்திரிப் பதவியென்ற எலும்புத் துண்டைக் கௌவிக்கொண்டு அரசாங்க தாஸர்களாகிவிட்டால் ஐக்கிய முன்னணி வெறும் கேலிக்கூத்தாகவே முடியும்.

தமிழ்ப் பேசும் பொதுமக்களும், தலைவர்களும் பழைய கால சம்பவங்களை மறந்துவிட வேண்டும் என்று செய்யப்படும் துர்ப்போதனையையும் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தனி மனிதனாக இருந்தாலுஞ் சரி, அல்லது ஒரு இனமாக, ஒரு சமுதாயமாக இருந்தாலுஞ் சரி கடந்தகால சம்பவங்களை ஒருபோதும் மறந்துபோகலாகாது; கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்கள்தான் ஒரு மனிதனுக்கோ, ஒரு இனத்துக்கோ அனுபவம் என்ற மதிப்பிய செல்வத்தைத் தேடிக்கொடுக்கின்றன. கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளையும், பிழைகளையும் மறந்துவிடாமல், நினைவுகூர்ந்து ‘எதனால் இந்தத் தவறு ஏற்பட்டது? எதனால் இந்தப் பிழை ஏற்பட்டது?’ என்று அலசி ஆராய்ந்து திரும்பவும் அதே தவறை, அதே பிழையைச் செய்யாமல் தற்காத்துக்கொண்டால்தான் எதிர்காலத்திலேனும் சரியான வழியில் அடியெடுத்து வைப்பது சாத்தியமாகும்.

பழங்காலத் தவறுகளை மறந்துவிட்டால் எதிர்காலத்திலும் அத்தகைய தவறுகள் ஏற்படாவண்ணம் தப்பிக்கொள்ள முடியாது. எனவே மறவாமை வேண்டும் என்று தமிழ்ப் பேசும் மக்களையும், தலைவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

“காகமும் வடையும் நரிகளும்!”

புதிய கதை


வாக்காளர்
நரி அண்ணாவே உங்கள் ‘‘பொன்னா’’வின் பேச்சை இன்னமும் நம்பலாமோ? கா. கா. கா
தமிழர் ஐக்கிய முன்னணி

வாக்காளர் என்ற காக்காய் வடையை வாயிலே வைத்து ஏமாந்த காலம் மலையேறி விட்டது. இப்போது வாக்குச் சீட்டு என்னும் வடைகள் அடங்கிய தட்டு கையிலே இருக்கிறது. நரிகள் இனியும் ஏமாற்ற முடியாது.

◆ ◆ ◆

ஆர். ஜி.-ஜே. ஆர். மோதலின் புதிய வளர்ச்சி

டட்லி வீட்டின் முன் புத்த பிக்குகள் சத்தியாக்கிரகம்?

(நமது நிருபர்)

களனித் தொகுதியில் திரு ஜே ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எதிராக தனது மகன் ஆர். ஜிக்காக திருமதி எப். ஆர். சேனநாயகா (காலஞ்சென்ற எப். ஆர். சேனநாயகாவின் பாரியார்) நேரடியாகவே தேர்தல் இயக்கத்திற்குத் தலைமை வகிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆர். ஜி. — ஜே. ஆர். மோதுதலே இந்தத் தடவையுள்ள பரபரப்பான தேர்தல் மோதுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தேர்தலில் நடுநிலைமை வகிக்குமாறு சேர் ஜோன் கொத்தலாவலை திருமதி சேனநாயகாவை (திருமதி சேனநாயகா சேர் ஜோனினது தாயாரின் சகோதரி) கேட்டுக் கொண்டிருந்தபோதிலும் அவர் அதை நிராகரித்து விட்டார் என்றே தெரிகிறது. திரு ஜே. ஆர். ஜெயவர்தனாவை அரசியலிலிருந்து துரத்தும் இயக்கத்திற்குதான் தலைமை வகிக்கப்போவதாக திருமதி சேனநாயகா பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், திரு டட்லி சேனநாயகா மீண்டும் அரசியலில் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரி ஒரு கோஷ்டி புத்த பிக்குகள் முன்னைநாள் பிரதமரின் வாசஸ்தலமான ‘‘வூட்லன்ட்’’ஸில் உண்ணாவிரத மிருக்க திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது. புத்தபிக்குகளின் கோரிக்கை வெற்றிபெற்றால் திரு டட்லி மீண்டும் அரசியலில் குதிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டட்லியின் அரசியல் ராஜினாமா கொத்தலாவலையை பரபரப்பாக முறியடிப்பதற்கான திட்டமிட்ட நாடகமாக இருக்கலாமோ என்றும் சில அரசியல் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

திரு டட்லி மீண்டும் அரசியலுக்கு வருவதாக இருந்தால் இது நாட்டின் இன்றைய அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்றும். இரண்டு சேனநாயகாக்களும் திரு பண்டாரநாயகாவுடன் கூட்டுச் சேர்ந்து தமது அபேட்சகர்களை தேர்தலுக்கு நிறுத்துவார்கள் என்றும் அரசியல் வட்டாரங்களில் யூகிக்கப்படுகிறது.

பாராளுமன்றம் கலைத்து அபேட்சகர் நியமனத்திற்கான திகதி நிர்ணயிக்கப்படுவதை ஒட்டி மேலும் பல ருசிகரமான நிலைகள் உருவாகலாம் என்று இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐக்கிய முன்னணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிடும், ஆகையால் அண்டிக் கெடுக்கவேண்டும் என்னும் உபாயத்தைக் கையாண்டு தமது பதவிகளைப் பாதுகாப்பதே உசிதம் என்னும் எண்ணம் கொண்டே ஐக்கிய முன்னணிப்பேச்சுக் கிளப்பப்பட்டது. அவர்களுடைய இந்த சதியாலோசனையைத் தமிழ் அரசுக் கட்சியார் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய சந்தர்ப்பங்களில் கண்டறியக்கூடியதாயிருந்ததால் ஐக்கிய முன்னணி உருவாக முடியவில்லை.’’

களனி மகாநாடு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கலாம். விளம்பரம்மூலமாக கொடுத்ததன்மூலம் வருமான வரி கட்டுவதில் இருந்தும் தப்பித்துக்கொண்டுள்ளன.

கடந்த புதன்கிழமை பிரபலமான பிரிட்டிஷ் கம்பனி ஒன்று இந்த புத்தகத்திற்கு ரூபா 20ஆயிரத்திற்கு விளம்பரம் கொடுத்ததாகத் தெரிகிறது. இதுவரை பிரிட்டிஷ் அமெரிக்க கம்பனிகள் ரூபா 50 ஆயிரத்திற்கு அதிகமாக விளம்பரம் தந்துள்ளன என்றும் சொல்லப்படுகிறது.

‘பெரிய போர தீவிலே நடந்த துக்க விழா’

4ந் தேதி சனிக்கிழமை காலை பெரிய போர தீவின் நான்கு எல்லைகளிலும் கறுத்தக் கொடி வானளாவப் பறக்க விடப்பட்டது. கடைகள் எல்லாம் மூடிக் கறுத்தக் கொடி பறக்கவிடப்பட்டது. பாடசாலைக்குப் பிள்ளைகள் போகாததால் ஆசிரியர்கள் ஏமாற்றமடைந்தனர்.

அடுத்தபடியாக பெரிய போர தீவுத் தமிழரசு வாலிப இயக்கத்தாரால் தமிழ்த் தாயின் விடுதலைக்காக கோவிலில் விசேஷ பூஜை ஒன்று நடாத்தப்பட்டது. அவ்வமயம் தமிழ்த் தாய்க்கும், தமிழ் மொழிக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இயக்கத்தாரால் அர்ச்சனைகள் நடாத்தப்பட்டது.

அதையடுத்து இயக்கப் பொதுச் செயலாளரான செல்வன் பூ. செல்லத்துரை கறுத்தக் கொடி ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கினார்.

‘‘செயின்’’ இல்லா சைக்கிள் சவாரி

தஞ்சை ஜில்லா திருக்காட்டுப் பள்ளியைச் சேர்ந்த டி. எம். அஜீஸ் ‘செயின்’ இல்லாத சைக்கிள் சவாரி செய்து காண்பித்தார். செயின் இல்லாமல் சைக்கிளில் சவாரி செய்து கொண்டு குளிப்பது, உடை மாற்றுவது, தரையில் வைத்த நாணயத்தை எடுப்பது, சினிமா பாட்டிற்கு ஏற்றவாறு நடனமாடுவது, டயருக்குள் புகுந்து வருவது போன்ற அபூர்வ காரியங்களைச் செய்து காண்பித்தார்.

யாழ்ப்பாணம் முழுவதும் பொங்கியெழுந்த பகிஷ்கார இயக்கம்

கடைகள் மூடப்பட்டன-கறுப்புக் கொடிகள் தூக்கப்பட்டன

'சுதந்திர விழா' ஏற்பாடுகள் பொல பொலத்த பரிதாபம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம்—

தன்மானத் தமிழினம் தனக்கு இலங்கை ஆட்சியாளரால் ஏற்பட்டுள்ள ஆபத்தையும் அவமானத்தையும் உணர்ந்து அவற்றைத் துடைப்பதில் உளக் குமுறலோடு ஒன்றுபட்டு எழுந்துவிட்டது. இது சென்ற சனிக்கிழமை வட பகுதியெங்கும் பிரமாண்டமான அளவில் நடந்த சுதந்திர தினப் பகிஷ்கார நடவடிக்கைகள்மூலம் பிரகடனமாகிவிட்டது.

முதலாவது அச்சுவேலியிலே அதிகாலையில் நடைபெற இரகசியமாக ஒழுங்கு செய்யப் பட்டிருந்த சைக்கிள் ஓட்டப் போட்டி கேலிக்கூத்தாக முடிந்தது. தமிழரசு முன்னணி வீரர் அதிகாலையில் அங்கு சென்று சைக்கிள் ஓட்டத்தில் பங்கு பற்ற வந்தவர்களுக்கு பகிஷ்கரிப்புப் பற்றி கூறி பங்கு பற்ற வேண்டாமென்று வேண்டியதை அவர்கள் ஒப்புக்கொண்டு எல்லோரும் வீடு திரும்பினர். இந் நிலையில் இப் போட்டியை ஒழுங்கு செய்த கிராம தலைமைக்காரர் வேடிக்கைபார்க்க வந்த சிலரை வலுக்கட்டாக போட்டியில் பங்கு பற்றும்படி வற்புறுத்தினர். பலர் அதை ஏற்க மறுத்துவிட்டனர். நால்வர் தலைமைக்காரரின் கோபத்துக்கு ஆளாகப் பயந்து ஒப்புக்கொண்டனர்.

யாழ்ப்பாண முற்ற வெளியிலே நடைபெற இருந்த பெண் வழிகாட்டிகள் (Girls guides) சாரணர், இளம் ஓநாய்கள் (Wolf culo) இவர்களின் அணிவகுப்பு நடைபெறவில்லை. தமிழ்ப் பெற்றோர் தம் பிள்ளைகளை அனுப்பவில்லை; ஆனால் கடற்படையினரும் கேடேற்ஸ்களும் மட்டும் அணிவகுத்தனர். சென்றவருடம் நடை பெற்றது போன்ற மாட்டுச் சவாரி ஒழுங்கு செய்யப்பட்டது ஆனால் ஒருவரும் மாட்டுச் சவாரிக்கு வரவில்லை. தமிழரசுக் கட்சியார் ஆங்காங்கு சென்று மாட்டுச் சவாரிக்கு வர இருந்தவர்களை தடை செய்து விட்டனர்.

யாழ்ப்பாணப் பகுதி எங்கும் கிராமங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன; பல கடைகள் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் தூக்கப்பட்டிருந்தன. சில கடைக்காரர் சுதந்திர தினம் சாப்பு விடுமுறைதினம் ஆகையால் தாம் சட்டத்தை மீறி கடையை திறக்கப் போவதாகக் கூறி கடையைத் திறந்து வைத்து கறுப்புக் கொடிகளால் நன்கு அலங்கரித்து வியாபாரம் செய்தனர்.

சுன்னாகம் சந்தை முழுவதும் கறுத்தக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அங்கு ஒரு உருவம் கறுத்தத் துணியால் செய்யப்பட்டு பொலீஸ் ஸ்தானத்துக்குப் பக்கத்தில் நாட்டி தோரணங்கள் தூக்கப்பட்டு இருந்தது. சந்தையிலுள்ள தேசிய சேமிப்பு விளம்பரம் கறுப்பு மை பூசப்பட்டு உண்மையான கறுப்பு மையப்பெட்டி அங்கே பொருத்தப் பட்டு அதில் ஐ. தே. க. என எழுதப் பட்டிருந்தது. மல்லாகம் சந்தியில் சேர் ஜோன் போன்ற உருவம் செய்யப் பட்டு கழுத்தில் கயிறு போட்டு அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது.

தாவடியிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிள் வீரர் கறுப்புக் கொடியுடன் ஊர்வலமாக யாழ்ப்பாணம் சென்று பட்டினத் தெருவெல்லாம் பவனி வந்து பலாலி ரோட்வழியாக கீரிமலை சென்று திரும்பினர். யாழ்ப்பாணத்தில் பெருந் தொகையான மோட்டார்கள் கறுப்புக் கொடிகளுடன் பவனி சென்றன. தமிழரசு கட்சியினர் ஆங்காங்கு அடிக்கடி மோட்டார் சைக்கிள், மோட்டார் வண்டி மூலம் ஓடித் திரிந்து நிலைமைகளைக் கண்காணித்தனர். அராஜகம் பலாத்காரம் என்பன ஒன்றும் நடைபெறாது அமைதியாக பகிஷ்காரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இளவாலையில் ஒரு விளையாட்டுப் போட்டியும், மாட்டுப் போட்டியும் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவ்வூர் இளைஞர்கள் காலை தொடக்கம் கறுப்புக் கொடி ஊர்வலம் நடாத்தி இளைஞர்களை அதில் பங்கு பற்றாமல் இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர்; எதுவிதமும் விளையாட்டுப் போட்டி நடத்தித்தீர்வதாக அரசாங்க உத்தியோகஸ்தர் வீராப்புப்பேசினர். மாணவர் நடாத்தும்படி சவால் விட்டனர். மாலையில் ஏதும் கலகம் ஏற்படக் கூடுமென அஞ்சிய தமிழரசு வாலிப முன்னணிப் பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கமும் ஏனைய கட்சி ஊழியர்களும் இளவாலைக்குச் சென்றனர். மாணவர்களும் பெரியோரும் அமைதியாக ஊர்வலமாககறுத்தக்கொடி சகிதம் அணிவகுத்துச்சென்றனர். ஊர்வலம் விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு வெளியான இடத்தில் கூடினர். அங்கு கூட்டம் நடைபெற்றது.

தீவுப்பகுதி மோட்டார் பஸ்களும், இளவாலைக் கூடாக ஓடிய மோட்டார் பஸ்களும் கறுத்தக்கொடியுடன் ஓடின. உடுவில் காரியாதிகாரியாலயத்தில் நடைபெற்ற கொண்டாட்டத்துக்கு மக்களை அழைக்க ஒரு சுலபமான வழியைக் கையாண்டனர் கிராமத்தலைமைக்காரர். அங்கு ''சரவணமுத்து சின்னமேளம்'' ஆகிய தாசியர் நடனம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் வருவோருக்கு மோதகம், வடை வழங்குவதாகவும் பிரசாரம் செய்யப்பட்டது. ஒரு சிலரைத்தான் இப்படியாகத் தலைமைக்காரரால் ஏமாற்றி அழைக்கமுடிந்தது. சுழிபுரம் வடக்கம்பராய் மாரி அம்மன் கோவில் வீதிகளிலும், ஊர்காவற்றுறையிலும் சுதந்திரதின பகிஷ்கார கூட்டங்கள் நடைபெற்றன.

ஒரு திட்டத்தின் அடிப்படையிலே தமிழர் ஒற்றுமை உருவாக வேண்டும்

ஐ. மு., யு. என். பியின் கூடாரம் என்கிறது கம்யூனிஸ்ட் அறிக்கை

''தமிழ்மக்களின் சக்திகள் அனைத்தும் ஐக்கியப்பட வேண்டும் என்ற தமிழ்ப் பெருமக்களின் நியாயமான உணர்ச்சியை பாராளுமன்றத் தமிழ் அங்கத்தவர்கள் தங்களின் சுயநலத் தேவைகளுக்கு சுரண்ட முனைகிறார்கள். ஐக்கியமுன்னணி கவசத்தின் பின் தமது பழைய சரித்திரத்தை எல்லாம் மூடி மறைத்துவிட்டு போட்டி இன்றி பாராளு மன்றத்தில் மீண்டும் புகுந்து கொள்ள முனைகிறார்கள், அதன் மூலம் யு. என். பியுடன் பேரம் பேசவே இவர்கள் விரும்புகிறார்கள். இந்தபேரம்பேசும் படுதுரோகமான போக்குத்தான் தமிழ் மக்களை இன்றுள்ள நிலைக்குகொண்டு வந்தது என்பதை நாம் உணர்ந்துகொள்வது அவசியம்.''

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண கிளை பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் கூறியுள்ளது; கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை தொடர்ந்து கூறுவதாவது:

''இத்தகைய ஒரு ஐக்கியத்தை தமிழ்ப் பேசும் மக்கள் விரும்பவில்லை; அது அவர்களின் நலனுக்கு உகந்ததுமல்ல; ஒரு வரையறுத்த அரசியல் திட்டத்தின் அடிப்படையைக்கொண்ட ஐக்கியமே இன்று அவசியம்; அது தமிழ் மக்கள் முன் இன்று குடைசாய்ந்துள்ள ஆபத்தைத் தடுப்பதாக மட்டுமல்ல நல்லதொரு எதிர்காலத்திற்கு பாதை அமைப்பதாகவும் இருக்க வேண்டும்;

''இத்தகைய ஒரு திட்ட அடிப்படையிலல்லாது வேறெந்த வழிகளிலும் தமிழினத்தின் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்த முடியாது என்பதை அறுதியிட்டுக் கூற விரும்புகிறோம்; எனவே தமிழ் மக்களிடை தோன்ற வேண்டிய ஒற்றுமை ஒரு திட்டத்தின் அடிப்படையில் உருவாக வேண்டும்;

''இன்று யு. என். பியிலிருந்து ராஜினாமாசெய்த தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் சமஷ்டி வாதிகளுக்குமிடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகள் இத்தகைய ஒரு திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவதாகஇல்லை;

''கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பேசும் மக்களின் ஜீவாதாரமான அடிப்படை உரிமைகளுக்காகப்போராட தமிழ்ப்பேசும் மக்களிடையுள்ள சகல சக்திகளின் ஒற்றுமைக்காகவும் அதுபாடுபடும். அத்தகைய ஒரு ஒற்றுமையே வரவேண்டும்; எமது உயிருக்கு மேலான உரிமைகளுக்கெல்லாம் ஆபத்துச்சூழ்ந்துள்ள இன்று அந்த ஆபத்தை தடுக்கசகல சக்திகளினதும் ஒன்றுபட்ட இயக்கம் உருவாகவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.''

மட்டக்களப்புத் தபால்

பொலீஸ் நிலையங்களில் சிங்கக் கொடி-பொது இடங்களில் கறுப்புக் கொடி!

நடந்த எட்டு வருடங்களாகச் சுதந்திரதின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய மட்டக்களப்பு தமிழக மக்கள் இம்முறை அத்தினத்தை ஒரு துக்கதினமாக அனுஷ்டித்தனர். வீதிகள் தோறும், வீடுகள் தோறும் எங்குநோக்கினும் கறுப்புக்கொடி மயமாகவே காட்சியளித்தது; வழக்கமாகச் சிங்கக் கொடியேற்றும் இங்குள்ள சிங்களவர்களும் அரசாங்கக்காரியாலயத்தவர்களும் கூட இம்முறை சிங்கக் கொடி ஏற்றவில்லை.

சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்கும் முகமாக திருக்கோயில் தமிழுக்காகத் தாடிவளர்க்கும் அறப்போர் அணியினர் பிரமாண்டமானதொரு கறுப்புக்கொடி ஊர்வலத்தை நடத்தினர். தாடி வளர்ந்த 100க்குமேற்பட்ட இளைஞர்கள் கறுப்புக்கொடி பிடித்தவாறு சைக்கிளில் சென்றனர்.

மட்டக்களப்பு நகரில் குறிப்பிடக்கூடியவாறு கடைகள் மூடப்பட்டிருந்ததோடு கறுப்புக்கொடிகள் பறந்து கொண்டிருந்தது. பட்டணத்தின் பிரதான இடங்களில் இலங்கைப் பிரதமரின் பொம்மைகள் காட்சி அளித்தன. பிரஸ்தாப பொம்மைகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் மட்டக்களப்புப் பொலிஸார் தீவிரமாக முயன்றுவந்தனர். கல்லடி உப்போடை, நவற்குடா ஆகிய இடங்களில் வீடுகளிலும் கறுப்புக்கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்ததோடு 200க்கு மேற்பட்ட இளைஞர்கள் கறுப்புக்கொடி சகிதம் மட்டக்களப்பு நகரை நோக்கி சைக்கிளில் ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர்; பொலீஸார் தடுத்தனர்; ஆனால் பொலீஸாரின் முயற்சி எவையும் பயன் அளிக்கவில்லை. சுருக்கமாகச்சொல்லப்போனால் மட்டக்களப்பு தமிழகமே சுதந்திரதினத்தன்று ஒருஇறந்த வீடுமாதிரி காட்சியளித்தது. பல இடங்களில் அன்று உண்ணாவிரதமும்அனுஷ்டித்திருப்பதாகச் செய்திகள் எட்டியுள்ளன; சம்மாந்துறையிலும் சாய்ந்தமருதிலும் உள்ள இளைஞர்கள் சைக்கிளில் ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை கறுப்புக்கொடிகளுடன் நடத்தினர். ஆனால் மட்டக்களப்பின் அன்றையத்தினத்தைத் தொடர்ந்து இன்றுவரை பொலீஸ்பாதுகாப்பு பலமாக இருந்துவருகிறது; பல இடங்களில் பொலீஸார் கண்ணீர்ப் புகைகளுடன் ரோந்துதிரிந்தனர்;

மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்கும் முகமாக தமிழ்பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் திரு எம். கனகசுந்தரம் தலைமையில் நடந்த கூட்டத்தில் கற்குடாப் பிரதிநிதியும் முன்னாள் யு. என். பி. அங்கத்தினருமான திரு வி. நல்லையா, யு. என். பி. அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்து தமிழ்பேசும் மக்களின் உரிமையைப்பெற சத்தியாக்கிரகமே சிறந்த ஆயுதம் என்றார்; அதைத் தொடர்ந்து கல்முனைப்பிரதிநிதி. ஜனப் ஏ. எம். மீர்ஸா, மட்டக்களப்பு பிரதிநிதி திரு ஆர். பி. கதிராமர் ஆகியோரும் பேசினர்;

மட்டக்களப்பு மைதானத்தில் வழக்கறிஞர் திரு கே. டப்ளியு. தேவநாயகம் தலைமையில் பிரமாண்டமான பகிஷ்காரக்கூட்டம் நடைபெற்றது;

சுதந்திர தினத்தை எதிர்த்து மட்டக்களப்பில் வழக்கறிஞர் திரு கே. டப்ளியு. வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் மட்டக்களப்பு தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. வி. இராசதுரை பேசிக்கொண்டிருப்பதை படத்தில் காண்க.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 23.

ரொக்கப் பரிசு-ரூ 1000.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 15-2-56 பி. ப. 5 மணி

பரிசு பெற்றோர் விபரம் 26-2-56ல் பிரசுரிக்கப்படும்

சரியான விடை 19-2-56ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 6-3-56ல் செக்மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1: இது சமீபித்துவிட்டதால் அரசியல் கட்சிகளிடையே அதிக சுறுசுறுப்புக் காணப்படுகிறது;
5: ஆயுதம்
7: நிலத்தை ஐந்து.........யாகப் பிரித்திருக்கிறார்கள் பழந் தமிழ் மக்கள்
8: செயல் சூனியமாயிருந்தபோதிலும் இதனால் மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றிபெறத் துடிக்கிறார்கள் சில அரசியல் தலைவர்கள்
9: விளாமரம்
10: கவலை
11: வயதுபோனவர்களுக்கு பல்.........இயற்கை;
13. தோகை விரித்தாடும் அழகிய பட்சி.
14: எந்த அரசாங்கத்திற்கும் இது அவசியம்
16. பாடகனுக்கு தெரிந்திருக்க வேண்டியது
17: சிந்துவெளி நாகரிகம் இவர்களுடைய நாகரிகம்தான் என்பதை நிலைநாட்டியவர் ஹீராஸ் பாதிரியார்.
18: எந்த நிலையிலும் இது இல்லாமல் வாழ்க்கையை ஓட்டக்கூடியவர்களும் இருக்கிறார்கள்
19: உரல் இருந்தால் இது வேண்டாமா?
20. ''கு'' சேர்ந்தால் வாந்தியெடு என்று பொருள்படும்
21: பிள்ளை
23. நாணம்
24: பண்டிகைக் காலங்களில் இது சுட்டு சில குழந்தைகள் ஆபத்துக்குள்ளாகிறார்கள்
25. ....மீனுக்கு பெயர் பெற்றது மட்டக்களப்பு

மேலிருந்து கீழ்

1: கழுதைக்கு இது சுமப்பதுதானே வேலை
2: மனைவி
3: கடவுள்மீது கசிந்துருகிப் பாடும் பாட்டு;
4: ''இது எடுத்தவன் தண்டுக்காரன்'' என்று ஒரு பழமொழியுண்டு.
5: இந்துக்கள் விரதம் அனுஷ்டிக்கும் ஒரு திதி
6: பயத்தோடு கூடிய கலக்கம்
11: இது என்றால் ஒலிபெருக்கி வைப்பது இப்போது சகஜமாகிவிட்டது.
12: யுத்தம்
15: பல்லக்கு
16: எந்தக் காரியத்தையும் இது இல்லாமல் முடிக்கும் திறமை ஒரு சிலருக்குத்தான் உண்டு.
17: பொட்டு
18: வெளி வேஷம்
19. நத்தை
22: நாட்டு வைத்தியர்கள் இது பார்த்துத்தான் வைத்தியம் செய்வார்கள்.

1 பொ	2 து	த்	3 தே	ர்	4 த	ல்	■	5	6 தி
7		■	8	ய		■	■	9 கா	
■	10 வி		ர	ம்	■	11		த	ல்
12	■	■	ம்	■	■	ட்	■		■
13 ம			■	14	ட்	ட	ம்	■	■
ர்	■	■	15 சி	■	■	ம்	■	16	
■	17 தி		வி		ர்	■	18 ப		ம்
19	ல	க்		■	■	■	20	க்	■
21 ம			■	22	■	23 வெ	ட	க	
ரி	ம்	■	24	டி	■	25 பா		ம்	■

பிரவேசக் கட்டணம் சதம் 50

1 பொ	2 து	த்	3 தே	ர்	4 த	ல்	■	5	6 தி
7		■	8	ய		■	■	9 கா	
■	10 வி		ர	ம்	■	11		த	ல்
12	■	■	ம்	■	■	ட்	■		■
13 ம			■	14	ட்	ட	ம்	■	■
ர்	■	■	15 சி	■	■	ம்	■	16	
■	17 தி		வி		ர்	■	18 ப		ம்
19	ல	க்		■	■	■	20	க்	■
21 ம			■	22	■	23 வெ	ட	க	
ரி	ம்	■	24	டி	■	25 பா		ம்	■

இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.

1 பொ	2 து	த்	3 தே	ர்	4 த	ல்	■	5	6 தி
7		■	8	ய		■	■	9 கா	
■	10 வி		ர	ம்	■	11		த	ல்
12	■	■	ம்	■	■	ட்	■		■
13 ம			■	14	ட்	ட	ம்	■	■
ர்	■	■	15 சி	■	■	ம்	■	16	
■	17 தி		வி		ர்	■	18 ப		ம்
19	ல	க்		■	■	■	20	க்	■
21 ம			■	22	■	23 வெ	ட	க	
ரி	ம்	■	24	டி	■	25 பா		ம்	■

பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர்..

விலாசம்...

....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை..............

கட்டணத்தின் தொகை ரூ......... ச.........

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்............

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 23,
த. பெ. இ. 1183, கொழும்பு-12

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் இம்மூன்று [illegible] அனுப்பப்படவேண்டும்.

கம்பனுக்கீடான....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

புற நடாத்திச் செல்ல வழி கூறும் ஒழுக்க நூல்களும் இஸ்லாமியப் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன: ''ஒழுக்கம் விழுப்பந்தரலான் என்ற கருத்துக் கிசைய அமைந்துள்ள நூல் ''அதபு மாலை'' எனப்படும் இதனை இயற்றியவர் காயல் பட்டணத்தைச் சேர்ந்த ''சாமு நைனா லெப்பை ஆலிம் என்பார்: இதே கருத்துப்பட குருவித்துறை முகம்மது கம்சா லெப்பை என்ற பெரியார் ''அகந்தெளியு மாலை'' என்றொரு நூலை இயற்றியுள்ளார்.

''குடம்பை தனித்தொழிய
புட் பறந்தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு''

என்ற குறள் கருத்துக் கிசைய அமைந்துள்ளது. 'மரணத்துலக்க மணிமாலை' இதைப் பாடியவர் ஈழத்து 'பக்றுதீன் உசைன்'' அவர்கள்.

இஸ்லாமியச் சட்ட நூல்களும் தமிழில் இயற்றப்பட்டன. அரபி மொழியில் பாண்டித்யம் பெற்ற அரபி அறிஞர்கள்கூட போற்றுமளவிற்குச் சிறந்த முறையில் சட்ட நூல்களை இயற்றித் தந்தவர்கள் தமிழ் முஸ்லிம்களே! ''பைலுல் ரகுமான்'', ''பத்தஹுல் தய்யான்'', ''பத்தஹுல் மன்னான்,'' ''தன்பீஹிஸ்ஸாலிக்கீன்'' ஆகிய நூல்களெல்லாம் தமிழிலேயே இயற்றப்பட்டன: முறையே ஹபீபு முகம்மது ஆலிம், கீழக்கரை செய்யது முகம்மது ஆலிம், முகம்மது இபுராகீம் ஆலிம், சாகுல் ஹமீது ஆலிம் ஆகிய மேற்கண்ட சட்ட நூல்களை இயற்றியோரெல்லாம் தமிழ்ப் பேசும் முஸ்லிம்களே! இன்னும் புராணங்களை, மதக் கருத்துக்களை வலியுறுத்தும் ஏடுகள், பிரச்சார நூல்கள் போன்ற ஆயிரக்கணக்கான நூல்களைத் தந்துள்ள நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்களெல்லாம் தமிழர் தமிழர் தமிழர்களே! அவர்கள் தமிழுக்கு பல்வேறு துறைகளிலும் செய்துள்ள சேவைகளைக் கண்ணுறும்போது அவர்களுக்குத் தமிழ் மீதுள்ள பற்றை பாசத்தை எண்ணும்போது நாம் பெருமைபபடுகிறோம், பூரிப்படைகிறோம்.

செந்தமிழ்ப் பூங்காவில் பறந்து திரிந்த இந்த வானம்பாடிகள் பெற்றிருந்த தமிழுணர்ச்சி—தமிழ் ஆர்வம் இன்று எங்கே?

கல்வியே கருந்தனம்

"ரெனி"

மூளைப் பலவீனம், நரம்புப் பலவீனம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரிய ஸ்கலிதம், மூலச்சூடு, தேக வரட்சி, உஷ்ணம், ஊரல், தடிப்பு, சொறி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களை நீக்கி இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை
101, செட்டியார் தெரு,
கொழும்பு.

சிறு கதை!

''தத்துவ வாழ்வு''

—வரதன்—

பவானியிலிருந்து ஈரோடு செல்லும் பாதையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன்.

சித்திரை மாதத்துக் கடும் வெய்யிலின் கொடுமையைத் தாங்காது என் சென்னி தாழ்ந்தது. நாவரண்டது. சுற்றியும் பார்வையை ஓட்டினேன். ரோடிற்கு அருகிலேயே வளைந்து வளைந்து சென்றுகொண்டிருந்த வாய்க்கால்தான் முதலில் என் கண்களில் பட்டது. தண்ணீரைப் பார்த்த உடனேயே என் தாகம் அதிகரிக்கத் தொடங்கியது. இறங்கிக் குடிக்கலாமென்றாலோ, எருமைகள் குசாலாக அதில் மிதந்து ஏற்கனவே சேறுடன் ஓடிக்கொண்டிருக்கும் அந்த நீரை 'டீக்கடை டிக்காசனை'' மாற்றிக்கொண்டிருந்தன.

மெதுவாக சைக்கிளைத் தள்ளிக்கொண்டே பெருமாள் மலைக்கருகில் இருக்கும் மேடேறினேன். அதற்குமேல் என்னால் நடக்கமுடியவில்லை. பக்கத்திலிருந்த மரத்தில் சைக்கிளை சாத்திவிட்டு குளிர்ந்த நிழலில் உட்கார்ந்தேன். உடல் குளிர்ந்தாலும் உள்ளம் மட்டும் நீரின்றி குளிர மறுத்தது.

மீண்டும் சுற்றிப் பார்த்தேன். அருகிலேயே ஏற்றக் கிணறு இருந்தது. அதில் தெளிந்த நீர் தெரிந்தது. இருந்தும் அது நான் பருக வழியற்றதாக—மொட்டைக் கிணறாய்—வாளியோ வழியோ இன்றி இருந்தது.

அந்தக் கிணற்றை உற்றுப் பார்த்து பெருமூச்சுவிட்ட வண்ணம் தலையைத் தூக்கினேன். என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். தென்னை மரங்களுக்கு இடையில் ஒளிந்துகொண்டிருந்த அந்தக் குடிசை என் கண்களில் பட்டுவிட்டது.

கேணி மேட்டிலிருந்து இறங்கி குடிசையை நோக்கி விடுவிடென்று நடந்தேன். குடிசையைக் கண்டதும் என் நாக்கு, காய்ந்திருந்த உதட்டை நானறியாமலேயே ஈரமாக்க முயன்றது.

குடிசையின் கதவு திறந்தே கிடந்தது. தாகத்தின் ஆத்திரத்தில் பண்பைக் கூட மறந்து மடமடவென்று உள்ளே நுழைந்தேன். உள்ளே...கதைகளில் படிப்பதைப்போன்று இளமை கொழிக்கும் பூரிப்பு நிறைந்த பாவையோ, வறுமையின் எல்லைக் கோட்டிலே உழன்றுகொண்டிருக்கும் எலும்புக் கூடோ இல்லை. பின்......

வாழ்வின் பற்றைத் துறந்த ஓர் இளம் துறவி—குழி விழுந்து உள்ளே அழுந்தி இருந்த இரு நீல விழிகளை உருட்டி கூர்மையான பார்வையில் அமைதியுடன் என்னை நோக்குவதை அறிந்தேன். அவர் காவி கட்ட இல்லை. மொட்டைத் தலையோ கொட்டைக் கட்டிய கழுத்தோ அவரை அலங்கரிக்கவில்லை. அவர் சாதாரணமாக ஒரு வெள்ளைத் துண்டு கட்டி இருந்தார். ஆனால்......அடர்ந்து வளர்ந்திருந்த தாடியும் சடை விழுந்திருந்த தலையும் தான் அவரை துறவி என்று என்னை எண்ணச் செய்தன.

''வாருங்கள் நண்பரே! என்ன வேண்டும்...'' அவர் குரலிலிருந்த இனிமையும் அவர் பேசிய முறையும் என் எண்ணம் தவறு என்று எனக்கு உணர்த்தின. ''நண்பரே...!'' என்றழைக்கும் ஒருவர் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராகத்தான் இருக்க வேண்டும். எதற்காக இவர் தனிமையில் இங்கே வசிக்கிறார்?

சிந்தனை என்னுள் வளர்ந்தாலும் முதலில் வந்த காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணி ''தாகம்...'' என்றேன்.

''இப்படி இருங்கள் நண்பரே...!'' அதே இனிமையான குரலில் உபசரித்து அருகிலிருந்த இருக்கையைக் காட்டினார். தயங்கியவாறே நான் அமர்ந்ததும் அவர் எழுந்து சென்று ஒரு மண் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து தந்தார்.

''நிழல் சூழ்ந்து எளிமையுடன் குளுகுளுவென்றிருந்த அந்த இடத்தில் மண்பாத்திரத்தில் சிலுசிலுவென்றிருந்த நீர் அமுதமாக இருந்தது. காலியான பாத்திரத்தை அவரிடம் கொடுக்கும்போது ''மிக்க நன்றி'' என்றேன் உணர்ச்சியுடன்.

''எனக்கா......தண்ணீருக்கா......?'' புன்சிரிப்புடன் அவர் கேட்டார். எனக்கு அவர் கேள்வியின் தாத்பரியம் புரியவில்லை. இருந்தாலும் புரியாததை தெரியப்படுத்தலாமா? நானும் ஒரு புன்சிரிப்பு சிரித்து வைத்தேன்

அவர் பாத்திரத்தை குடிசையின் மறு அறையுள் வைத்துவிட்டு திரும்பி வந்தார். ''இன்னும் என்ன வேண்டும் நண்பரே...? பிறருக்கு உதவிபுரிவதில் உள்ள ஆர்வம் அவர் குரலில் பின்னிழைந்திருந்தது.

இப்போது எனக்கு உறுதியாகத் தெரிந்தது அவர் ஓர் துறவியாக நிச்சயம் இருக்க முடியாது பின் அவர் யார்...? வெளியில் பார்த்தேன். கடூர வெய்யில் ''அவர் யார்?'' வினாடிக்கு வினாடி அவரைப்பற்றி அறிய என் அவா பெருகிற்று.

''எனக்கு ஒரு சந்தேகம்...'' என் குரல் நீண்டு வளைந்தது.

''ஒன்றென்ன உள்ளத்திலுள்ள சந்தேகங்கள் அனைத்தையும் கேளுங்கள் நண்பரே!'' குரலில் அதே இனிமை. முகத்தில் மாறாத புன்சிரிப்பு—மனத்தை சுண்டி இழுக்கும் ஞானியின் புன்சிரிப்பு.

''தங்கள் நடைமுறையைப் பார்த்தால் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்போல் தெரிகிறது. ஆனால்......இந்தத் தனிமையான இடத்தில் பற்றற்ற துறவிபோல் தாங்கள் வாழும் காரணத்தை நான் அறியலாமா...'' சாதாரணமாகவே கரடுமுரடாக இருக்கும் என் குரலில் அந்த இனிமை எப்படி குடியேறிற்று. அந்த இடத்தின் மகிமைதானா இந்த மாற்றம்?

ஒளி நிறைந்த அவர் கண்களில் திடீரென கண்ணீர் நிறைந்தது. புன்சிரிப்பு தவழ்ந்த முகம் கறுத்துச் சிறுத்தது: ''விரும்பாத நிகழ்ச்சிகள் கொண்ட சிறு கதை அது......'' இனிமை தோய்ந்த அவர் குரல் வெடித்து விரக்தி படர்ந்திருந்தது.

''தயவு செய்து அதை சொல்ல முடியுமா......?''

''வேண்டாம் நண்பரே! என்னைப்பற்றி நீங்கள் உயர்வாக கருதிக்கொண்டிருக்கிறீர்கள்......''

''எப்போதும் உயர்வாகத்தான் மதிப்பேன்''

''இப்போது இப்படித்தான் சொல்வீர்கள். கேட்டவுடன் பைத்தியக்காரன். வாழத் தெரியாதவன்......'' என்று எல்லோரையும் போல்தான் நீங்களும் சொல்வீர்கள்'' அவர் குரல் கம்மிற்று.

''நிச்சயமாக அப்படியில்லை......நான்......''

''நீங்கள் எப்படியும் எண்ணிக்கொள்ளுங்கள். உங்களிடம் சொல்வதில் எனக்கு எந்தவிதமான நஷ்டமுமில்லை.'' என்னை மேலே பேசவிடாமல் அவர் பேசினார். கம்மி இருந்த குரலை சரிப்படுத்த லேசாக இருமுறை இருமினார் நானும் இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

★

நான் இப்போது சொல்வது என் பள்ளி வாழ்க்கையின் ஒரு முக்கியமான கட்டத்தை மட்டும் இங்கு கூறித்தான் ஆகவேண்டும் நானும் சங்கரும் உயிருக்குயிராய் பழகிய நட்புதான் அது சங்கரைப் பற்றி கூறாவிடில், இக்கதையை ஆரம்பிக்கவே வழி இல்லை

சங்கர்—ஏழை குமாஸ்தாவின் மகன். தான் கஷ்டப்பட்டாலும் தன் குமாரனாவது சுமாராக வாழ்வதற்குப் போதிய அறிவை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவனைப் பள்ளிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார் அவன் தகப்பனார். அந்த சிறு சம்பளத்தில் அவர் குடும்பம் நடத்தியதே பெரிய ஆச்சரியம்தான்.

குடும்பம் என்றால் குஞ்சும் குளுவான்களுமானதல்ல; சங்கர், சங்கரின் தங்கை, மற்றும் அவன் தாய் தந்தையர் அடங்கியதுதான் அக்குடும்பம். நான்கு ஜீவன்களை சிரமதசையில் வாழ்ந்ததென்றால் குமாஸ்தாவின் சம்பளத்தை கணக்குப் பண்ண வேண்டுமா?

எங்கள் குடும்பமும் பணக்காரக் குடும்பமல்ல பெரிதுமல்ல. நான் என் தாய்தந்தையர்: இதுதான் குடும்பம். இல்லை என்று சொல்லாமல் நல்ல ஸ்திதியில் வாழ்ந்துகொண்டிருந்தோம்.

பள்ளி நாட்களிலே எனக்கும் சங்கருக்கும் ஏற்பட்ட நட்பு நாளாக ஆக வளர்ந்து விரிந்தது. ஏழைமைக்கும் நட்புக்கும் சம்பந்தமில்லை என்ற உண்மைக்கு வித்தாய் வளர்ந்தது எங்கள் பள்ளி வாழ்க்கையின் பின்புகூட அது பிரிய முடியாதபடி வளர்ந்திருந்தது.

காலம், என் பெற்றோரையும் சங்கரின் பெற்றோரையும் அடித்துப் போட்டுவிட்டு உருண்டுகொண்டே ஓடிக்கொண்டிருந்தது. நான் யாருமற்றவனாய் அநாதியாகிவிட்டேன். எனது என்று உரிமை பாராட்டிக்கொள்ள ஒரு வீடு மட்டும் இருந்தது. சங்கரோ அவன் தங்கையைக் காப்பாற்றும் பொறுப்பில் உலகில் உழன்றுகொண்டிருந்தான்.

எனக்கு அந்த நாட்களிலே காந்தி மகானின் கொள்கையில் அசைக்க முடியாத பிடிப்பு இருந்தது—இன்றும் இருக்கிறது காந்திஜியின் இல்லறத்தைப்பற்றிய கொள்கைகளையும் சமூகத்தைப்பற்றிய கொள்கைகளையும் நன்கு படித்துப் புரிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டுமென்று விரும்பினேன். ''வாலிபர்கள் கூடியவரை மண நாளை 30 ஆண்டுகள்வரையில் ஒத்திப்போடுவது நல்லது. கூடுமானால் மணம் செய்துகொள்ளாமலே மக்களுக்கு தொண்டு செய்ய வருவது மிக மிக நல்லது'' காந்திஜியின் இக்கொள்கை மட்டும என் உள்ளத்தில் ஆழமாய் பதிந்திருந்தது. ''கூடுமானால் மணம் செய்துகொள்ளாமலே மக்களுக்கு தொண்டு செய்ய வருவது மிக மிக நல்லது'' இதைத்தான் நான் என் வாழ்வில் காரியத்தில் செய்து காட்ட வேண்டுமென்று முயன்றுகொண்டிருந்தேன்.

ஒருநாள் என் நண்பனிடமிருந்து திடீரென அழைப்பு வந்தது. நானும் சென்றேன்.

வாழ்வில் நாம் விரும்பாத நிகழ்ச்சிகள் எவ்வளவு சீக்கிரம் இடம்பெற்றுவிடுகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் என்பது என் கருத்து.

எனக்கு அழைப்பு அனுப்பிய நண்பன் மகிழ்ச்சியின் எல்லைக்கோட்டிலே, உற்சாகத்தின் விளிம்பிலே இருந்தல்ல அழைப்பு அனுப்பியது. அவன் மரணப் படுக்கையில் எனக்கு அழைப்பு அனுப்பி இருந்தான்.

நண்பனை முதலில் கண்டதும் என் உறுதியான உள்ளம்கூட வெடித்ததைப் போன்ற பிரமை ஏற்பட்டது. நல்ல நிலையிலே இருந்தவன் திடீரென இந்த எதிர்பாராத நிலை எப்படி ஏற்பட்டது?

என் சிந்தனை ஓயும்வரை அவன் உயிர் நிலைக்காது என அவன் எண்ணினான். ''சுந்தர்......'' அவன் குரலில் பிரிவின் துயரம் நிறைந்திருந்தது.

''பயப்படாதே சங்கர்......உனக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது'' அவன் உயிர் என் கையில் இருப்பதைப்போன்று அவனுக்கு ஆறுதல் கூறினேன்.

அவன் ஏளனமாகச் சிரித்தான் ''சுந்தர் உன்னை எதற்காக அழைத்தேன் தெரியுமா...? சாகப்போகும் எனக்கு ஆறுதல் கூற அல்ல. வாழ இருக்கும் என் தங்கைக்கு ஒரு வழி வகுக்க, அவள் துன்பப் படுகுழியில் விழாது ஒரு பற்றுக்கொம்பை உடனடியாகக் கொடுக்க'' அவன் சுருதி மேலே ஏறி மூச்சுவிடுவதற்காக கனைத்தது

''சங்கர். இதெல்லாம் நீ சொல்லி நான் செய்யக்கூடியதா எனக்குத் தெரியாதா சங்கர். எதற்காக வீணாக அலட்டிக்கொள்கிறாய்?''

''சுந்தர் என் இறுதி மூச்சு ஓயு முன்பே அவள் மணத்தைக் காணத் துடித்தேன். இதுவரையில் பணமற்ற காரணத்தால் தடையேற்பட்டது சுந்தர்......எனக்கு இறுதி ஆசை ஒன்றுதான். பணமில்லாமல் இந்த உலகத்தில் என் தங்கை இனி வாழ முடியாது. அவளை ஏற்று வாழ்வளிப்பதன் மூலம் என் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்வாயா..?'' மரணத்தின் இறுதி மூச்சிலே அவன் முணுமுணுத்தான்;

அவன் வார்த்தை என் காலடியில் ஹைட்ரஜன் குண்டு போட்டதுபோலிருந்தது எட்டியின் தூளை தேனில் குழைத்துக் கொடுப்பதுபோலிருந்தது அவன் பேச்சு.

''சங்கர்...இவ்வளவு நாள் பழகியுமா என்னை நீ அறிந்துகொள்ளவில்லை. நான் அண்ணல் காந்திஜியின் கொள்கையை நிலைநிறுத்த முயற்சிக்கிறேன் எனத் தெரிந்துமா இந்தக் கடுமையான சோதனையில் என்னை ஈடுபடுத்த விரும்புகிறாய்...'' உணர்ச்சியில் என் தொண்டை அடைத்தது.

''சுந்தர் உன்னையும் உன் கொள்கையையும் நானறிவேன். நான் சாகப்போகும் நேரத்தில் விடுக்கும் இந்த வேண்டுகோளுக்குக்கூடவா உன் கொள்கை வளைந்து கொடுக்காது...''

''சமய சந்தர்ப்பத்திற்கு வளைந்து கொடுத்து மாறுவது நிலையான, நியாயமான கொள்கையாகாது. சங்கர் ஒரு கொள்கையில் உறுதியான பற்று உள்ளவனை மாற்றுவதன்மூலம்தான் உன் ஆன்மா சாந்தியடைய முடியும் என நீ நம்புகிறாயா சங்கர்...'' என் கண்களில் நீர் தேங்கி இமைகளுக்கு இடையில் அலையாடிக்கொண்டிருந்தது.

''சுந்தர்......என் இறுதி ஆசையைக்கூட நீ பூர்த்தி செய்யமாட்டாயா...நீயும் ஒரு நண்பனா...சாவின் இறுதியிலே கெஞ்சுகிறேன். என் தங்கைக்கு வாழ்வு கொடு என்று...'' அவன் குரல் அடைத்துத் தடைபட்டது;

''சங்கர் ஆத்திரப்படாதே. உன் இறுதி மூச்சு தேய்ந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் நீ சிந்தனை செய்யாமல் பேசுகிறாய். வாழப்போகும் நானும் அப்படிப் பேச முடியுமா...? நான் உன் தங்கையை காப்பாற்றுகிறேன். மனைவியாக ஏற்றுக்கொண்டல்ல—என்னைவிட சிறந்த ஒருவனுக்கு மனைவியாக்குவதன்மூலம்......''

நான் பேசிக்கொண்டே இருந்திருப்பேன். அதற்குள் சங்கரின் விழிகள் சுழல ஆரம்பித்துவிட்டன. சுற்றிலும் இருந்தவர்கள் ''கோ''வென கதறினர். அவன் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்வதாக என்னை ஒத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினர். நானோ ஒன்றுக்கும் இசையாமல் அசையாது அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

''சுந்தர்..'' அவன் நாக்கு குழறியது. பரிதாபமுடன் என்னைப் பார்த்துக்கொண்டே கேட்டான்; ''இப்போதாவது சரி என்று சொல்லு. என்னை நிம்மதியுடன் சாகவிடு...''

''யாருக்காகவும் என் கொள்கையை மாற்றிக்கொள்வதை நான் விரும்பவில்லை...'' நான் ஆத்திரத்துடன் முகத்தை திருப்பிக்கொண்டேன்.

''நீயும் ஒரு நண்பனா......நட்பின் தன்மை அறிந்த

(12-ம் பக்கம் பார்க்க)

அகஸ்தியர்
பொன்னாங்காணி
தைலம்

வைத்திய முறைப்படி குணம், மணம் தவறாது பக்குவமாகத் தயாரிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்

தேகச் சூடு, உட்சூடு, மேகச் சூடு, கை கால் சோர்வு, அசதி, தூக்கமின்மை, மண்டைக்கரப்பான், தலைபொடிப்பு, ஒரு தலையிடி, தலைநோய்கள், கண் எரிவு, கண்கூலை, காமாலை, கண்பீழை, கண்ணில் நீர் வடிதல், கண்சிவப்பு, காதுகுத்து, காதுவலி, காதில் சீழ்வடிதல், வாததோஷம், மூலரோகம், மலச்சிக்கல், சொறி, சிரங்கு, சிறுநீர் வெப்பம், ஈளை, இருமல், பீனிசம் முதலிய ரோகங்களைக் குணப்படுத்தி, தலைமயிர் உதிர்தலைத் தடுத்து கறுத்து வளரச் செய்யும். நல்ல தேக சுகத்தையும் கண்பார்வையையும் தரும்.

கால் போத்தல் 1க்கு ரூ. 3-25.
V. P. P. செலவு சதம் 50.

ஏக விநியோகஸ்தர்கள்:
கஸ்தூரிபா ஸ்டோர்ஸ்,
43, மாளிகாகந்தை ரோடு, மருதானை, கொழும்பு—10
தந்தி: ''Agasthiar''.

தமிழ் உரிமைப் போராட்ட நிதி

தமிழ் மொழி, தமிழ் பேசும் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசம் ஆகிய எல்லாம் அழிந்தொழியுமோ என்னும்படி அபாயகரமான தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றன. முதற்கண், உயிரினும் மேலான தாய்மொழியை—தமிழ் மொழியை—பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மொழி அழிந்தால் இனம் அழியும்; இனம் அழிந்தால் ஈழத் தமிழகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

மொழிப் போராட்டம், இனப் போராட்டம், நிலப் போராட்டம் யாவையும் நடத்தி வெற்றி காண வேண்டிய தவிர்க்க முடியாத கடமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றைத்தான் சார்ந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சியொன்றுதான் இந்த அபாயத்தை ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்து, அன்றுமுதல் இன்றுவரை நிலையான கொள்கையோடு குலையாத உறுதியோடு தமிழ் உரிமைக்காக போராடி வருகிறது.

1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தோம். கட்சியின் கொள்கைகளை தமிழ்ப் பேசும் மக்களாகிய உங்கள் திருமுன் படைத்தோம். அக்கொள்கைகளின்மீது 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். எங்கள் கொள்கைகளை அப்போது தமிழ்ப் பொதுமக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் எங்களைத் தோற்கடித்தீர்கள். ஆயினும் நாங்கள் தளரவில்லை காரணம் எங்கள் நோக்கம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. தமிழ் மொழியைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது. எனவே எங்கள் கொள்கைகள் என்றுவது வெற்றி காணும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் தமிழ்ப் பணியை ஆற்றி வந்தோம்.

இன்று நாங்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளையே மாற்றாரும் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தோடு ஒட்டியிருந்தவர்களும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு வேறு வழி இல்லை என்ற உண்மை புலனாகிவிட்டது.

இந்த நிலையில் எங்கள் போராட்டத்தை மேலும் மும்முரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய ஊழியர்களும், உழைப்பாளிகளும் இருக்கிறார்கள். திட்டமும் கொள்கையும் இருக்கின்றன. திறமையும் உறுதியும் இருக்கின்றன. வேண்டியிருப்பது நிதி ஒன்றுதான்.

வேண்டிய நிதியைத் தமிழ்ப் பேசும் மக்களாகிய நீங்கள்தான் தந்து தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது சத்தியாக்கிரக அடிப்படையில் பலவிதமான போராட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு நிதி தேவை.

பெப்ரவரி 20ந் திகதி தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு சாத்வீக ஹர்த்தாலை நடத்த வேண்டும். தமிழுக்கு சமஉரிமை கோருவது சில அரசியல் தலைவர்களுடைய பித்தலாட்டமே தவிர அது தமிழ்ப்பேசும்பொதுமக்களின் ஏகோபித்தகோரிக்கையல்ல என்று சிங்கள அரசியல்வாதிகள் சொல்லிவருகிறார்கள். சமஅந்தஸ்துகோரிக்கை தமிழ்பேசும்மக்களின் ஒருமுகமான கோரிக்கைதான் என்பதை நிலைநாட்ட ஹர்த்தால்போன்ற ஆர்ப்பாட்டங்கள் அவசியம். ஹர்த்தாலை நடத்துவதற்கும் நிதி வேண்டியிருக்கிறது.

பொதுத் தேர்தல் எதிர்நோக்கி வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதா மாள்வதா என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பலப் பரீட்சையாக இந்தப் பொதுத் தேர்தல் அமையப் போகிறது. தேர்தலுக்கு முன்பு மக்களிடையே போதிய பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கும் நிதி தேவை.

எனவே தமிழ்ப் பேசும் பொதுமக்கள் தங்களால் இயன்ற நிதியுதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்; நிதியுதவி அளிப்பவர்கள் தங்கள் பெயர்களைப் பகிரங்கப்படுத்த விரும்பாவிட்டால் அவை இரகசியமாக வைக்கப்படும். நிதி அனுப்புபவர்கள் யாவருக்கும் பற்றுச் சீட்டுகள் அனுப்பப்படும்.

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்"

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

கௌரவ பொருளாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
16, அல்பிரட் ஹவுஸ் கார்டன்,
கொழும்பு — 3.

இங்ஙனம்,

கு. வன்னியசிங்கம்,
தலைவர், இ. த. அ. கட்சி.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்
பொதுச் செயலாளர்,
இ. த. அ. கட்சி;

20—1—56;

Advt.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளு...துரோ.. கி...'' கத்திக்கொண்டே என்னைப் பிடிக்க வேகமாக எழுந்த சங்கர் அதே வேகத்தில் படுக்கையில் விழுந்தான். பின்...அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை.

ஊரில் எல்லோரும் என்னைத் திட்டினர் கல்நெஞ்சன், சசடன், இரக்கமற்றவன், இரும்புநெஞ்சுக்காரன் இன்னும் என்னென்னவோ? அகராதியைப் புரட்டிக் கொண்டு புதிய வார்த்தைகளை தேடிக் கண்டுபிடித்து திட்டினர் நான் அவற்றையெல்லாம் சட்டை பண்ணவில்லை. அந்த சங்கடமான நேரத்திலும் கொள்கையினைக் காக்கும் மனோதிடம் இருந்ததற்காக இப்போதும் நானே வியந்துகொள்கிறேன்.

காலம் கடுகிச் சென்று என்னை திணற வைத்தது. நண்பனுக்கு இறுதி மூச்சில் கொடுத்த வாக்குறுதியை ஈடேற்ற முயன்றேன்—முயன்றுகொண்டே இருந்தேன். நண்பன் விரும்பியதை பூர்த்தி செய்ய மறுத்து நான் கொடுத்த வாக்கையும் ஈடேற்ற முடியாவிட்டால் உலகம் என்னை எப்படி நினைக்கும்?

உலகம் எப்படியாவது ஒழியட்டும். என் மனச்சாட்சியே என்னை அரித்துக் கரைத்தது

எப்படியும் விசாலாட்சிக்கு மண முடித்துவிட வேண்டுமென்று என் சக்திக்கும் மீறி முயன்றேன். 'முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்' என் விசயத்தில் மட்டும் என் உள்ளத்தை வருத்திக்கொண்டு காரியத்தில் கைகூடாது முயற்சி மெலிந்துகொண்டே இருந்தது.

எப்படியாவது கஷ்டப்பட்டு பெண்பார்க்க வேற்றூரிலிருந்து மாப்பிள்ளையைப் பிடித்து வருவன். மாப்பிள்ளைக்குப் பெண் பிடித்துவிடும். மாப்பிள்ளையின் வீட்டாரும் மனம் ஒப்புவர். ஆனால்......

ஊர் சும்மா இருந்ததா...? நாறிக்கிடக்கும் சேறில் ஊறிய புழுக் கூட்டம்தானே மக்கள். இல்லாததை எல்லாம் இட்டுக் கட்டும் பிரபல நாவலாசிரியரும் திடுக்கிடும் சம்பவங்களை கற்பனையில் உற்பத்தி பண்ணி வெளியில் உலாவ விடும். அவ்வளவுதான் வந்தவர்கள் சொல்லாமல் கிளம்பிவிடுவார்கள்.

முதலில் நான் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. என்னைப் போன்று உறுதி உண்மை படைத்தவர்கள் உலகில் இருப்பார்களென்று எண்ணினேன். ஆனால்...உலகம் ஊறவெடுத்து உடல் முழுதும் பரவும் குஷ்டம்தான் என்பதை பிற்பாடுதான் உணர்ந்தேன்.

"நானும் விசாவும் பருவம் வந்தவர்களாம். பருவம் வந்தவர்கள் ஒரே வீட்டில் பல மாதங்களாக இருந்துகொண்டிருக்கும்போது கவர்ச்சியோ உணர்ச்சியோ ஏற்படாது இருக்குமா?''—ஊர் சந்தேகித்தது இப்படி.

நானும் விசாவும் பருவம் வந்தவர்கள்தான். மறுக்கவில்லை பருவம் வந்தவர்களானால் உணர்ச்சியை அடக்க முடியாதா, கவர்ச்சிக்கு அடிமையாகாமலிருக்க முடியாதா? முடியாதென்றால், ஊர் முழுதும், உலக முழுதும், விபசாரக்கூடங்களாக, காமக் களியாட்டங்களுக்கு உட்பட்ட விடுதிகளாகத்தானே இருக்க வேண்டும் இருக்க முடியும்?

ஊரிடம் உலகத்திடம் இதை யார் கேட்பது? நான் கேட்கலாம். என்னைக் கண்டால்தான் எல்லோரும் 'மொட்டைப் பாப்பாத்தி' என்றெண்ணி 'கோசாப் பெண்களை'ப்போல் முக்காடிட்டு மறைந்துகொள்கின்

"தத்துவ வாழ்வு"

காலமென்ற வண்டிச் சக்கரத்திலிருந்து வருடம் என்ற கடையாணி ஒன்று சுழன்று விழுந்தது. 'விசா'வின் விவாகம் மட்டும் நடக்காமலே இருந்தது.

ஒருநாள் தெருவில் சென்றுகொண்டிருந்தேன் ஊர்ப் பெரியவர்கள் என்று கருதப்படும் நாலு பேர் ஒரு திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் என்னைக் கண்டதும் அழைத்தனர். நானும் போனேன்.

அந்த வேண்டாத பேச்சை வளர்த்திச் செல்ல விரும்பவில்லை குறைத்துக் கத்தரித்து சாரத்தை மட்டும் உங்களிடம் கூறுகிறேன்

''பருவப் பெண்ணை வீட்டில் அதிகநாள் வைத்திருக்கக்கூடாதாம். வெளியாட்கள் அவளை மணந்துகொள்ளவும் முன்வரமாட்டார்களாம். அதனால் நானே அவளை இன்னும் ஒரு மாதத்திற்குள் மணந்துகொள்ள வேண்டுமாம். இல்லாவிடில்...''

அதற்குமேல் நான் அங்கு நிற்கவில்லை. நடந்துகொண்டிருந்தேன். என்னுள் ஓயாத சிந்தனைகள் உருவெடுத்து விரிந்தன.

பருவப் பெண்ணை வீட்டில் அதிகநாள் வைத்துக்கொள்ளக்கூடாதுதான். நானு அவளுடைய மணத்துக்குத் தடையாக நின்றேன். ஊர் உறுமிற்று. ஊர் தடுத்தது. ஆனால் ஊரே என்மீது பழி சுமத்திப் பாய்ந்தது அழுகிற குழந்தையை கிள்ளிவிட்டு மீண்டும் அழுவதற்காக அடிக்கவும் செய்தால்...

என்னைத் தவிர வேறு யாரும் அவளை மணந்துகொள்ள ஊர் ஒவ்வாதாம்! நான் இருக்கும் வரைதானே ஊர் என்னை மிரட்ட முடியும். நான் ஒழிந்துவிட்டால் ....என் சிந்தனையின் தடம் புரண்டது.

நான் அங்கே இருக்கும் வரை அவள் வாழ்வு மலராது. நானும் மணம்செய்து கொள்ளமாட்டேன் ஊரும் அவளை மற்றவருடன் வாழ விடாது

என்னுடைய குறிக்கோள் அவள் வாழவேண்டும், அவள் வாழவேண்டுமானால் நான் ஓடவேண்டும்...........

நான் இருக்கும் வரை அவள் வாழ முடியாது என்றால் நான் பிரிந்தபின் அவள் வாழ்வதே என் வாக்குறுதி நிறைவேறியதுபோல் தானே!

நான் நடந்தேன். கால் போன வழியிலே பாதை தெரிந்த இடங்களிலே நடந்து களைத்து இங்கு வந்து சேர்ந்தேன்.

★

நீண்ட பெருமூச்சுடன் அவர் கதை நின்றது. அவர் கண்களிலிருந்து கண்ணீர் பாதை வகுத்துக் கொண்டிருந்தது. என் காய்ந்த உதடுகள் ஒரு வரண்ட சிரிப்பை நெளிய விட்டன.

''இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்...................''

அவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்களிலிருந்து வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியே எழுந்து வந்தார்.

''இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்...............'' மறுபடியும் கேட்டுக் கொண்டே அவர் பின் எழுந்து வெளியே வந்தேன்;

அவர் லேசாக சிரித்துக் கொண்டே அமைதியுடன் ஒரு பக்கம் தன் கையை நீட்டி சுட்டிக் காட்டினார் அங்கே ஒரு சிறு கிராமம் தெரிந்தது.

''கிராமம்'' என்றேன்.

''ஆம்; அந்த கிராமத்திலுள்ள மக்களுக்குத்தான் நான் அறிவூட்டி வருகிறேன்; பகலில் குழந்தைகளுக்கு கல்வி கற்றுத் தருகிறேன்; இரவில் முதியோர்க் கல்வி; சுத்தத்தின் அவசியத்தை அறிவுறுத்துகிறேன் பேதங்களும் பிளவுகளும் ஏற்பட்ட விதத்தை விளக்குகிறேன்...''

நான் குறுக்கிட்டேன்; ''நீங்கள் கிராமத்திலேயே வசிக்கலாமே.........! எதற்காக இங்கு தனிமையில் வசிக்க வேண்டும்...........''

அவர் லேசாக சிரித்தார்; ''இவ்வளவு நாள் பயின்றும் என்னால் எண்ணத்தை அடக்க முடிகிறதே ஒழிய இச்சையை அடக்க முடியவில்லை. அழகைக் காணும் போது இனந்தெரியாத ஆசை ஏற்படுகிறது. ஆசை ஏற்படுத்தும் வெறியில் தவறிவிடாதிருக்கத்தான் ஓய்வு நேரங்களை தனிமையாக இங்கே கழிக்கிறேன்''

அவர் வார்த்தைகளில் தத்துவ உறுதிக்குப் பதிலாக வாழ்வின் விரக்தி தொனித்தது.

''பின் இச்சையை ஏன் பலவந்தமாக அடக்குகிறீர்கள்?''

''மக்கள் சேவைக்கு; காந்திமகான் காட்டிய பாதையில் பணிபுரிய''

''உங்கள் சேவை யாருக்கு வேண்டிக் கிடக்கிறது. அந்த கிராம மக்களுக்கு நீங்கள் காந்தீய அறிவு போதிக்கிறீர்கள். அவர்களும் உங்களைப்போல் மாறிவிட்டால்? வாழ்வு ஒழிந்துவிடாதா?''

காந்திஜீயின் அந்த சீடர் திகைத்தார் பற்றையறுத்த அவர் மனிதப் பண்பை அறுக்க முடியாது திணறுவது போல் காணப்பட்டார்.

''விசாவைப்பற்றி அதன் பின் ஒன்றும் உங்களுக்குத் தெரியாதா?'' என்றேன்,

'தெரியாது'

''மரணப் படுக்கையில் உங்கள் நண்பனுக்களித்த வாக்குறுதியை நிறைவேற்றினீர்களா?''

''இல்லை'' மனச்சாட்சியால் சித்திரவதை செய்யப்பட்டதுபோல அவர் குரல் சிதைந்து வெளிவந்தது.

''வாக்குறுதியில் தவறிவிட்ட நீங்கள் எப்படி நல்ல காந்தீய சீடராக இருக்க முடியும்? உங்கள் தத்துவம் வாழ்வில் தோற்றுவிட்டது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?''

அவர் தலை அசைந்தது; ஆனால் ''ராமா......! ரா......மா.........! ரா......மா......!'' என்று அவர் உதடு லேசாக முணுமுணுத்துக் கொண்டிருந்தது அவ்வளவுதான் அவருக்கு செய்ய முடிந்ததெல்லாம்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அந்த ஒற்றையடிப் பாதையின் வழியே நான் நடந்து கொண்டிருந்தேன்; அந்தப் பாதை அவரிடமிருந்து என்னைப் பிரித்து என் வீட்டிற்கு, மக்கள் மத்திக்கு அழைத்துச் சென்றது! ஆனால் அதே ஒற்றையடிப் பாதை அவரை, அந்த உத்தமரை வாழ்விலிருந்து பிரித்து எங்கோ அர்த்தமற்ற தத்துவக் காட்டிலே அடைத்து விட்டிருந்தது.

கிழக்கு ஆபிரிக்கா நாட்டில் காந்திசிலை

கிழக்கு ஆபிரிக்காவில் கென்னியாதேசத்தில் காந்தி நினைவு நிலயம் ஆரம்பிக்கப்படும். அங்கு பொருளாதாரம் ஆகியவைகள் பற்றி அங்கு மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கப்படும். இந்த நிலையத்தை ஜூலை 12ந் திகதி இந்திய உதவி ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைப்பார்.

காந்தியின் முழு உருவச் சிலை ஒன்றும் திறந்து வைக்கப்படும். 10 ந் தேதி ராதாகிருஷ்ணன் கென்யா தேசத்துக்கு போய்ச் சேருவார்;

தமிழாசிரியர் சங்க அங்கீகாரம்

"தமிழாசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், எதிர்காலத்திற்காகவும் பல போராட்டங்களை நடத்தவேண்டிய இன்றைய நிலையில் நம் ஸ்தாபனம் ஒரு தொழிற்சங்கமாக அங்கீகாரமாகியிருப்பது எமது போராட்டத்திற்கு உறுதுணையளிப்பதாகும்" என்று அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. கே. செல்வத்துரை மேற்படி சங்கம் தொழிற் சங்கமாக பதிவு செய்யப்பட்டதைக் குறித்து நமது நிருபரிடம் கூறுகையில் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம் இந்த நாட்டிலுள்ள 6000க்கு மேற்பட்ட தமிழாசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஸ்தாபனம்.

தமிழாசிரியர்களின் நலன்களுக்காக தமிழாசிரியர் சங்கம் கடந்த காலத்தில் பல கிளர்ச்சிகளை நடத்தியுள்ளது ஆனால் அதை ஒரு சங்கமாக அங்கீகரியாது அதன் கோரிக்கைகளை எல்லாம் அரசாங்கம் புறக்கணித்து வந்தது. இதை எதிர்த்து தமிழாசிரியர்கள் தங்கள் ஸ்தாபனம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கோரிவந்தார்கள். இன்று அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தை ஒரு தொழிற் சங்கமாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது எதிர்காலத்தில் தமிழாசிரியர்களின் போராட்டங்கள் வெற்றியுறும் என்பதற்கான நம்பிக்கையளிப்பதாக ஆசிரியர் வட்டாரங்கள் கருதுகின்றன.

திருகோணமலையில்..,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்லை என்ற முடிவுக்கு அநேக பெற்றோர்கள் வந்ததாகத் தெரிகிறது. இதன் காரணமாக அரசினரால் ஒழுங்கு செய்யப்பட்டவிழா ரத்துசெய்யப்பட்டது. மதமாற்றம் அடைந்தவர்கள் (சிங்களவர்கள்) மட்டும் தாங்கள் தனிமையாக விழா கொண்டாடப் போவதாகவும், அதில் காவடி ஆட்டம், மேளவாத்தியம் முதலியன உண்டென்றும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தனர். ஆனால் மேளம் அடிப்பவர்கள் யாரும் இதில் கலந்து கொள்ள முன்வராததால் அதுவும் தடைபட்டது ஊர்வலம்கூட எதவித கூச்சலும் எழுப்பாமல் — மௌனமாக வாடிய முகத்துடன் முற்ற வெளிக்குப் போன காட்சி பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது: தம்பி வீட்டோ பிணக்கோலம் பூண்டிருக்கும்போது அண்ணன் வீட்டு மணவிழா மகிழ்ச்சி தரக்கூடியதாகவா யிருக்கும்? அந்த விழாவில் வழக்கமாக பொங்கி வழியும் புன்னகையும் பொலிவும் காணப்படவில்லை. காரணம் கறுப்புக் கொடி கண்டு மருண்டு விட்டதேயாகும். இந்த பகிஷ்கரிப்பு தினத்தில் ஒரு சில தமிழர்கள் தங்கள் இல்லங்களை கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்காமல், தங்களை யார் என்று பொது மக்களுக்கு காட்டிவிட்டார்கள். இது நல்ல அறிகுறி— மிக நல்ல அறிகுறி — யார் யார் என்பதை அறிந்து கொள்வதற்கு. இவர்களின் பட்டியல் பொதுமக்களின் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது பெப்ரவரி 4ந் திகதி தமிழ்ப் பேசும் மக்களின் துக்க தினம் மட்டுமல்ல, தமிழ்ப் பேசும் மக்களிடையே உள்ள விபீஷணர்கள் யார் என்பதையும் காட்டிக் கொடுக்க வாய்ப்பளித்த ஒரு முக்கிய நாளும் ஆகும்.

'தமிழ் எங்கள் உயிர்' நிதி

மலாயா சர்வகலாசாலையில் தமிழ்த்துறையும் தமிழ் வாசிகசாலையும் அமைப்பதற்காக சிங்கப்பூரில் உள்ள 'தமிழ் முரசு' என்னும் தினப்பத்திரிகை "தமிழ் எங்கள் உயிர்" என்று ஒரு நிதியை ஆரம்பித்ததை நேயர்கள் அறிவார்கள்.

இந்நிதிக்கு இலங்கையில் உள்ள தமிழ் மக்களும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சுதந்திரன் கேட்டிருந்தது.

கொழும்பு, போபலே ஸ்ட்ரீட்டிலுள்ள திரு கே. தம்பிராஜா என்னும் தமிழ் இளைஞர் சுதந்திரன் கோரிக்கைப்படி தமது நண்பர்களிடம் தம்மால் இயன்ற அளவு பணம் திரட்டி மொத்தம் ரூபா 300-00 க்கு வங்கி டிராபட் பெற்று அனுப்பி வைத்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். பணம் 31-1-56 ல் அனுப்பப்பட்டது.

மரணத்தின் வாயிலில்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைக்கு எங்கே முடிகிறது.

நான் சிந்திக்கவில்லை. மனதில் உணர்ச்சியில்லை. கண்கள் வற்றிவரண்டு விட்டன. சித்தப்பிரமை பிடித்து விட்டதோ?

காலதேவன் மனிதனுடைய தேவைகளுக்காகக் காத்து நிற்பதில்லை நாட்கள் வேகமாகச் சென்றன. ஓய்வுறக்கமின்றி மீனாவைத் தேடி நான் அலைந்தேன். எனக்கு ஓர் வீடு இருப்பதே நினைவின்றி நான் அலைந்தேன் சுலோவைப் பற்றிய எண்ணமே மனதில் இல்லை. அலைந்தேன். ஆனால் மீனா எங்கேதான் போய் விட்டாள்?

கடந்த இரண்டுமாதங்களில் எவ்வளவோ சம்பவங்கள் நடந்து விட்டன. ராமமூர்த்திநிர்மலாவைமணந்து கொண்டாள். சேகருக்கு மரணத்தண்டனை விதிக்கப்பட்டு இன்னும் பத்தேநாட்களில் தூக்கிவிடுவார்கள். அன்று வீட்டிற்கு வந்த போது சுலோவைக் காண என்னுடைய மேசை மீது என் விலாசமிட்ட ஓர் கடிதம் இருந்தது. பிரித்துப் பார்த்தேன். சுலோதான் எழுதியிருந்தாள்.

ஏழையின் நேர்மை

(14ம் பக்கத் தொடர்ச்சி)

"நான் வண்ணார்பண்ணைக்குப் போகவேண்டும்" என்றார் அந்தப் பெரியவர். "சரிசாமி. ஏறுங்கோ" என்று கூறினான் முருகன். பெரியவர் ரிக்ஷாவில் ஏறினார். முருகன் அந்தத்தொந்தியை இழுக்கத்தொடங்கினான். அனல் தகிக்கும் வெய்யிலில், ஒரு தொந்திமனிதனை இன்னொரு மனிதன் மாடுபோல் இழுத்துச் சென்றது மிகவும் பரிதாபகரமாக இருந்தது

அந்தப் பணக்காரப் பெரியவரின் வீடு வண்ணார்பண்ணைச்சந்திக்கருகாமையில் இருந்தது ஒர் பெரிய வீட்டுக்குமுன் வந்தது ரிக்ஷாவை நிறுத்தும்படி கட்டளையிட்டார் பெரியவர் பின் வண்டியிலிருந்து இறங்கி, முருகனிடம் இருபத்தைந்து சதம் கொடுத்தார். முருகன், அவர் கொடுத்தபணம். காணுதென்று பலமுறை கெஞ்சியும், மன்றுடியும், பணக்காரக் கொழுப்புப்பிடித்த அந்தப் பெரியவரின் மனம் இழகினால் தானே? முருகன் திரும்பிச் செற்றுவிட்டான்.

நாட்கள் உருண்டோடின. இது நடந்து சுமார் 10 தினங்கள் கழிந்துவிட்டன. அன்று முருகன் தனது தொழில் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவன் மிகவும் களைத்துப்போயிருந்தான். முருகன் சென்று கொண்டிருக்கும் சமயம் காலில் ஏதோ தட்டுப்பட்டது அதைக்கையில் எடுத்து லைற்வெளிச்சத்தில் பார்த்தான், அது ஒரு மணிபர்ஸ்! அதைக் கண்டதும் அவனது மனத்துள் சில நிமிடம் போராட்டம் நடந்தது. ஆனால் மறுகணம் நேர்மை வெறிகொண்டது. அந்த மணிபர்ஸில் கண்ட விலாசப்படி மணிபர்ஸை கொண்டு சென்று கொடுக்க முருகன் விரும்பினான். அவ்வாறே அதில் காணப்பட்ட விலாசப்படி மணிபர்ஸுடன் சென்றான்: என்ன ஆச்சரியம்! அவன் 10 தினங்களுக்குமுன் வந்த வீட்டிற்கே வந்து சேர்ந்தான். அவன் முன்பு தனது ரிக்ஷாவில் ஏற்றிவந்த பெரியவர் மனச் சோர்வுடன் சோபாவில் படுத்திருப்பதைக்கண்டான்.

முருகன், தான் மணிபர்ஸைக்கண்டது முதல் அதை அங்கு கொண்டுவந்ததுவரை கூறிவிட்டு, "சாமி இக்கோருங்கள் உங்கள் மணிபர்ஸ்" என்று கொடுத்தான். பெரியவருக்குச் சந்தோஷம். மணிபர்ஸை வாங்கி பணத்தை எண்ணிப்பார்த்தார். 500 ரூபாவும் அப்படியே இருந்தது. முருகனின் நேர்மையை எண்ணிஎண்ணி மெச்சினார் வியந்தார். சில தினங்களுக்குமுன் தான் அவனுக்கு, 25 சதம் அதிகமாகக் கொடுக்க மறுத்ததை எண்ணி வெட்கினார். அவர் முருகனிடம், "முருகா, சில தினங்களுக்கு முன் உனக்கு 25 சதம் தர மறுத்தேன் ஆனால் நீ எனக்கு 500 ரூபா காப்பாற்றித் தந்தாய்! அதற்காக இந்தா 50 ரூபா" என்று ஒரு 50 ரூபாவை முருகனிடம் கொடுத்தார் முருகன் மகிழ்ச்சியால் நாக்குழற அதைப் பெற்றுக் கொண்டு வீடு நோக்கிச் சென்றான்.

எல்பின்ஸ்டன் றெக்ஸி
காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
கே. ஆர். ராமசாமி, ஆர். கணேசன், குசேலகுமாரி, ராஜசுலோசனா நடித்த
"நீதிபதி"

செல்லமஹால்
காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9 30
ரேஹனா - அஜீத் நடித்த
"சாம்ராட்" (தமிழ்)

கெயிட்டி
மகத்தான 14-வது வாரம்!
பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
"குலேபகாவலி"

ரீகல்
காலை 10-15, பிற்பகல் 3-30, மாலை 6-30, இரவு 9-30
றண்டால்ப் ஸ்காட் நடிக்கும்
தேவைப்படும் பத்து மனிதர்கள்
(TEN WANTED MEN)
(டெகனிக் கலரில்)

விரைவில் வருகிறது !
அவாரா நடிகர்களின் பிரமிக்கத்தக்க புதிய சாதனை !
ஆர். கே. பிலிம்ஸாரின்
"ஸ்ரீ 420"
நடிகர்கள்: ராஜ்கபூர் - நர்கிஸ் - நாதிரா.
இப்பொழுது பம்பாயில் 18 வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!!

வெற்றிகரமான 5-வது வாரம்!
பணமே வாழ்வின் ஆரம்பமும் அந்தமுமல்ல. அது சமூக சக்திகளுக்கிடையில் நடத்தும் போராட்டம். காதல் அந்த சமூகப் போராட்டத்தில் ஒரு அம்சம். இதைச் சித்தரிக்கின்றது
"கோடீஸ்வரன்"
நடிகர்கள்:
சிவாஜி கணேசன், பதமினி, ராகினி, தங்கவேலு.

சென்ட்ரல் கொழும்பு | சென்ட்ரல் பருத்தித்துறை
தினசரி பிற்பகல் 6, இரவு 9-30, இன்று காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்
சென்ட்ரல் நாவலப்பிட்டி | ஸ்டார் பதுளை
தினசரி மாலை 6-30, இரவு 9-30, இன்று காலை 10, பிற்பகல் 2-30, மாலை 6 30, இரவு 9-30 மணிக்கும்
கேதுமதி மஹரகம
தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

இதுவரை திரையிடப்பட்ட படங்களில் மிகவும் சிறந்த சித்திரம்
போகம்பரை (கண்டி) தினசரி பிற்பகல் 6, இரவு 9-30, காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30மணிக்கும்
"மங்கையர் திலகம்"
நடிகர்கள்: சிவாஜிகணேசன், எம். என். ராஜம், பத்மினி, தங்கவேலு.

நீங்களும் கேட்கலாம்!

மாணவர்களாகிய உங்களுக்கு எத்தனையோ விஷயங்களுக்கு விடை தெரியாமலிருக்கலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'சுதந்திரன்' மாமாவினால் இப்பகுதியில் விடையளிக்கப்படும். ஆனால் கேள்விகள் பெயர் விலாசத்துடன் போஸ்ட் கார்ட்டில் மட்டும் எழுதப்பட வேண்டும். 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம், C/o சுதந்திரன், தபால் பெட்டி இல: 1183, கொழும்பு—12 என்ற விலாசத்திற்கு கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டும்.

செ. கணபதிப்பிள்ளை,
கல்லடி உப்போடை

கேள்வி: தமிழிலிருந்து சிங்களம் வந்ததா? அல்லது சிங்களத்திலிருந்து தமிழ் வந்ததா?

ப: இரண்டுமில்லையே!

இ. சிவாநந்தன்,
நாவலப்பிட்டி

கேள்வி: சினிமா மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்கின்றதா?

பதில்: சில இடங்களில் மட்டும். ஆனால் நமது தமிழ் சினிமாவில் அதுகூட இல்லையென்றுதான் சொல்லலாம்.

கு. செகராஜசிங்கம்,
சித்தங்கேணி

கேள்வி: மகாயுத்தங்கள் தோன்றியும். இன்றும் இங்கிலாந்தில் முடியாட்சி நிலவுவதன் காரணம் என்ன?

பதில்: அது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சம்பிரதாய அமைப்பு என்பதால்தான்.

எஸ். செபரத்தினம்,
பெரிய கல்லாறு

கேள்வி: இந்தோனேஷியா—?

பதில்: ஜாவா, சுமாத்ரா, பாலி முதலிய தீவுகளை இந்தோனேஷியா என்று அழைக்கிறார்கள்.

மூ. மு. தேவராஜா, சுதுமலை

கேள்வி: உருவ வழிபாடு எத்துறையில் நன்மைபயக்க முடியும்?

பதில்: உருவமில்லையேல் அருவமில்லை. அருவ வடிவமான கடவுளை உருவ வடிவில்கண்டு அறிவில்லாதவர்கள் வணங்கலாமல்லவா?

தொழிலாளி......

இரவு பகல் என்று பாராது, நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த படாதபாடு பட்டு, தனது சாண் வயிற்றுக்கஞ்சிக்காக பிச்சை எடுக்காதபடி தனக்குவேண்டியவற்றைத்தானே தேடிக்கொள்ளும் தொழிலாளி.... காலையில் குழியில் இறங்கி மாலை கண்டு எழுந்து வீடு செல்கிறான் ஓர் தொழிலாளி...... 'ஆடையில்லாதவன் அரைமனிதன்' என்ற குறையை நீக்கி முழுமனிதனாக மானத்தோடுவாழ வழி வகுக்கிறான் மற்றோர் தொழிலாளி.........சங்கின் ஒலிகேட்டுச்சென்று இயந்திரத்தோடு இயந்திரமாக, சற்று அசதியால், கண்ணயர்வால், கவனக்குறைவால் கையோ காலோ போய்விட்டாலும் கவனிப்பாரற்ற நிலையிலே வீடு திரும்புகிறான் வேறோர் தொழிலாளி......... காடோ மேடோ என்று பாராது உடலைக்கலப்பையாக்கி உழைப்பைஎருதாகப்பூட்டி, நெற்றிவியர்வை நீராகப் பாய்ச்சி இறுதியில் பயனை அடைகின்ற நேரத்திலே 'நிலம் என்னுடையது ஆகவே பலன் எனக்குச் சேரவேண்டியது' என்று கூறிவரும் முதலாளி வர்க்கத்திற்குப் பலனைப் பறிகொடுத்து விட்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் அப்பாவி உழவனும் ஓர் தொழிலாளிதான்......! வீட்டிலே நாளுக்கொரு உணவாகக் கஞ்சியைக்குடித்துவிட்டு காட்டை வெட்டித் திருத்திக் களனிகட்டிப் பயிர்செய்து சிறிதுபலனடைகிறான் தொழிலாளி......மற்றவனுக்காக, வானளாவ நிற்கும்பாறைகளைப் பிளந்து வானைநோக்கும் மாடி வீடுகளை அமைத்துக் கொடுத்துவிட்டு அதனால் வரும் கூலியினால் வீதியிலே சிறு குடிசை கட்டி வாழும் மேசனும் ஓர் தொழிலாளி....... இன்னும் சந்ததியாக உழைத்து, உருக்குலைந்து தொல்லைகள் தாங்கித் துவண்டுபோய், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி தன்னைப் படைத்த பரமசிவன் மேற் பழியைச் சுமத்திவிட்டு அலைந்து திரிபவனையும் ஓர் தொழிலாளி என்றே கூறவேண்டும். அல்லவா.........?

வி. கணேசமூர்த்தி,

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

அன்பான மருமக்களே!

சென்ற வாரத்துடன் முடிவடைந்த ''அணுவும் ஆற்றலும்'' என்ற விஞ்ஞானக் கட்டுரையைப் பல மருமக்கள் பயனுள்ளது எனப் பாராட்டியிருக்கின்றனர்.

விஷயங்களை 'வளர்பதி' க்கு அனுப்பவேண்டுமென்று எத்தனையோ மருமக்கள் விரும்புகின்றார்களல்லவா? அவர்களுக்கு ஒரு வார்த்தை 'வளர்மதி'யில் விஷயங்கள் வெளியிடப்படுவதற்கு அவை அழகாகவும் நல்ல கருத்துடனும் எழுதப்படவேண்டும். மேலும் காகிதத்தின் ஒரே பக்கத்திலும் எழுதவேண்டுமென்பதையும் படித்துப் படித்துக் கூறவேண்டுமா என்ன?

உலகத்தின் உயர்வுக்கே உதவுபவர்கள் தொழிலாளர்கள்தான் மட்டக்களப்பிலிருந்து வீ. கணேசமூர்த்தி என்னும் மருமகன் தொழிலாளர்களைப்பற்றி நல்லதொரு கட்டுரையை எழுதியிருக்கிறார். 'வளர்மதி' என் ஓய்வைப் பயன்படுத்தவும் அறிவை வளர்க்கவும் உதவுகிறது என்றும் அவர் எழுதுகிறார்.

அ. சிவசுந்தரம், வே. வரதன், செல்வி எஸ். புவனேஸ்வரி, சி. த. ராஜா, யூ. எல். எம். ஹனிபா, ஏ. இக்பால், ரி. எம். சித்திக், க. முத்துலிங்கம், க. ஜோர்ஜ், வீ. கணேசமூர்த்தி, த. மகேந்திரன், சி. நஜரேயன், அ. கைலாயலிங்கம், மு. மு. தேவராஜா, மீ. சே. காதர், ஜி. ஜெயராமன், எம். எம். ஜமால்தீன், செல்வி செல்வமலர் மூத்துதம்பி, எம். எம். அக்பர் ஆகிய மருமக்கள் இவ்வாரம் ''வளர்மதி''க்கு விஷயங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா

முன் எழு

தசையைப் புருவுக்குத் தண்ணளியாய்
தானே இட்ட தமிழ ரினம்
தமிழின் தாழ்மை நிலை கண்டு
தானே ஏனோ எழவில்லை

வீரத்தாயார் வழி வந்த
வீரம் மிகுந்த தமிழரினம்
வீணர் வீழ்த்தும் நிலை கண்டு
வீறு ஏனோ கொள்ள வில்லை

முல்லைக்குத் தேரை அன்பாக
முடுக்கி வைத்த தமிழரினம்
முடங்கும் தமிழின் சீர்கண்டு
முன்னுக்கு ஏனோ எழவில்லை

கருங்கடலில் கடுமையாக
கரை சேர நீந்திய தமிழரினம்
காளிகள் பேச்சைக் காதிற் கேட்கும்
கடமை ஏனோ கொள்ளவில்லை

—பி. கே. செல்லையா

தெரிந்து கொள்ளுங்கள்

[என். பி. கே.]

★ மின்சாரம் ஒரு விநாடிக்கு 283000 மைல் ஓடுகின்றது.

★ பூமி சூரியனிடமிருந்து ஆயிர லட்ச மைல்களுக்கு சற்றே குறைவான தூரத்தில் இருக்கின்றது. சூரியனிலிருந்து பூமிக்கு மணிக்கு 60 மைல் விதம்வரச் சுமார் 180 வருடங்கள் செல்லும்.

★ பூமியின் குறுக்களவு 8000 மைல். துருவங்கள் சிறிது தட்டையானவை. பூமி ஒரு நாளில் தன்னைத் தானே சுற்றி வருகின்றது. இதன் சுழல் வேகம் ஒரு நிமிடத்திற்கு 17 மைல்களாகும். ஒரு நிமிடத்துக்கு 1000 மைல் வேகத்தில் பூமி சூரியனைச் சுற்றுகின்றது.

★ உலகிலே மிக நீளமான பாலம் அமெரிக்காவிலுள்ள செண்ட் லோறன்ஸ் பாலமாகும். இதன் நீளம் 9144 அடி.

★ சந்திர மண்டலத்தின் குறுக்களவு சுமார் 2,159 மைல்களாகும். சந்திர மண்டலம் முழுவதும் மலைகளும், பள்ளத்தாக்குகளுமாகவே காணப்படுகின்றது.

★ முதன் முதல் உலகில் விமான பயணம் 1914ம் ஆண்டு தொடங்கியது அது அதே ஆண்டிலேயே நின்று விட்டது ஓர் இயங்குபொறி Single Engine) யைக் கொண்ட டீமர விமானம்தான் சென்றது.

★ முதன் முதல் கடிகாரம் உலகில் 1477ல் நியூரெம்பேர்க் என்னும் நகரில செய்யப்பட்டது.

★ முதன் முதல் தபால் அலுவலகம் 1516ல் வியன்னாவுக்கும் பிரான்சுக்குமாக ஏற்படுத்தப்பட்டது.

★ 'ஜெட் பஸ்''—மணிக்கு 1800 மைல் வீதம் பறக்கக் கூடியதாக பிரிட்டிஷ் ஐரோப்பிய ஏர்வேஸ் கம்பெனி ஒன்றை தயாரிக்கின்றது.

★ அதிக வல்லமைமிக்க வெடி எது தெரியுமா? அதை 'ப்ளாஸ்டிங் ஜெலடீன்'' (Blasting Gelatine) என்று அழைப்பர்.

மாமா பதில்

வீ. கணேசமூர்த்தி,
கல்லடி—உப்போடை

உமது கேள்விகள் எனக்கு மிக வருத்தத்தையே கொடுத்துள்ளன. அவை எல்லாம் ஏன்? ''தொழிலாளி'' நல்லவன்— வெளியிடுவேன்.

செல்வி கு. பத்மாவதி, மண்டூர்

விஷயங்களை அழகாக எழுதியிருக்கிறீரே? நாட்டுக் கவிகளைப்பற்றி எழுதி அனுப்பினால்—?

எம். எம். அக்பர், மூதூர்

''சூரியோதயம்'' எத்தனை அழகாக இருக்கிறது அக்பர்! மாமாவின் பாராட்டுதல்கள்.

செல்வி செல்வமலர்,
மூத்துத்தம்பி, இளவாலை

''தமிழன் கடமை'' மிகவும் பெரியது ஒரே பக்கத்தில் எழுதினால் ஒரு வேளை வெளியிடலாம். நல்ல முயற்சிதான்.

க. பொன்னம்பலம்,
யாழ்ப்பாணம்

பீர் அலியின் தீரச்செயலை உமது கட்டுரையிற் காண முடிகிறது. காகிதத்தின் ஒரே பக்கத்தில்தானே எழுதவேண்டும்!

மு. மு. தேவராஜா,
மானிப்பாய்

கட்டுரையைத் திருப்பி அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறேன். கடவுள் நல்லவர் தேவராஜ்!

சி. நசரேயன்,

''வளர்மதி''யை வாழ்த்தும் உமது கவிதை நன்று.

க. முத்துலிங்கம்,
தெல்லிப்பளை

''வளர்மதி''க்கு இன்னுமொரு பக்கம் கூட்டுவது இப்போது சாத்தியமில்லையே.........! எல்லோரும் ''சிந்தித்துப் பார்''க்கவேண்டியதுதான்!

ஏ. இக்பால், அக்கரைப்பற்று

விபுலாநந்த அடிகளைப்பற்றிய உமது கவிதை மிகவும் நல்லது. உமது ஊரில் கூட ஒரு விபுலாநந்த மணிமண்டபம் உண்டு இல்லையா இக்பால்?

செல்வி எஸ். புவனேஸ்வரி,
சுன்னாகம்

''மானிலம் போற்றும் மகாத்மா'' மகத்தானவர்; நல்ல கட்டுரை, அருமையான கருத்துக்கள். ஆனால் மிகவும் நீண்டுவிட்டதே...... விஷயங்களை இரண்டு பக்கங்களுக்குள் எழுதுவது நல்லதுதான்!

அடுத்தவாரம்: ''வளர்மதி''யில்

பல மருமக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க, அடுத்தவார ''வளர்மதி''யில் ஓர் பூர்த்திக்கதைப் போட்டிக்கான விபரங்களை மாமா வெளியிட இருக்கிறேன். மருமக்களுக்கு இந்தச் செய்தி மகிழ்ச்சியைத்தருமென்பதில் சந்தேகமில்லையல்லவா?

—சுதந்திரன் மாமா

ஏழையின் நேர்மை

(கோவைச் சிவன்)

முருகன் ஓர் ஏழை. உண்ண உணவின்றி, உடுக்க ஓர் துண்டின்றி, உலகிலே வாழும் ஏழை மக்களில் அவனும் ஒருவன். அன்றாடக் கஞ்சிக்கு வழியற்றவன். முருகன் ரிக்ஷா இழுத்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு தனது காலத்தைக்கழித்து வந்தான். மற்றைய தொழிலாளர்களைப்போல், அவன் குடிப்பதோ வெறிப்பதோ கிடையாது. அன்றாடக்கஞ்சிக்கு வழியில்லாத முருகன் குடித்து வெறித்து தீய வழிகளில் செல்லப் பணத்திற்கு எங்கே போவான்? எனவே, ஏழ்மைநிலை, முருகனை நல்லவனாக்கிவிட்டிருந்தது. அத்துடன் முருகன் நேர்மை நெறி தவறாதவனாகவும் இருந்தான். முருகனுக்கு சுப்பன் என்றொரு மகன் இருந்தான்.

வழக்கம் போல் அன்றும் முருகன் தனது ரிக்ஷாவையும் கொண்டு, ஆஸ்பத்திரி வாசலில் நின்று கொண்டிருந்தான். ''ஏய் ரிக்ஷா'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தான் முருகன். சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரது மடிப்பு விழுந்ததொந்தியும், கண்ணிலே போட்டிருந்த கண்ணாடியும் அவரை ஒரு பணக்காரன் என்று காட்டின. ''என்ன சாமி, எங்கே போகணும்?'' என்று கேட்டான் முருகன்.

(13ம் பக்கம் பார்க்க)

'வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும் மனுப்பத்திரங்கள்தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலங்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இல 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சி பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல: 3

பெயர்...வயது.............

பாடசாலை..

விலாசம்..

....

....
பெற்றோர் அல்லது ஆசிரியர்
கையொப்பம்

....
கையொப்பம்

கழகச் செய்திகள்:

சித்திரையில் நடைபெறும் திருமுறைப் போட்டி

வளர்ந்தோரும் பங்குபற்ற வசதி

கொழும்பு விவேகானந்த சபையார் நடாத்தும் திருமுறைப்போட்டி இவ்வருடம் சித்திரை மாதம் நடைபெறவிருக்கிறது. இவ்வருடம் இளைஞர்கள் மட்டுமன்றி வளர்ந்தோரும் பங்குபற்றக்கூடியதாய்ப் போட்டியை மூன்று பிரிவுகளாக நடாத்துகிறார்கள். கீழ்ப்பிரிவில் 13 வயதிற்குட்பட்டோரும் மத்திய பிரிவில் 19 வயதிற்குட்பட்டோரும் கலந்துகொள்ளலாம். மேற்பிரிவில் கலந்துகொள்வோருக்கு வயதுக் கட்டுப்பாடில்லை. மேற்பிரிவில் முதலிடம் பெறுவோருக்கு தம்புரா ஒன்றும் ஏனைய பிரிவுகளில் முதலிடம் பெறுவோர்களுக்கு சுருதிப் பெட்டியும் பரிசில்களாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் 15-3-56க்கு முன் அனுப்பப்படல் வேண்டுமென மேற்படி சபைப் பரீட்சா காரியதரிசி அறிவிக்கிறார்.

துறை நீலாவணை இ. த. அ. க. பவாலி முன்னணி

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி துறை நீலாவணை கிளையின் கூட்டம் சமீபத்தில் துறை நீலாவணை மிஷன் பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் திரு க. சுந்தரம் தலைமையில் கூடிற்று. மன்றச் செயலாளர் திரு கே. கந்தையா சென்ற கூட்ட வரலாறை வாசித்தளித்தார். மன்ற இணைச் செயலாளர் திரு கா. சிவரெட்ணம் எம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு நேரப்போகும் ஆபத்தையிட்டு சபையோருக்கு அழகாக எடுத்துக் காட்டினார். பின் சபையோர் குறிப்புரையில் உபதலைவர் திரு த. கந்தையா, இணைப்பொருளாளர் திரு சா. கார்த்திகேசு, திருக்குறளார் திரு காத்தமுத்து. கௌ. பொ. திரு நா. தம்பியப்பா, திரு நா. இராசசிங்கம் ஆகியோரும் பங்குபற்றிப் பேசினர்.

அரசடி சனசமூக நிலையம்

சங்கானை மேற்கு அரசடி சனசமூக நிலையத்தின் ஆதரவில் மேற்படி நிலைய முன்றலில் பொங்கல் விழா திரு கா. சின்னத்துரை தலைமையில் கொண்டாடப்பட்டது.

அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர் திரு கா. வேல்முருகன் பேசுகையில் ''பல்வேறு கருத்துக் கொண்ட தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒருமித்து உழைத்தால்தான் தமிழ் மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும்'' என்று கூறினார்.

முற்போக்கு வாலிப வாசக சங்கம்

முற்போக்கு வாலிப வாசக சங்கத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டமும் பொங்கல் விழாவும் பொங்கல் திருநாளன்று திரு ஜோன் சாமிதாசன் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் தி. பட்டமுத்து, ஜோசப், செ. டெனியல் சங்கத் தலைவர் ஜ. ஜெயசீலன், தங்கசிவம், வேலையா ஆகியோர் பொங்கல் விழா பற்றி பேசினார்கள்.

வண்ணார்பண்ணை சனசமூக நிலையம்

வண்ணார்பண்ணை வடகிழக்கு சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 21-1-56ல் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்டவர்கள் நிலைய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு எஸ். எஸ்: நவரட்ணம் (யாழ்ப்பாணம் மாநகர சபைத் தலைவர்) தலைவர்: திரு ஆ. கனகரட்ணம், உபதலைவர்கள்: திரு சி. கணபதிப்பிள்ளை, திரு ஆ. முத்துக்குமாரசாமி, காரியதரிசி: செல்வன் மு. யோகேந்திரல், உபகாரியதரிசி: செல்வன் த. தில்லைராஜா, இணைத்தனாதிகாரிகள்: திரு என். சின்னப்பா, செல்வன் த. பாலச்சந்திரன், நூல் நிலைய நிர்வாகஸ்தர்கள்: செல்வன் து விக்னராஜா, கணக்குப் பரிசோதகர்: திரு பி. தம்பு. மற்றும் 9 பேர்களைக் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அண்ணாமன்ற செயற்குழு கூட்டம்

அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் செயற் குழு கூட்டம் கடந்த 29-1-56ல் மன்ற பணிமனையில் தலைவர் திரு. வை. மு. அழகேசன் தலைமையில் நடைபெற்றது.

''சமீபத்தில் தமிழகத்திலும் — ஈழத்திலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டும் பணியில் சென்ற இரண்டு தினங்களாக அயராது உழைத்த மன்ற உறுப்பினர்களைப் பாராட்டுகிறேன். இம்முயற்சியில் நிதி உதவியளித்த பொது மக்களுக்கும் மன்றம் நன்றியறிதலை தெரிவிப்பதோடு, வசூலிக்கப்பட்ட ரூபாய் 206-50 சதம் கொண்ட பண முடிப்பை எம் அழைப்பேற்று வந்திருக்கும் இ. தி. மு. க. புயல் நிவாரண நிதிச் செயலாளர் திரு எஸ். கே. சுந்தரராசன் அவர்களிடம் ஒப்படைக்கின்றேன்'' என தலைவர் முகவுரையில் குறிப்பிட்டார்.

நிவாரண நிதிச் செயலாளர் திரு எஸ். கே. சுந்தரராசன் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நிதிக்கு நன்றி தெரிவித்தும் மன்ற உறுப்பினர்களைப் பாராட்டியும் மன்றம் ஆற்றும் பணி நற்பணி எனக் குறிப்பிட்டார்.

அதன்பின் தோழர்களான எம். உமர், கே. கே. தமிழ்நாதன், வி. மாதவன், எம். சின்னையா, எஸ். நடராசா, டி. வி. நடராசன், எஸ். எஸ். சுப்பையா, தி. பரமசிவன், எம். குணசேகரன், வெ. வெள்ளச்சாமி ஆகியோர் பேசிய பின் செயலாளர் எம். எஸ். குமார் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

கிரிலப்பனை தமிழ்ச்சங்கம்

கிரிலப்பனை கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையின் பழைய மாணவரது பெரும் முயற்சியால் சென்ற 29-1-56ல் இப்பாடசாலையினிடத்து மேற்படி கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பெற்றது. இச்சங்கத்தின் தலைவராக திரு ச. வைத்தியலிங்கம் தெரிவு செய்யப்பெற்றார். திரு எஸ். சந்திரகாசன் உபதலைவராகவும் திரு எம். ஆர். சுப்ரமணியம் காரியதரிசியாகவும், திரு எஸ் ஜி. சேவியர் தனாதிகாரியாகவும் நியமனம் பெற்றனர். மேலும் திருவாளர்கள் து. ஸ்ரீ பத்மநாதன் எம். சண்முகம், எஸ். சாருகாசன், சி. நாகவித்திரன் மரியவிசுவாசம் இவர்கள் நிர்வாக குழுவினராக தெரிவு செய்யப்பட்டனர்.

விவேகானந்த வித்தியலய மாணவர் சங்கம்

கொழும்பு விவேகானந்த வித்தியாலய (மேற்பிரிவு) மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் கடந்த 20-1-56ல் தற்காலிக தலைவர் ஆசிரியர் திரு. வ. நடராசா தலைமையில் ஆரம்பமாயது. பின்வருவோர் சங்க நிருவாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் ஆசிரியர் திரு வ. நடராசா, உபதலைவர்கள் ஆசிரியர்கள் அ நாகராசா, ம. கைலாயபிள்ளை, காரியதரிசி க. நவசோதி, உபகாரியதரிசி த. முத்துசாமி, தனாதிகாரி ச. அசலாம்பிகை, உபதனாதிகாரி வே. பாலகிருஷ்ணன், பத்திராதிபர் வ. தனபாலசிங்கம், உபபத்திராதிபர்: புலோணு புலோமி, வாசிகசாலை அதிபர்: (நூல் நிலையம்) ஆசிரியை விஜயலட்சுமி.

தமிழ் ஒளிக் கழகம்

வாழைச்சேனை சனசமூக நிலைய மண்டபத்தில்சென்ற 14-1-56ல் உழவன் திருநாளை உன்னதமாகக் கொண்டாடப்பட்டது.

''தி. மு. கழகத்தின் கிளைகளில் ஒன்றுதான் தமிழ் ஒளிக் கழகம்', ''தமிழ் மொழி வாழ்க'', ''நாட்டுக்காக உழைக்கும் உழவர்களுக்கு ஜே'' என்ற சுலோகங்களை ஏந்திக் கொண்டு ஏராளமான இளைஞர்கள் ஊர்வலமாக வந்தனர். கழகத்தின் தலைவராக திரு நா. பொன்னையாவும், செயலாளராக திரு இ. அழகரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கிராம முன்னேற்றச் சங்கம்

வாழைச்சேனையைச் சேர்ந்த பேத்தாளை கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த விழா சென்ற 16-1-56ல் பேத்தாளை அரசினர் பாடசாலையில் உபதலைவர் திரு நா. ஆறுமுகம் தலைமையின்கீழ் நடைபெற்றது.

காரியதரிசி சென்ற வருட அறிக்கையை வாசித்தளித்தார். தனாதிகாரி வரவு செலவு கணக்குகளைச் சமர்ப்பித்தார்.

பின் புது வருடத்திற்குரிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு;

தலைவர்: மா. வெள்ளையன், உபதலைவர்: நா. ஆறுமுகம், காரியதரிசி; வ. பத்தினியன், உபகாரியதரிசி வ. செல்லத்துரை, தனாதிகாரி; இ. நாகமுத்து.

ஒன்பது பேர் கொண்ட நிருவாக சபையும், தொண்டர் படையும் தெரியப்பட்டது.

இ. தி. மு. க. இரத்தினபுரி கிளை

இ. தி. மு. க. செயற்குழு தீர்மானப்படியும் சுற்றறிக்கைப்படியும் இரத்தினபுரி பகுதியில் புயல், வெள்ள நிவாரண நிதி சேர்க்கப்பட்டது. இந்நிதி சேர்ப்பில் முறையே கல்கடுவதோட்டம், உரம்புக்சந்தை தோட்டம், நகரப்பகுதி, பாம்காடன்தோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள தோழர்களிடம் நிதி வாங்கி பொதுச் செயலாளர்க்கு அனுப்பப்பட்டது. நிதி அளித்த அன்பர்களுக்கும் நிதிசேர்ப்பில் ஒத்துழைத்த தோழர்கள் ஏ. வேலு, ஆர். எம். சிவனு, பெ. கதிர்வேல், வி. கணேசன், கி. இராசகோபால் ஆகியோர்களுக்கு தன் அன்பார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று இரத்தினபுரி இ. தி. மு. க. கழக [illegible] எழுதுகிறார்.

அரசடி உயர்தர மாணவர் மன்றம்

அரசடி உயர்தர மாணவர் மன்றத்தின் புது வருட முதலாவது கூட்டம் சென்ற 25-1-56ல் மன்றத் தலைவர் திரு வி. கி. இராசதுரை தலைமையில் ஆரம்பமானது. அவ்வமயம் செல்வன் தி. நாகராசா கிராமிய இலக்கியம் என்னும் பொருள்பற்றி ஓர் பேச்சும் செல்வி எம். அமராபதி ஓர் பாட்டும் முறையே பாடப்பட்டது. இதன்பின் புது வருட உத்தியோகஸ்தர் தெரிவில் மீண்டும் திரு வி. கி. இராசதுரை தலைவராகவும், உபதலைவராக திரு க சதாசிவமும், செயலாளராக கு. தம்பிமுத்தும், இணைச் செயலாளராக எம். மயில்வாகனமும் தனாதிகாரியாக செல்வி ரஞ்சிதம் கார்த்திகேசும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கவிமணி இளைஞர் மன்றம்

மேற்படி மன்றத்தின் இவ்வரு— முதலாவது கூட்டம் கடந்த 8-1-56ல் உபதலைவர் ரா. சங்கரன் தலைமையின் கீழ் நடைபெற்றது. செல்வர்கள் அந்தோனி யோசப், ஆனந்த குமாரசாமி, மகாராசன், முத்துராசா ஆகியோர் முறையே ''அரசியலும் மதக் குருக்களும்'' ''புது வருடம்'' ''கம்பன் கவிதை'' 'நம் இலக்கியம்'' என்னும் விடயங்களைப்பற்றி விரிவான சொற்பொழிவுகள் ஆற்றினர்.

மன்றத் தலைவர் மா. சண்முகம் ராஜினாமாச் செய்ததையொட்டி செல்வன் ச. நாகேந்திரன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

செல்வர்கள் அந்தோனி யோசப் முத்துராஜ் ஆகியோர் பத்திராதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சுகாதார அபிவிருத்திச் சங்கம்

உடத்தலவின்னை அரசினர் ஆண் பாடசாலைச் சுகாதார அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 13-1-56ல் அவைத் தலைவர் ஜனாப் கே. எஸ். அலி தலைமையின் கீழ் ஜனாப் கா. ஜெய்னுலாப்தீன் ஓதிய கிறஅத்துடன் ஆரம்பமாயிற்று.

அதன்பின் மேற்படி சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: ஜனாப் பி. ஸி. ஜெய்லாப்தீன்: உபதலைவர்: ஏ. கியாஸ்தீன், காரியதரிசி: ஏ. அஸீஸ், உபகாரியதரிசி: ச. அ. கபூர், பத்திராதிபர்; எம். எம். நபாய்தீன். ஏழு பேர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

சென் போல்ஸ் மக்கள் முன்னேற்றச் சங்கம்

சென் போல்ஸ் மக்கள் முன்னேற்றச் சங்கத்தின் அமைப்புக் கூட்டம் 22-1-56ல் சித்தும்பிட்டித் தெருவிலுள்ள 103/6ம் இலக்க இல்லத்தில் தோழர் எல். தருமதாசன் தலைமையில் கூடிற்று.

அவ்வமயம் கீழ்கண்ட தோழர்கள் நிர்வாகப் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் ஏ. ஜி. ரணசிங்க செயலாளர்: ஜே. சோமசுந்தரம் பொருளாளர்: எஸ். பெருமாள்.

செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எல். தருமதாசன், எஸ். நடராசன், ஆர். மரியதாசன், ஆர். ஜி. தாசன், தி. இளங்கதிர் அ. மரியதாசன், வி. ஆர். கந்தையா, எஸ். சந்திரசேகரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவமுன்னேற்ற மன்றம்

பொங்கல் திருநாளை, முத்தமிழும் அமைய மேற்படி மன்றத்தாரால் தைத்திங்கள் முதலாம் நாள் சரவணை நாகேசுவரி வித்தியாசாலை மண்டபத்தில் திருதி. தில்லைசிவன் தலைமையில் தமிழ்த்தாய் வணக்கத்துடன் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திரு சு. பரநிருபசிங்கம் ''திருநாளும் பயிற்சி செய்கையும்'' என்னும் பொருள் பற்றியும் திரு நா. தப்பிரதினம் ''தமிழர் விழா'' என்னும் பொருள் பற்றியும் திரு புதுமைலோலன் ''பால் பொங்க......'' என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

செல்வி தங்கலெட்சுமி செல்லத்துரை, செல்வி பரமேசுவரி இராசா. இன்னிசை விருந்தளித்தனர் மக்களை மகிழ்வித்தனர்.

அறிவகக் குழுவினர், தோழர் பி. ரி. சம்பந் எழுதிய ''மரணப்பரிசு'' என்னும் நாடகத்தை நன்முறையில் நடாத்தி விழாவைச் சிறப்பித்தனர். மன்றச் செயலாளர் தோழர் அருண் மொழி நன்றிகூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

மேற்படி மன்றத்தின் புதிய உத்தியோகத்தர்கள்; பாதுகாவலர்கள்: திருவாளர்கள் அ. தெய்வேந்திரன், தி. தில்லைச்சிவன், தலைவர்: வி. பொன்னுத்துரை, உபதலைவர்: க. ஐயாத்துரை, செயலாளர்: வை. கேதாரநாதன், துணைச் செயலாளர்: சோ. அருண்மொழி, பொருளாளர்: க. குமாரசாமி.

காந்திஜி சிரார்த்த தினக் கூட்டம்

'தமிழ் வாலிபர் கழக காந்தி நினைவு நாள் பொதுக் கூட்டம் தட்டாரத் தெரு ஒழுங்கையிலுள்ள 'காந்தி இல்லத்தில் தலைவர் திரு ஆர். முத்துவேல் தலைமையில் கூடியது.

''தமிழ்மக்களின் பொறுமையை இவ்வாட்சியாளர் அதிகமாக சோதிக்கத் தொடங்கிவிட்டனர். கட்டுண்டோம்-பொறுத்திருந்தோம் —காலம் மாறும் என்று எண்ணினோம்; ஆனால் இனியும் பொறுத்திருப்பதால் பயனில்லை. தமிழ் மக்கள் திரண்டெழுந்தால் அந்தச் சக்திக்கு முன் எந்தச் சக்தியும் நிற்கமுடியாது என்பதைவிளக்க எல்லாத் தமிழ் மக்களும் ஒற்றுமைப் போராட்டத்தில் குதிக்கத் தயாராய் இருத்தல்வேண்டும்.'' என்று அண்ணல் காந்தியின் திரு உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்த திரு ஆர். முத்துவேல் தன் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் திரு என். குழந்தைசுவாமி, திரு கே. இலட்சுமணன், திரு பி. பாக்கியநாதன் ஆகியோர் காந்தி மகான் பற்றியும், இன்று தமிழ்மக்கள் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

தனியந்துறை தோட்டத்தில் பொங்கல் விழா

பூண்டுலோயா பகுதியைச் சேர்ந்த தனியந்துறை தோட்டத்தில் சென்ற 14-1-56 ல் இலங்கை திராவிட முன்னேற்ற கழக ஆதரவில்செயலாளர் என். செல்லையா, தமிழன்பன், மு. கருணாகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். அன்றிரவு ''சீர்திருத்தம்'' என்ற நாடகமும் நடைபெற்றது.

வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்

இப்பொழுது மகத்தான ஆரம்பம்!

ஏககாலத்தில் 6 திரைகளில்!!

கிங்ஸ்லி	ஸபையர்	வெலிங்டன்
கொழும்பு	கொழும்பு	யாழ்ப்பாணம்
விஜயா	**மொடர்ன்**	**வெலிங்டன்**
மட்டக்களப்பு	பதுளை	திருகோணமலை

வாணிபத்திற்கு வந்த கும்பனியார் வல்லரசாக மாற, சதிசெய்ததை எதிர்த்து தமிழ்நாடு எரிமலையாகக் குமுறி எழுந்த காலம் அது !]

ஆரண்யத்தில் அரசியாக அவள் வாழ்ந்தபோதிலும், அந்தரங்கத்திலே பதி சேவைக்காகத் தவித்து நிற்கிறுள்! கயவர் கூட்டத்தைக் கதிகலங்கச் செய்பவள், கணவன் அன்பிற்குக் கண்கலங்கி நிற்கிறுள் ......ஆனுல்! பரிசுக்கு ஆசைப்பட்டு தன் மருமகளைக் காட்டிக்கொடுக்க முன்வருகிறுன் நயவஞ்சகனுன தருமலிங்கம்.



ஆற்றில் ராணி ரங்கம்மாளின் படகு! அதைச் சுற்றி அரசாங்கத்தாரின் படைகள்! ராணி ரங்கம்மாள் கைது செய்யப்பட்டாளா? கொள்ளைக்காரி என்று தன்னை இகழ்ந்து ஒதுக்கிய கணவனை, கடவுளாக எண்ணி தரிசனம் செய்யச் சென்றுளே; அந்த பாக்யம் அவளுக்குக் கிடைத்ததா? இதயத்தைப் புல்லரிக்கச் செய்யும் இணையற்ற கதையை சித்தரிக்கிறது மகேஸ்வரி.

வீரமும், காதலும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு சிறந்த சரித்திரக் கதை !

கடலோடி வெள்ளையர் தமிழ் நாட்டைச் சூரையாடச் சதிசெய்த காலத்து நிகழ்ந்த அற்புதமான சம்பவங்களை உள்ளடக்கிய சிறந்த தமிழ்ப் பேசும் சித்திரம்!

மாடர்ன் தியேட்டர்ஸாரின்

மகேஸ்வரி

ஜெமினி கணேசன், சாவித்திரி, தங்கவேலு,
எம். என். ராஜம், சி. எஸ். பாண்டியன்,
ஏ. கருணுநிதி முதலியோர் நடித்தது.

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 1[illegible] அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு [illegible] 1956 பெப்ரவரி 12 ந் திகதி பிரசுரம்செய்யப்பட்டது.